CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

சரசுவதி மகால் வெளியீட்டு எண். 344

நௌகா சரித்ரமு



ஸத்குரு ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள்

ालय
राणसी-५

சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

Dr. Urmila Sharma Collection, Varanasi

4.1

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

சரசுவதி மகால் வெளியீட்டு எண். 344

ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் அருளிய

நௌகா சரித்ரமு

(நௌகா சரித்திரம்)

இசை நாட்டிய நாடகம்

பத—பதார்த்தம்—பொழிப்புரை—பாவார்த்தங்களுடன்

பதிப்பாசிரியர்கள் :

என். விசுவநாதன்,
தெலுங்கு பண்டிதர் (ஓய்வு)

என். ஸ்ரீநிவாஸன்,
சம்ஸ்க்ருத பண்டிதர்,
சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

1993] [விலை ரூ. 30—00

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	:	நௌகா சரித்ரமு [நௌகா சரித்திரம்]
பதிப்பாசிரியர்கள்	:	என். விசுவநாதன் என். ஸ்ரீநிவாஸன்
வெளியிடுபவர்	:	இயக்குநர், சரசுவதி மகால்
வெளியீட்டு எண்	:	344
மொழி	:	தெலுங்கு — தமிழ்
பதிப்பு	:	முதல் பதிப்பு
வெளியீட்டு நாள்	:	சனவரி, 1993
தாள்	:	14. 2 கிலோ சேஷசாயி
நூல் அளவு	:	21 x 14 செ.மீ.
பக்கங்கள்	:	230
படிகள்	:	500
எழுத்து	:	12 புள்ளி
அச்சிட்டோர்	:	சரசுவதி மகால் அச்சகம்.
புத்தகக்கட்டு	:	மெலிந்த அட்டை
பொருள்	:	இசை நாட்டிய நாடகம்
விலை	:	ரூ. 30—00

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

வெளியீட்டாளர் முகவுரை

தேசிய ஒருமைப்பாட்டுக்குரியதொரு சின்னமாக விளங்குவது நமது நுண்கலைகள். இமயந் தொடங்கிக் குமரி வரை பல மொழிகளைப் பேசுகின்றவர்களும் பல்வேறு வகைப்பட்ட கலாசாரங் களைக் கொண்டவர்களுமாக இருப்பவர் இந்திய மக்கள். இவர்கள் அனைவருடைய உயிர்நாடியாக இழையோடிக் கொண்டிருப்பவை கலைகளே. இத்தகைய நுண்கலைகளை நாம் பல்வேறு பெயர்களால் அழைக்கின்றோம். அவற்றை அந்தந்த மாநிலங்களில் கையாளுவோர் அந்தந்த மண்ணின் மரபுப்படியே பேணி வருகின்றனர். அத்தகைய மரபிலுதித்த எண்ணற்ற மகான்களும், கலைஞர்களும் தமக்குப் பின்வரும் மரபினருக்காகக் காத்தளித்த மதிப்பு மிக்க சொத்து இது. இத்தகு சிறந்த நுண்கலைகளில் 'இசை' முக்கியமானதொரு இடத்தைப் பெற்று விளங்குகின்றது. இசையால் கவரப்படாத உயிரினம் உண்டா? 'காட்டின்விலங்கறியும் கைக்குழந்தை தானறியும், பாட்டின் சுவையதனைப் பாம்பறியும்' என்று பாடியவர்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

பாரதி. இத்தகு பெருமை படைத்த இசையில் கருநாடக இசைமரபுமொன்று. இது தென்னிந்திய மக்களின் மரபுவழி இசைக்கலை. இத்தகைய இசைப் பாரம்பரியத்தில் தோன்றியவர் சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள். இன்று இவரது பெருமை இந்தியத் துணைக்கண்டம் மட்டுமின்றி உலக நாடுகளிலும் பரவியுள்ளது, எனின் மிகையில்லை.

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இயற்றிய, 'இசை நாட்டிய நூல்'களுள் ஒன்றான 'நௌகா சரித்திரம்' என்னும் நூலை சரசுவதி மகால் நூலகத்தின் வாயிலாக வெளியிடுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன். இந்த 'நௌகா சரித்திரத்தைச்' சிலர் சில ஆண்டுகளுக்கு முன்னரேயே வெளியிட்டிருக்கின்றனர் என்றாலும், இந்த நூல் ஒரு புதுமையான நோக்கில் எளிய தமிழில் வெளி வருகிறது.

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் பாடல்களை இந்த முறையிலும் பதிப்பிக்கலாம் என்று வரும் முதல் முயற்சி என்பதையும் அறிகிறேன். இது தமிழ் கூறும் நல்லுலகத்திற்கும் நாட்டியக் கலைஞர்களுக்கும், இசைவாணர்கள், ஆராய்ச்சியாளர்கள் ஆகிய பல்வேறு வகைப்பட்ட

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

கலைஞர்களுக்கும் இந்த நூல் பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.

இந்த நூலை விளக்கமாக எளிய தமிழ் நடையில் பதிப்பிக்கும் பணி இந்த நூலகத்தின் முன்னாள் தெலுங்கு பண்டிதர் திரு. என். விசுவநாதன் அவர்களிடமும், இந்த நூலக வடமொழிப் பண்டிதர் திரு. என். சீனிவாசன் அவர்களிடமும் ஒப்படைக்கப்பட்டது. இவ்விரு மொழிப் பண்டிதர்களும் தங்கள் பணிகளைச் சிறப்பாகச் செய்துள்ளனர் என்பது இந்த நூலால் தெரிகிறது. இவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

மிகக் குறுகிய காலத்தில் இந்த நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த இந்நூலக அச்சகப் பிரிவினருக்கும், இத்தகு சிறந்த நூலைத் தேர்ந்தெடுத்து வெளியிடுவதற்குரிய அனைத்து பணிகளையும் செய்த இந்நூலக வெளியீட்டு மேலாளரும், நிருவாக அலுவலருமான திரு. அ. பஞ்சநாதன் அவர்களையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் 146-வது ஆராதனைப் பெருவிழாவில் அவருடைய

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

சமாதியின் முன்பு அவர் அருளிய இந்த நூலை வெளியிடுவதில் இந்த நூலகம் பெருமையடைவதுடன் இசைத் தொண்டில் தனது பங்கையும் காணிக்கையாக்குகின்றது. இந்நூலை வெளியிட அனுமதி நல்கிய ஸ்ரீ தியாகபிரும்மம் ஆராதனை விழாக்குழுவினருக்கும், இந்நூல் வெளியிடப் பொருளுதவி நல்கிய நடுவண் அரசுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இசையறிஞர்களுக்கும், நாட்டியக் கலைஞர்களுக்கும், இசை ஆராய்ச்சியாளர்களுக்கும், இசை மாணவர்களுக்கும் இந்த நூல் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன். வழக்கம்போல் வாசகர்கள் இந்த நூலை வாங்கிப் படித்துப் பயன் பெறவேண்டும் என்று விரும்புகின்றேன்.

தஞ்சாவூர்,
2—1—93

தி. சண்முக ராஜேஸ்வரன், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
இயக்குநர் (பொறுப்பு)
சரசுவதி மகால் நூலகம்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

பொருளடக்கம்

பக்கங்கள்

முன்னுரை i—xx

நௌகா சரித்திரத்தின் கதை சுருக்கம் xxi—xxiv

நௌகா சரித்ரமு — (நூல்) 1—175

தருக்கள் மற்றும் விருத்தங்களின் முதற்குறிப்பு அகராதிகள் 177—180

பிழை திருத்தம் 181—182

அனுபந்தம் :
நௌகா நிருபண (மராட்டிய நூல்) i—xvi

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

அட்டைப்பட விளக்கம்

அட்டைப் படத்தில் இடம்பெறறுள்ள ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிக்ளின் ஓவியம்தான், இதுவரை கிடைத்துள்ள ஸ்ரீ தியாகப்ரம்மத்தின் வண்ண ஓவியங்களுள் தொன்மையானதாகும். கி. பி. 1855-ஐ ஒட்டிய காலகட்டத்தில் தீட்டப் பெற்ற இவ்வோவியத்தின் ஒளிப்பட நகல், ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் மரபில் வ்ந்த வக்கீல் உயர்திரு, V. நாராயணசாமி அய்யர் அவர்களால் சரசுவதி மகாலுக்கு மனமுவந்து அளிக்கப்பட்டதாகும்,

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

முன்னுரை

உலகநாடுகளில், வேறு எந்த நாட்டுக்கும் இல்லாத தொரு தனித்தன்மை கொண்டது இந்தியத் திருநாடு. பல்வேறு விதமான கலைகளையும், பண்பாட்டையும் கொண்டு திகழ்கின்றது. இந்நாட்டில் உள்ள கலைகள் அனைத்தையுமே கடவுளாகப் போற்றிப் பாதுகாப்ப துடன், இறைவனையே கலைகளின் காவலனாகவும் அவனிடமிருந்தே அனைத்துக் கலைகளும் தோன்றி யுள்ளன என்றும் நாம் வழிபட்டு வருகிறோம். குறிப்பாக இசையும், நடனமும், நாடகமும் இறைவனுடைய திரு மேனிகளாகக் கொண்டு வழிபடுகிறோம். இறைவ னுடைய திருமேனியையே நாததத்துவமாகவும், அதனு டைய வெளிப்பாட்டின் ஓர் அடையாளத்தையே நடராஜ மூர்த்தமாகவும் நாம் வழிபடுகிறோம். இத்தகைய கலை களைக்கற்று அவற்றை அவனுக்கு அர்ப்பணிப்பதும் நமது பண்பாட்டிலொன்று. எந்தக் கலைகளையும் ஈஸ்வரார்ப்பணமாகச் செய்வதையே பெரும் பேறாகக் கருதிவந்தனர் நமது முன்னோர்கள். அவனால் அளிக்கப் பெற்ற கலையை அவனிடமே அளிக்கவேண்டும் என்ற சிந்தனையை நம் முன்னோர்கள் கொண்டதுடன் தமது வாழ்க்கையிலும் கடைபிடித்தனர் பல மகான்கள்,

மேலும், நாம் அனைத்துத் துன்பங்களையும் மறந்து இறைவனுடன் இரண்டறக் கலக்க இசையே (நாதமே) துணை என்பதைப் பல மகான்களின் வாயிலாகவும் அறிய முடிகிறது. அங்ஙனம் நாதோபாஸனை புரிந்தவர் களில் ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளும் ஒருவர். தமிழகத்தில் 'மும்மூர்த்திகள்' என்று அழைக்கப்படும்

நௌ-௨

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள், . ஸ்ரீஸ்யாமா ஸாஸ்திரிகள், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் என்பவர்கள் மூவருமே தரணி புகழும் தஞ்சை மாவட்டத்தில் திருவாரூர் என்னும் புனிதமான திருத்தலத்தில் தோன்றியவர்கள். மூவருமே நாதோபாஸனை புரிந்து நாதஸ்வரூபிகளாகத் திகழ்கின்றனர்.

சக்ரவர்த்தித் திருமகனான ஸ்ரீராமனையே அநவரதம் துதித்துப் போற்றித் தனது பாமாலைகளால் எம்பெருமானை வணங்கியவர். ஞானக் கண்களால் காணும் இறைவனைத் தனது ஊனக் கண்களால் கண்டவர். இத்தகைய சிறப்பு மிகுந்த ஸத்குரு தியாகராஜரின் முன்னோர்களைப் பற்றியும் அவரது வாழ்க்கை வரலாற்றையும் சுருக்கமாகக் காண்போம்.

தியாகராஜரின் முன்னோர்

தியாகராஜ ஸ்வாமிகளின் முன்னோர்கள் ஆந்திர நாட்டில் உள்ள தெலுங்காணா பகுதியிலிருந்து தஞ்சை மராட்டிய மன்னர்களின் காலத்தில் குடியேறியவர்கள், பரம்பரை பரம்பரையாக இசை நாடகங்களில் பங்கேற்று வந்த பரம பாகவதர்கள். இவரது தாய் வழிப் பாட்டனார் கிரிராஜ கவி. கிரிராஜ கவி என்பவர் இவரது தந்தை வழிப் பாட்டனார் என்றும், வீணை ஸ்ரீ காளஹஸ்தி அய்யர் தாய்வழிப் பாட்டனார் என்றும் வேறு சில நூல்களில் காணப்படுகின்றன. தியாகராஜரின் தாய்வழிப் பாட்டனாரான கிரிராஜகவி அவர்களுக்கு, தஞ்சை மாவட்டம் சாலியமங்கலத்திற்கு அருகில் உள்ள மஹிமாலையில் ஏகோஜி ராஜபுரம் என்ற பெயரில் ஒரு அக்ரஹாரம் அமைத்து அதில் 13 அடிக்கோலால் $\frac{3}{4}$ வேலி நிலம் கொடுத்துள்ளார். இந்தக் குறிப்பிலிருந்தும், இந்தக் குறிப்பைக் கொடுத்த ஸ்வாமிகளின் பரம்பரையினரின்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

குறிப்பின்படியும் கிரிராஜ கவியே தாய்வழிப் பாட்டனார்[1] என்று அறிய முடிகிறது.

கிரிராஜ கவி தஞ்சை மராட்டிய மன்னரான இரண்டாம் சகஜியின் காலத்தில் அரசவைக் கலைஞராக விளங்கியவர். சிருங்கார பதங்களையும் நாடகங்களையும் இயற்றியவர். இதற்குரிய பல சான்றுகள் இந்த நூலகத்திலுள்ளன. மேலும் இவரது தம்பி வேங்கடகிரி என்பவர் அபிநய தர்ப்பணம் என்னும் சமஸ்கிருத நூலைத் தெலுங்கு மொழியில் மொழிபெயர்ப்பாக இயற்றியுள்ளார். இந் நூல் இந்த நூலகத்தில் பாதுகாக்கப்பெற்று வருகின்றது. கிரிராஜ கவி அவர்களும், வேங்கடகிரி அவர்களும் நாட்டியக் கலைகளில் புலமை பெற்றவர்கள்.

தியாகராஜரின் தந்தை ஸ்ரீராமப்ருூம்மமும் சப்ஸ்கிருதத்தில் நல்ல புலமையையும் இசையில் நல்ல ஞானத்தையும் பெற்றவர்.

மன்னன் இரண்டாம் துளஜாவின் காலத்தில் ஸ்ரீராம பிரும்மம் தஞ்சை அரண்மனையில் ஸ்ரீமத் ராமாயணத்தைப் பிரவசனம் செய்தார் என்றும், இதனால் பசுபதி கோவிலில் சிறிது நிலமும் திருவையாற்றில் திருமஞ்சன வீதியில் (ஸ்ரீ தியாக ப்ரும்ம ஸபா உள்ள வீடு) வீடு ஒன்றும் அளித்ததாக அறிய முடிகிறது[2]. இதனால் இவர்களது பரம்பரையினர் தஞ்சை அரண்மனையில் தொடர்பு கொண்டவர்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது. இவரது மனைவியின் பெயர் ஸீதம்மா. ஸீதம்மாவின் பரம்பரையும்

---

1 ஸ்ரீ தியாகபிர்மம் போற்றிய இசை மரபு: குடவாயில் பாலசுப்பிரமணியம். மன்னர் சரபோஜியின் 212ஆவது பிறந்தநாள் விழா மலர் பக்கம்—21.

2 ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் கீர்த்தனைகள் Ed. by T. S. பார்த்தசாரதி—முகவுரை

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

இசைப் பரம்பரை இவர் புரந்தரதாஸர் கிருதிகளையும், பத்ராஜலம் ராமதாஸரின் கிருதிகளையும் மற்றுமுள்ள பாடல்களையும் பாடுவார்களாம். அதனை ஸத்குரு ஸ்ரீ தியாகராஜரும் கேட்டுக் கேட்டு ரஸிப்பாராம். மேலும் பத்ராஜலம் ராமதாஸரின் பாடல்களின் சாயல் தியாகராஜரின் உத்ஸவ சம்பிரதாயக் கீர்த்தனைகளில் காணப்படுவதை உணரலாம்.

ஸ்ரீ தியாகராஜரின் வரலாற்றுச் சுருக்கம்

ஸ்ரீ ராம ப்ரும்மம் ஸீதம்மா தம்பதியருக்கு மூன்று பிள்ளைகள் தோன்றினர். மூத்த பிள்ளைக்கு ஜப்யேசன் என்ற பெயரைச் சூட்டினர். ஜப்யேசன் என்ற பெயர் திருவையாற்று இறைவனின் திருப்பெயர். நடுமகன் ராமநாதன். இவர் சிறுவயதிலேயே இறந்துவிடுகிறார். மூன்றாவது பிள்ளையாக நமது ஸத்குரு ஸ்ரீ தியாகராஜர் திருவாரூரில்[1] தோன்றினார். இவர் தோன்றிய ஆண்டு கி. பி. 1770 என்றும், 1759-ம் ஆண்டு என்றும் பல்வேறு கருத்து வேறுபாடுகள் உண்டு. இவருடைய முக்கிய சீடரான வாலாஜாபேட்டை வேங்கடரமண பாகவதர் அவர்கள் எழுதி வைத்த ஓலைச்சுவடியின் வாயிலாக 5—5—1767-ஆம் ஆண்டு பிறந்தார் என்றும் அறிய முடிகிறது. கலியுகம் 4868 ஸர்வஜித் வருஷம், சித்திரை மாதம், 25-ந் தேதி சுக்ல சப்தமி, பூச நக்ஷத்திரத்தில் பகல் 12 மணிக்குக் கடக லக்னத்தில் தோன்றினார் என்ற குறிப்பு காணப்படுகிறது.[2]

பிறந்த குழந்தைக்கு ஆரூர் தியாகேசனின் பெயரையே சூட்டினார் ஸ்ரீ ராம ப்ரும்மம். ஸ்ரீ தியாகராஜரை ஸம்ஸ்கிருதம் கற்கவைத்துப் புகழ் வாய்ந்த ஸமஸ்கிருதப்

---

1 திருவையாற்றிலேயே தோன்றினார் என்ற கருத்தும் நிலவுகிறது. 2 ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள் கீர்த்தனைகள், Ed. by T. S. பார்த்தசாரதி, முகவுரை.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

புலவனாக ஆக்க வேண்டும் என்று தந்தை விரும்பினார். தன்பிள்ளை தியாகராஜன் புகழ் வாய்ந்த இசைப் புலவனாக விளங்க வேண்டும் என்று தாயார் விரும்பினார். இந்நிலையில் திருவையாற்றில் நாயக்க மன்னர்[1]களின் காலத்தில் தோன்றிய ஸம்ஸ்கிருதக் கல்லூரியில் ஸமஸ்கிருதக் கல்வி பயில வசதியாக இருக்கும் பொருட்டுத் திருவையாற்றில் குடியேறினார் ஸ்ரீ ராம ப்ரும்மம்.

ஸத்குருவின் கல்வி திருவையாறு அரசர் கல்லூரியில் தொடங்கியது.[2] காவியம், நாடகம் அலங்கார சாஸ்திரம், விருத்தரத்நாகரம் போன்றவற்றில் நல்ல புலமை பெற்றார். பள்ளிப் பருவத்திலேயே ஸ்ரீமத் ராமாயணம், மஹாபாரதம் ஸ்ரீமத் பாகவதம் போன்றவற்றில் நல்ல புலமையும பெற்றார். அப்பொழுது சிறிய சிறிய ஸம்ஸ்கிருத ஸாகித்யங்களை இயற்றத் தொடங்கினார். ஸுந்தரதர தேஹம், ஸ்ரீ நாரத நாத போன்ற ஸாகித்யங்களை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். மராட்டிய மன்னர் களின் காலத்தில் குறிப்பாக சஹஜியின் காலத்தில் நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்து இசைப்புலவர்களும், தமிழ், சம்ஸ்கிருதம், தெலுங்கு, மராட்டி ஆகிய மொழிப் புலவர்களும் தஞ்சாவூரில் இருந்தனர். மன்னனும் இவர்களை கௌரவித்து, இவர்கள் வாயிலாக இத் தமிழகத்தில் பல்வேறு கலைகளை வளரச் செய்தான். இம் மன்னரைத் தொடர்ந்து பின்வந்த அரசர்களும் கலை களுக்கும், கலைஞர்களுக்கும் புலவர்களுக்கும் ஆதரவு நல்கி அவர்களைப் போற்றினர்.

இத்தகைய பரம்பரையில் தோன்றி இசைத்துறையில் சிறந்து விளங்கியவர் வித்வான் ஸொண்டி வெங்கட

---

1 கிருதிமணி மாலை—பதிப்பாசிரியர் ஆர். ரங்கராமானுஜ அய்யங்கார், மூன்றாம் பதிப்பு. பக்கம்—xii, 1948.

2 ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் கீர்த்தனைகள், பதிப்பாசிரியர் டி. எஸ். பார்த்தசாரதி. முகவுரை, பக்கம்—10.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

சுப்பையா. இவர் திருப்பூந்துருத்தி ஸத்குரு சிவநாராயண தீர்த்தரின் சீடர்.[1] இவரது மகன் வேங்கடரமணையா என்பவரே ஸத்குருவின் குருநாதர்.

'குலவிச்சை கல்லாமல் பாகம் படும்' என்ற முதுமொழிக்கேற்ப ஸ்வாமிகள் இசை நுட்பங்களை அறிந்தார். இந்நிலையில் இவருக்குத் திருமணமானது. சில நாட்களில் இவரது பெற்றோர்கள் இறைவனுடைய திருவடியைப் பற்றினர். இவரது தமையனாரின் பொறுப்பில் குடும்பம் நிருவாகத்திற்கு வந்தது. இவரது தமையனார் லோகாதய வாழ்க்கையினர். ஆன்மீக நெறியில் ஸ்ரீ தியாகராஜர் ஈடுபட்டுள்ளதை வெறுத்தார். இதனால் மனக்கசப்பு ஏற்பட, தியாகராஜர் தனிக்குடும்பம் நடத்தலானார்.

அதிகாலையிலேயே கங்கையினும் புனிதமான காவிரியில் நீராடித் தனது அனுஷ்டானங்களை முடித்து பாகவத சம்பிரதாயப்படி 'உஞ்சவிருத்தி' செய்யலானார்.[2] தன்னை மறந்து திருவையாற்று வீதிகளில் இறைவன் புகழைப் பாடுவார். இதனால் அப்போழ்து இவரது இசையிலும், சாஹித்யங்களிலும் ஈடுபட்டு, மக்கள் மெய் மறந்து கேட்பார்களாம். நாளடைவில் சிஷ்யர்களும் இவரை வந்து அடைந்தனர். உஞ்ச விருத்திகளிலும் பாடுவார்கள்.

பிற்பகலில் நாரதீயம் — ஸ்வரார்ணவம், சங்கீத ரத்னாகரம், சோமேஸ்வரரின் ராகவிபோதம் போன்ற நூல்களை ஆராய்வார். இரவில் டோலோத்ஸவத்தைச் செய்து துயில்வதை வழக்கமாகக்கொண்டார் ஸ்ரீதியாகராஜர். அப்போது உபநிஷத் ப்ரும்மம் என்று அழைக்

---

1 கிருதிமணி மாலை, முகவுரை, பக்கம்—xiii.

2 "எந்நாள்ளு திரிகேதி — மாளவஸ்ரீ" ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் கீர்த்தனைகள், பக்கம்—145.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

கப்படும் ஸ்ரீராமகிருஷ்ண யதீந்திரரிடம் மந்த்ரோபதேசம் பெற்றார். இவரே இவரது ஆன்மீக 'குருநாதர்[1].

இவர் வழிபட்டு வந்த ராமவிக்ரஹத்தை இவரது தமையனார் காவிரியில் வீச அதனால் ஸ்ரீராமனைக் காணாது பரிதவித்துப் பலகீர்த்தனைகளை உள்ள முருகப் பாடினார். இடம் மாற்றத்தால் மனம் சற்று அமைதியடையும் என்ற சீடர்களின் வேண்டுகோளை ஏற்று வாலாஜாபேட்டை, ஆரணி. திருப்பதி, கோவூர் திருவொற்றியூர், காஞ்சி, ஸ்ரீரங்கம், திருவிடைமருதூர் கோவிந்தபுரம், திருவிசநல்லூர், நாகைப்பட்டினம் போன்ற க்ஷேத்திரங்களைத் தரிசனம்செய்து திருவையாறு வந்தபோது, இறையருளால் ஸ்ரீ ராமனுடைய பட்டாபிஷேகத் திருமேனி மீண்டும் காவிரியிலிருந்து கிடைக்கப் பெற்று மகிழ்ந்தார்.

தனது பிழையை உணர்ந்த ஸ்வாமிகளின் தமையனார் ஜப்யேசன் தன் பிழையை மன்னிக்குமாறு வேண்டினார். ஸ்ரீதியாகராஜரின் புகழ் எங்கும் பரவியது. திருவாங்கூர் சமஸ்தானத்தின் மன்னர் ஸ்வாதித் திருநாள் தனது அவைக்கு அழைத்து ஸ்வாமிகளைக் கௌரவிக்க எண்ணித் தஞ்சையில் புகழ்பெற்று விளங்கிய பொன்னையா பிள்ளையின் சகோதரர் பிடில் திரு. வடிவேலு அவர்களை அனுப்பினார்.[2] 'எந்த மன்னருடைய ஸபைக்கும் நான் வர விரும்பவில்லை' என்று பிடில் வடிவேலு அவர்களிடம் கூறி அனுப்பினார் ஸ்வாமிகள்.

கேரள நாட்டிலிருந்து "கோவிந்தமாரார்" என்னும் மாபெரும் இசை மேதை ஸ்ரீ ஸ்வாமிகளின் புகழைக் கேள்வியுற்று அவரைக் காண ஆவலுடன் திருவையாற்றுக்கு வந்தார். இவர் "ஆறு காலத்தில்" பல்லவி ஸ்வரம் பாட

---

1 இந்நூல் குருவணக்கம் பக்கம்—3.

2 கிருதிமணிமாலை பக்கம்—xxiv.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

வல்லவர். இவரைச் சந்தித்ததில் ஸ்வாமிகளுக்கும் மட்டற்ற மகிழ்ச்சி, ஒருநாள் இரவு பஜனோத்ஸவத்தில் கலந்து கொண்ட கோவிந்தமாரார் அவர்கள் நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீராகம் ஆகிய ஐந்து இராகங்களையும் விஸ்தாரமாகப் பாடி ஸ்வாமிகளே தேர்ந்தெடுத்துக் கொடுத்த பல்லவியில் ஆறுகாலங்களில் பல்லவி ஸ்வரம் பாடினாராம். இரவு 11 மணிக்குப் பாடத்தொடங்கியவர் அதிகாலை 6 மணிவரை "ஆறு காலங்களில்" அநாயாஸமாகப் பாடினாராம். மிகவும் மகிழ்ச்சியடைந்த ஸ்வாமிகள் அக்கால இசை மரபின்படி திரு மாரார் அவர்களின் தம்புராவில் பட்டு நூல் கட்டி மரியாதை செய்தார் என்று கூறப்படுகிறது.

திரு. மாரார் பாடிய நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீராகம் ஆகிய ஐந்து ராகங்களையும் அடிப்படையாகக் கொண்டே 'பஞ்சரத்ன கீர்த்தனைகளை' ஸ்வாமிகள் இயற்றியுள்ளார். 'ஸ்ரீராக' கீர்த்தனையில் 'எந்தரோ மஹாநுபாவுலு அந்தரிகி வந்தனமு' (எத்தனை மகான்கள் இருக்கின்றனரோ அவர்கள் அனைவருக்கும் எனது நமஸ்காரங்கள்) என்ற கீர்த்தனையை முத்தாய்ப்பாகக்கொண்டு பாடினார். இந்த நிகழ்ச்சி கி. பி 1838ல் நடந்ததாக அறியமுடிகிறது.

பின்னர் (1845ஆம் ஆண்டு) இவரது மனைவி மறைந்தார். தனது இசை ஆராய்ச்சிக்கும், நாதோபாஸனை செய்வதற்கும் உறுதுணையாக இருந்த தனது மனைவி இறந்ததால் மிகவும் வேதனை அடைந்தார். 'தொலி ஜன்மமுல' என்னும் பிலஹரி இராகத்தில் அமைந்த கீர்த்தனையில் இந்நிகழ்ச்சியை மிகத் தெளிவுபடக் கூறியுள்ளார். இவரது 78 அல்லது 79ஆம் வயதின்போது தனக்கு இறுதிக்காலம் வந்துவிட்டது என்பதை ஸ்ரீராமனது திருவருளால் உணர்ந்துகொண்ட ஸ்வாமிகள் ஆபத்கால சன்யாஸம் பெற்றுக்கொண்டார். திருவையாறு தியாகையர்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

ஸத்குரு தியாகராஜ ஸ்வாமிகள் ஆனார். 6—1—1847 ஆம் ஆண்டு பகுளபஞ்சமி தினத்தன்று ஸ்வாமிகள் ஸ்ரீராமனின் திருவடிகளைப் பற்றி நாதஸ்வரூபியான இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

நௌகா சரித சாஹித்யங்கள்—பதமா? கீர்த்தனமா?

தியாகராஜரின் சாஹித்தியங்கள் கீர்த்தனைகள் என்றும், க்ருதிகள் என்றும் பொதுவாக அழைக்கப்பெற்று வருகின்றன. ஆனால் 'கீர்த்தனைகள்' என்ற சொல்லை ஆராயும்போது 'இறைவனுடைய புகழைப் பாடும் பாட்டு' (கீர்த்த யதே இதி கீர்த்தன:) என்று பொருள் கொள்ள லாம்.

ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் தான் பாடியுள்ள பாடல்களை 'பதம்' என்ற சொல்லாலேயே குறிப்பிட்டுள் ளார்[1]. ஆனால் ஸ்ரீஸ்வாமிகளுக்குப்பின் வந்த அவரது சிடர்கள் 'தியாகராஜரின் கீர்த்தனைகள்' என்றே அழைக்க லாயினர். இதன் காரணத்தைச் சிந்திக்கும்போது ஸத்குரு ஸ்வாமிகள் பாடியுள்ள 'ராகரத்ன மாலிகசே' என்னும் பதத்தில் 'பாகவதோத்தமுலு கூடி பாடே கீர்த்தன முலட, தியாகராஜு கடதேர' என்று பாடியுள்ள தால் தியாகராஜரின் பதங்களும் பின்னர் கீர்த்தனைகள் என்றே அழைக்கப்படலாயிற்று என்று அறியமுடிகின்றது. மேலும் இவருடைய சாஹித்யங்களை கூர்ந்து கவனித்தால் சிருங்காரம், பக்தி, நீதி, வைராக்யம், பாவம், ஹேலா போன்ற பிரிவுகளில் பதங்களைப்போல் பிரிக்கமுடியும்.

---

1 i பதமு தியாகராஜநுதினிபை—(ஸமயமுதெலிஸி)

ii பாஹிராம யநுசு நீது பதமு நம்மிதி
பாஹிராம யநுசு மனஸு பாகுக நம்மிதி
பாஹிராம யநுசு நீது பதமு பாடிதி
பாஹிராம யநுசு பரம பதமு வேடிதி—(பாஹிமாம்ஹரே)

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

தியாகராஜ ஸ்வாமிகளுக்கு முன்னரேயே பல சாஹித்ய கர்த்தாக்களின் சாஹித்யங்கள் 'பதம்' என்ற பெயராலேயே அழைக்கப்பட்டு வந்துள்ளன என்பதையும் குறிப்பிடவேண்டும். க்ஷேத்ரயர் பதங்கள், புரந்தரதாஸர் பதங்கள், சகஜி மன்னரின் பதங்கள், கிரிராஜகவி பதங்கள் முத்துத்தாண்டவர் பதங்கள், வாசுதேவகவி பதங்கள் ராமபாரதி பதங்கள் போன்றவற்றை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். "பதம்" என்ற சொல்லாட்சியுடைய உருப்படிகள் நாட்டியத்திற்கான உருப்படிகளே என்ற கருத்தும் நம்மிடையே நிலவி வருகின்றது. பத-கதௌ— நடை! தாள நடையைக் குறிக்கும். ஆதலால் நாட்டியம் ஆடும் உருப்படிகளில் சில அமைப்புக்கு பதம் என்று பெயர் வழங்கலாயிற்று.

நாயக நாயகி பாவங்களையே அடிப்படையாகக் கொண்ட 'கீத கோவிந்த' மஹாகாவியத்தின் அஷ்டபதிகளையும் பதங்கள் என்றே நாம் அழைக்கிறோம். இதில் பல்லவியும் (த்ருவம்) ஏனைய அடிகள் பதங்களுமாக அமைந்திருக்கும். இதனாலேயே இதற்குக் காரணப் பெயராக 'அஷ்டபதி' என்ற பெயரும் பெற்றது. இதனையே அன்னமாச்சாரியாரும் குறிப்பிடுகிறார்.[1] ஆக, நாட்டிய நாடகங்களுக்கு இயற்றப்பட்ட சாஹித்யங்களைப் பதம் என்றும், த்ருவத்தில் தொடங்குவதால் த்ருவபதம் அல்லது தரு என்றும், அழைக்கும் வழக்கு ஏற்பட்டுள்ளது ஆதலால் இந்த நௌகா சரித்திரத்தில் உள்ள சாஹித்யங்களை 'தரு' என்றே அழைத்தல் பொருந்தும். சுவடியிலும் ஒவ்வொரு சாஹித்யங்களின் ஆரம்பத்திலும் 'தரு' என்ற சொல்லாலேயே குறிப்பிடப்பட்டுள்ளன.

---

1 கனத மீரங்க ஜயதேவ கவி வரேண்யுடு
அந்தமை நட்டி கீதகோவிந்த மந்து
அஞ்சிதாஷ்ட பதுலைநட்லு பதமு பரகு
நெறிமிதி பதமுலு பல்லவியுநு

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

ஆதலால், 'நௌகா சரித்திர'த்திலுள்ள உருப்படிகளை 'கீர்த்தனைகள்' என்பதைவிட தரு என்றோ, பதம் என்றோ அழைத்தல் பொருந்தும் என்று கருதுகிறோம்.

சுவடியின் வரலாறு

இந்நூலகத்தின் தெலுங்கு மொழிப் பிரிவில் இந்த (D. No. 483. Ms. No 697ல்) "நௌகா சரித்திரத்தின்" ஓலைச்சுவடி பாதுகாக்கப்பெற்று வருகின்றது. இந்தச் சுவடி, இந்த நூலகத்தில் கி. பி. 1855க்கு முன்னரேயே பாதுகாக்கப் பெற்றதற்கான சான்றுகள் உள்ளன. மேலும் இந்தச்சுவடி இந்த நூலகத்தில் காணப்பெறும் 'நாடக நூல்களின் பட்டியலி'லும் இடம் பெற்றுள்ளது.

மராட்டிய மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் தஞ்சை அரண்மனையில் விநாயக சதுர்த்தி, கோகுலாஷ்டமி போன்ற திருவிழாக்களில் 22 நாள்கள் பல்வேறு நாடகங்கள் தொடர்ந்து நடைபெற்றுள்ளன என்பதற்கான சான்றுகளும் இந்நூலகத்திலுள்ள மோடி ஆவணக் குறிப்புக்களால் அறியமுடிகின்றது[1].

மேலும், நூலகத்தின் நாடகப் பட்டியலில் இந்த நௌகா சரித்திரமும் இடம்பெற்றுள்ளதால் இது இசை நாட்டிய நாடகமாகவும் நடந்திருக்கும் என்பதை அறிய முடிகிறது. மேலும் இக்கருத்துக்கு வலிவூட்டுவதாக சில செய்திகளும் உள்ளன.

தஞ்சை அரண்மனையில் 'வித்பாதிகாரிகள்' என்ற ஒரு பிரிவில் வாய்ப்பாட்டில் வல்லவர்களான வித்வான்களும், வாத்திய வித்வான்களும் பங்கேற்றிருந்தனர். இவர்களுக்குக் கண்காணிப்பாளராக இருந்தவர் 'தருமைய

1. தஞ்சை மராட்டிய மன்னர்கால அரசியலும், சமுதாய வாழ்க்கையும். கே. எம், வேங்கடராமையா. பக். 228.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

ராமசாமி அய்யா' (தருமராஜ தீக்ஷிதர்) என்பவர், (இவரே வரஹப்பையா தீக்ஷிதரின் தந்தையுமாவார்). இவர் 1819ல் இப்பிரிவின் கண்காணிப்பாளராகப் பொறுப்பேற்றுள்ளார் பின்னர் சில ஆண்டுகளுக்குப்பின் இவர் காசி யாத்திரை சென்றுவந்தார். அதன் பின்னர் 1847ஆம் ஆண்டு தஞ்சை அரண்மனையில் நடைபெற்றுவந்த பாகவதமேளாவில் பாட்டுப் பாடும் கலைஞராகப் பணிசெய்துள்ளார்[1]. இந்த ஆண்டில்தான் ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் ஸமாதி அடைந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் பின்னர் ஓரிரு ஆண்டுகளுக்குள்ளாக இந்த நௌகா சரித்திரம் இந்த அரண்மனையில் நாட்டிய நாடகமாக நடைபெற்று இருக்கலாம் என்று கருத முடிகிறது.

அடுத்து, இந்த அரண்மனையில் நடைபெற்ற நாடகங்களில் நடித்தவர்கள் பெரும்பாலும் 'தெலுங்கு மொழி' பேசுகின்றவர்களே இந்த நாடகங்களில் நடித்த நடிகர்களின் பட்டியல் உள்ள சுவடிகளும் இத்தொகுதியில் அடக்கம். தெலுங்கு மொழி பேசுகின்றவர்கள், பல்வேறு மொழிகளில் அமைந்த நாடகங்களில் நடிக்கும்போது தங்களது வசதிக்காக அந்த அந்த நாடகங்களைத் தெலுங்கு லிபியிலேயே எழுதியுள்ளனர். தமிழ் நாடகங்களோ[2] மராட்டிய நாடகங்களோ[3]. சமஸ்கிருத நாடகங்களோ எதுவாக இருந்தாலும், அதனைத் தெலுங்கு லிபியிலேயே எழுதியுள்ளனர். இதேபோல தேவநாகரி, கிரந்தம் போன்ற 'லிபி'களிலும் (தெலுங்கு நாடகங்களை தேவநாகரியிலும் கிரந்தத்திலும், தமிழ் நாடகங்களை தெலுங்கு லிபியிலும்) எழுதும் வழக்கம் இருந்திருக்கிறது. இந்த மரபின்படி இச்சுவடி (நௌகா சரித்திரம்) தெலுங்கு

1. தஞ்சை மராட்டிய மன்னர் கால அரசியலும் சமுதாய வாழ்க்கையும். பக்கம். 229.

2 சகஜி ராஜன் குறவஞ்சி, காவேரி கல்யாணம் முதலியன.

3 மார்க்கண்டேய நாடகம், சாகுந்தலம் முதலியன,

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

மொழியாக இருந்தபோதிலும் இது 'கிரந்த லிபி'யிலேயே எழுதப்பட்டு இருக்கிறது. இதனை எழுதியவர் 'கோபால அய்யங்கார்' என்பவர். இதனை இவரது கைப்படச் சுவடி யின்மீது எழுதியுள்ளார்.

ஆக, இந்த நாடகம் அரண்மனையில் நடிப்பதற் காகவே எழுதப்பட்டிருக்கலாம் என்று கருதுவதில் தவறு இல்லை. மேலும் மெலட்டூர் 'பாகவத மேளா'வில் நடிக்கப்பெறும் தெலுங்குமொழி நாடகங்களில் சில கிரந்த லிபியிலேயே எழுதப்பெற்றுள்ளன என்பதும் இங்குச் சிந்திக்கத்தக்கது. இந்த நௌகா சரித்திரத்தில் இடை இடையே காணப்படும் வசனப் பகுதிகளைப்போலவே மெலட்டூர் பாகவத மேளா நாடகங்களிலும் காணப்படு கின்றன. இவற்றையும் கருத்தில் கொண்டால் 'நௌகா சரித்திரம்' நாட்டிய நாடகத்திற்காகவே எழுதப்பட்டிருக் கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆதலால் 'நௌகா சரித்திரம்' 'இசை நாடகம்' என்பதைவிட 'இசை நாட்டிய நாடகம்' என்பதே பொருந்தும் என்றும் ஸத்குரு ஸ்ரீ தியாக ராஜ ஸ்வாமிகள் தமது முன்னோர்களைப் பின்பற்றி இவரும் பாகவத மேளா, இசை நாட்டிய நாடகமாக இதனை இயற்றியிருப்பார் என்றும், ஸத்குரு ஸ்ரீ தியாக ராஜ ஸ்வாமிகள் முக்தியடைந்த ஓரிரு ஆண்டுகளுக் குள்ளாகவே தஞ்சை அரண்மனையில் நடைபெற்ற பாகவதமேளா குழுவினரால் நாட்டிய நாடகமாக மேடை யில் நடிக்கப்பட்டிருக்கும் என்றும் இச்சுவடியின் வாயிலாக அறியமுடிகிறது.

நௌகா சரித்திரமும் — முக்கிய செய்திகளும்

ஸ்ரீமத் பாகவதம் பத்தாவது ஸ்கந்தம் முழுதும் கண்ணனுடைய அவதாரம், மற்றும் அனைத்து வரலாறு களைக் கொண்டது. ஆனால் இந்நூலில் காணப்படும் கதைக்குரிய சான்றுகள் இதில் காணப்படவில்லை. இது ஸத்குரு. ஸ்ரீ தியாகராஜரின் கற்பனைக் கதை என்று

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

இன்றுவரை ஆராய்ச்சியாளர்களும், அவருடைய ரஸிகர்களும் கருதி வருகின்றனர்.

இந்நிலையில், சரஸ்வதி மஹால் நூலகத்தின் மராட்டி மொழிப் பிரிவில் தத்தாத்ரேய மட சங்கிரகம் வரிசை எண் 79-ஆம் எண்ணில் பாதுகாத்து வரும் ஒரு சுவடியை ஆராய்ந்தபோழ்து ஸ்ரீ தியாகராஜருடைய நௌகா சரித்திரக் கதையும்,[1] சுவடியில் காணப்படும் கதையும்[2] ஒன்றாகவே இருந்தன. இதனை வெளி உலகிற்குக் கொண்டுவரவேண்டும் என்று கருதி இந்நூலின் அனுபந்தமாக அதனை வெளியிட்டுள்ளோம். மராட்டிய மொழியில் காணப்படும் "நௌகா நிருபணம் (நயனம்)" என்னும் நூலை இயற்றியவர் ஆனந்ததநயர். இவர் 17-ஆம் நூற்றாண்டில் ஆரணியில் வாழ்ந்தவர். ஹரிகதைகளைச் செய்வதில் வல்லவர். ஹரிகதா காலக்ஷேபத்திற்காக இயற்றப்பெற்ற இந்த நூல் தஞ்சையில் ஹரிகதா காலக்ஷேபங்களை நிகழ்த்திய மடங்களில் ஒன்றான தத்தாத்ரேய மடத்திலிருந்து நூலகத்திற்கு அளிக்கப்பெற்ற சுவடிகளில் ஒன்றாகும்.

ஸத்குரு ஸ்வாமிகள் பல தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்துள்ளார் என்பதை அவரது கீர்த்தனை வாயிலாகவும் அவர்களது சீடர்களின் வாயிலாகவும் அறிய முடிகிறது.[3] ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் 'நௌகா நயனம்' என்ற கதையை ஹரிகதையின் வாயிலாக ஆரணியிலோ, தஞ்சையிலோ, திருவையாற்றிலோ உள்ள ஸ்ரீ ஸமர்த்த ராமதாஸரின் மடங்களின் வாயிலாக அறிந்து கொண்டிருக்கலாம். மராட்டிய மன்னர்களின் காலத்தில் தமிழகத்திற்கு வந்த கலைகளில் கதாகாலக்ஷேபமுமொன்று.

---

1 ஓலைச்சுவடியில் தெலுங்கு மொழியில் — கிரந்த லிபியில் உள்ளது.

2 காகிதச் சுவடியில் மராட்டிய மொழியில் — தேவநாகரி லிபியில் உள்ளது.

3 ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் கீர்த்தனைகள், முகவுரை பக்கம்—XIV—1988,

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

இக்கதையின் முக்கிய அம்சம் 'சரணாகதி தத்துவத்தை' உணர்த்தலே. இதனையே அடிப்படையாகக்கொண்டு இந்த நௌகா சரித்திரத்தை ஸ்ரீ தியாகராஜர் இயற்றி இருக்க வேண்டும் என்று கருத இடமளிக்கிறது.

வட இந்தியாவில் வழங்கிவரும் இக்கதையைத் தென்னிந்திய இசையமைப்பில் இசை நாட்டிய நாடகமாக முதன் முதலில் இயற்றியவர் ஸத்குரு ஸ்ரீ தியாகராஜரே ஆவார் எனில் மிகையில்லை.

இந்நாடகம் சிருங்கார ரஸத்தையே அடிப்படையாகக் கொண்டது. இக்கதையை வைராக்கிய நீதியுடன் உள்ள துறவியுமான ஸ்வாமிகள் கத்தி முனை மீது நடப்பது போல் விரசம் சற்றுமின்றி அமைத்திருப்பது மிக மிகக் கடினமான ஒரு சாதனையாகும். ஏனெனில், இவ் விஷயத்தில் 'கீதகோவிந்தத்தின்' ஆசிரியரான ஜயதேவ ஸ்வாமி போன்ற பக்த கவிகளும் வரம்பை மீறிவிட்டிருக்கின்றனர் என்பது இலக்கிய ஆராய்ச்சியாளர் கருத்து[1]. சிருங்காரத்தில் ஆரம்பித்து, படிப்படியாக உயர்ந்து சரணாகதி தத்துவத்தை உணர்த்தி நாடகத்தை முடித்து விடுகிறார் ஸ்வாமிகள்.

இந்த நாடகத்தில் வரும் கோபியரின் சிருங்கார சேஷ்டைகளும், காற்றும், மழையும் சுழன்றடிக்கும்போது "அல்லோலகல்லோல" என்னும் பாடலமைந்த பகுதிகளும், இறுதியில் தங்களால் இனி ஏதும் செய்ய முடியாத அவல நிலையில் கோபியர் தங்களது கர்வத்தை நீக்கி சரணாகதி அடையும் பகுதிகளும் உள்ளபடியே அனைவரின் கருத்தையும் கவரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனந்த தனயரின் கதையை அடிப்படையாகக்கொண்டாரே தவிர கதையின் சூழ்நிலைகளையும், அதன் போக்கையும் சிறிது

---

1 ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் கீர்த்தனைகள் Ed. by T. S. பார்த்தசாரதி, முகவுரை, பக்கம்—XXIX

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

மாற்றியமைத்துள்ளார். இதனை ராஜநடையில் கொண்டு போவது ஸ்வாமிகளுக்கேயுரிய பாணி. அங்கங்கே அதே சொல்லாட்சிகளையும் கொண்டுள்ளார் எனில் மிகை யில்லை, இதனை ஆராய்ச்சியாளர்களே ஒப்பாய்வு செய்து கொள்வார்களாக.

'யக்ஷகானம்' என்னும் இசை நாட்டிய மரபைப் பின்பற்றியே ஸ்வாமிகள் ப்ரஹ்லாத பக்தி விஜயத்தையும், இந்த நௌகா சரித்திரத்தையும் படைத்துள்ளார். யக்ஷ கான மரபுப்படியே இந்த நாடகத்தை ஸௌராஷ்டி ராகத்தில் தொடங்கி ஸௌராஷ்டி ராகத்திலேயே முடிக்கின்றார். இயற்கை வருணனைகளை (தரு எண். 2) இப்பாடல்களில் கண்டு களிக்கலாம். முன்னெதுகைகளை (தரு எண்கள்: 6, 7, 10, 19) போன்ற பாடல்களிலும், பின்னெதுகைகளைத் (தரு எண்கள்: 14, 13, 10) தருக்களிலும் காணலாம்.

அடுக்குத்தொடர் :

குமகும குமயநி. குஸகுஸ, சாலு சாலு, ஏமேமோ, விந்த விந்த.

பழமொழி :

1. குழந்தையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுவதைப்போல (பக்கம்: 75)
2. அல்லோல கல்லோலமாயிற்று (பக்கம்: 98)
3. சல்லியன் சாரத்தியம்போல (பக்கம்: 76)
4. வைத்தியன் சொல்லைக் கேட்கும் நோயாளியைப் போல (பக்கம்: 154) குறித்துள்ளார்.

இப்படிப் பல்வேறு கோணங்களில் இந்நூலை ஆராயலாம்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

இந்நூலைப் பதிப்பித்துள்ள முறை

1. இந்நூலில் காணப்படும் வசனங்களை 'ஸ்வாமிகளே' இயற்றி இருப்பாரா ? என்பதில் எமக்கு ஐயம். திருவாளர் புரொபஸர் சாம்பமூர்த்தி அவர்களுடைய நூலில் காணப் படும் வசனங்களையும், ஆதி அண்டு கம்பெனியின் வாயிலாக வெளிவந்த (1930 Ed. K. V. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் பரிசோதித்தது — தெலுங்கு எழுத்து) வசனங்களையும் இந்நூலகச் சுவடியுடன் ஒப்பிட்டபோது பல்வேறாகக் காணப்பட்டன. ஆனால் இதில் காணப்படும் தருக்களில் அதிக பாடபேதங்கள் தென்படவில்லை. அதனால் இந்த நாடகத்தில் இடையிடையே எழுதப்பட்ட வசனங்கள் பிற்காலத்தில் வந்தவர்களால் எழுதப்பட்டிருக்கும் என்ப தில் சிறிதும் ஐயமில்லை. இதனால் இந்த நூலில் வசனங் களுக்குத் தமிழில் பொருள் எழுதவில்லை.

2. ஷ வசனத்திற்குப் பொருள் எழுதாமையால் வாசகர்கள் கதையின் தொடர்பை அறிந்துகொள்வதற் காக 'கருத்து' என்ற பகுதியில் உள்ள அடைப்பானில் 'அவதாரிகை' என்ற பகுதியைச் சேர்த்துள்ளோம். இதனை அடுத்துவரும் 'பாரா' குறிப்பிட்டுள்ள பாடலின் கருத்தையும், அதனை அடுத்து வரும் பாராவில் ஸ்வாமிக ளின் பாடலுக்குரிய 'பாவார்த்தம்' (உள்ளுறை)யும், கொடுக்கப்பெற்றுள்ளன. மற்றும் சில பாடல்களுக்கு உரைவிளக்கமும், தேவையான பகுதிகளுக்கு அடிக் குறிப்புக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

3. இன்றுவரை வெளிவந்துள்ள ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் நூல்களில் தெலுங்கு மொழியின் சொற்க ளுக்கு, சொல்லுக்குச்சொல் பொருள் (பத-பதார்த்தங்கள்) கொடுக்கப்பெறவில்லை. அதைப்போல பாவார்த்தங்க ளும் கொடுக்கப்பெறவில்லை. இத்தகைய அமைப்பில் ஒரு நூலை வெளியிடவேண்டும் என்று கருதினோம். ஆனால் அதனை ஓரளவுதான் எங்களால் செய்யமுடிந்தது.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

தியாகராஜ ஸ்வாமிகளின் பாவார்த்தங்களை வெளியிடுவதில் இம்முயற்சி மிகச்சிறியதுதானேயன்றி, முழுமையாகச் செய்த நிறைவு எங்களுக்குச் சிறிதுமில்லை.

4. இந்த நூலில் பாடல்களைக் குறிக்கும்போது 'தரு' என்ற சொல்லையே கையாண்டுள்ளோர். எங்களுக்குச் சுவடியே அடிப்படை என்பது மட்டுமின்றி, நாடகப் பாடல்களுக்கு 'தரு' என்ற சொல்லாட்சியே 'மரபு' என்ற காரணம் பற்றியும் இங்குக் கையாளப்பட்டுள்ளது.

5. சில பாடல்களுக்குப் பல்லவி, அனுபல்லவி என்ற வேறுபாடுகள் சுவடியில் காணப்படவில்லை. சுவடியைப் பின்பற்றியே இங்கு தருக்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

எங்களது நோக்கம்

இசைவாணர்களுக்கும், நாட்டியம் ஆடுகின்ற கலைஞர்களுக்கும், நட்டுவனார்களுக்கும், பாட்டின் பொருளைச் சொல்லுக்குச் சொல் அறிவதால் பாவத்துடன் பாடவும், கைகளில் நாட்டிய முத்திரைகளைப் பிடிக்கவும் இது உதவும் என்ற எங்களது அனுபவத்தின் விளைவே எங்களை இவ்வாறு செய்யத்தூண்டியது. ஸ்வாமிகளின் கீர்த்தனங்கள் இவ்வகையில் வெளிவந்தால் தெலுங்கு மொழி தெரியாத தமிழர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் உதவும் என்பதாகக் கருதுகிறோம்.

நன்றியுரை

இந்நூலைப் பதிப்பிக்கும்போது எங்களுக்கு எழுந்த ஐயங்களை நீக்கியும், அச்சகப் படிவங்களைச் செப்பனிட்டு அளித்தும் உதவிய திரு. ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்கட்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இதே போல் இந்த நூலுக்கு அனுபந்தமாக வெளியிட மராட்டிச் சுவடிய்யைப் பரிசோதித்துத் தந்த முன்னாள் மராட்டிப்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

பண்டிதர் திரு. டி. ஆர். பீமராவ் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இசை நாட்டியம் போன்ற நுண்கலைகளில் மிகுந்த ஆர்வம் கொண்டதுடன் கலைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும்தந்து பாராட்டும் குணநலம் படைத்தவர் எங்களது இயக்குநர் அவர்கள். இந்நூலை ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் 146-ஆவது ஆராதனை விழாவில் வெளியிடவேண்டும் என்று விரும்பியதுடன் அவ்வப்போது இந்நூலகத்தின் வளர்ச்சியிலும் ஆக்கபூர்வமான பணிகளைச் செய்துவரும் இந்நூலக இயக்குநரும் மாவட்ட ஆட்சித் தலைவருமான உயர்திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ. ஆ. ப., அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நூலை ஆராதனையில் வெளியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டும், எங்களுடைய பணியைச் சிறப்பாக முடிக்க உற்சாகமூட்டியும், எங்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் அவ்வப்போது செய்துவரும் எங்கள் நூலக நிருவாக அலுவலரும் (பொறுப்பு), வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகருமான உயர்திரு. அ. பஞ்சநாதன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்., அவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நூலகத்தின் அச்சகப் பிரிவிலுள்ள எங்களது இனிய நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், அவர்கள் காட்டிய உற்சாகமே மிகக்குறுகிய காலத்தில் இந்நூல் சிறப்பாக வெளிவர உதவியது எனில் மிகையில்லை என்பதையும் நன்றியுடன் இங்குக் குறிப்பிட்டே ஆகவேண்டும். எங்களுடன் புரூப் பார்க்க உதவிய இந்த நூலக சமஸ்கிருத பண்டிதர் திரு. ஆ. வீரராகவன்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

அவர்களுக்கும், தமிழ்ப்பண்டிதர் திரு. ய. மணிகண்டன் அவர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந் நூலகத்தின் வெளியீடாகத் தியாகராஜ ஸ்வாமிகளின் நூல் ஒன்று கூட வரவில்லையே என்ற குறை வாசகர்களிடையே பல ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது. அக் குறையை இந்த நூல் ஓரளவு சரிசெய்யுமென்று நம்புகிறோம்.

மிகக் குறுகிய காலத்தில் இந்த நூல் வெளிவருவதால் இதில் ஏதேனும் குறையிருந்தால் அக் குறைகளை எமக்குச் சுட்டிக்காட்ட வேண்டும் என்று வாசகர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் கலைஞர்களையும் கேட்டுக் கொள்கிறோம். அது, அடுத்த நூல் திருந்திய பதிப்பாக வெளிவர உதவும்.

எல்லாம் வல்ல இறையருளாலும், ஸத்குருநாதரின் குருவருளாலும் தொடர்ந்து இதுபோன்ற பணிகளை மேன்மேலும் செய்யும் பேறு எங்களுக்குக் கிட்டவேண்டும் என்று விரும்புகின்றோம்.

ந. விசுவநாதன்,
தெலுங்கு பண்டிதர் (ஓய்வு)

தஞ்சாவூர்,

29—12—92.

என். ஸ்ரீநிவாசன்,
சம்ஸ்க்ருத பண்டிதர்;
சரஸ்வதி மகால் நூலகம்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

நௌகா சரித்திரத்தின் கதைச் சுருக்கம்

கோகுலத்தில் ஒருநாள் மாலையில் கண்ணனின் குழலொலியைக் கேட்ட கோபியர், அந்தக் குழலொலியால் கவரப்பட்டு அக்குழலுக்குரிய கண்ணனைக் காணவேண்டும் என்று விரும்பிப் பல்வேறு இடங்களில் தேடியலைந்து யமுனைக் கரையில் கண்ணனைக் கண்டு மகிழ்ந்தனர்.

அங்கு யமுனையின் கரையோரமாக ஒரு ஓடம் (வெள்ளிபோன்ற நிறத்தையுடையது) இருந்தது. அதனைக் கண்ட கோபியர் அதில் படகுச் சவாரி செய்ய எண்ணினர். இந்நிலையில் கண்ணனை அழைத்துப் போவதா? வேண்டாமா? என்ற சந்தேகம். இவர்களது ஐயக் குறிப்புணர்ந்த கண்ணன், 'பெண்களே! ஆண் துணையின்றிப் பெண்கள் மட்டும் ஆபத்தான செயல்களிலீடுபடக் கூடாது. உங்களுக்கு வரும் எந்தவிதமான ஆபத்துக்களிலிருந்தும் காப்பேன்' என்று கூறினான். ஒருவாறாகக் கண்ணனுடன் படகில் உல்லாசம் பொங்கப் படகுச் சவாரி செய்தனர் கோபியர். ஒருவருக்கொருவர் சந்தனம் பூசிக் கொள்வதும், ஆடைகளை அணிந்துகொள்ள உதவுவதும், மணப்பொருட்களுடன் கூடிய வெற்றிலைத் தாம்பூலங்களை ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொள்வதுமாக ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும் சென்றனர். சுவர்க்க போகத்தையே தாங்கள் அடைந்து விட்டதாக மகிழ்ந்தனர். தங்களைவிட இவ்வுலகில் வேறு அழகிகளேயில்லை என்ற கர்வம் தலைதூக்கியது கோபியருக்கு. இவர்களது அழகைப் புகழ்ந்து மேன்மேலும் கர்வம் கொள்ளச் செய்தான் கண்ணன். கண்ணனே தங்களது அழகில் மயங்கிவிட்டான். எங்களால் (பெண்களால்) இவ்வுலகில்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

செய்ய முடியாத செயல் ஒன்றுமே இல்லை. பிரமனும், திருமாலும், சிவனும் ஏன் கண்ணனுமே பெண்களுக்கு அடிமையானார்கள் எனில் பிறரைப்பற்றி என் சொல்வது? என்று கர்வத்துடன் பேசலாயினர். இந்நிலையில் கண்ணனுக்கே ஒன்றும் தெரியாது என்றுகூடக் கூற ஆரம்பித்தனர். இதனை அறிந்த கண்ணன் இவர்களது அகந்தையை அழிக்கத் திருவுள்ளங்கொண்டு 'சுழற்காற்றும், கடும்மழையும்' வருமாறு செய்தான். அதே சமயம் அந்த ஓடத்தில் சிறிய பொத்தல் (துவாரம்-துளை) ஏற்பட்டு அதன் வழியாக ஓடத்தினுள் தண்ணீர் புகுந்தது. கண்ணனின் திருவிளையாடலுக்கு உதவியாகத் தேவர்களும் (தேவேந்திரன்) ஆலங்கட்டி மழை பொழியச்செய்தனர். கடும் ஆலங்கட்டி மழையாலும், சுழற்காற்றாலும் ஓடம் அங்குமிங்கும் தள்ளாடியது. ஓடத்தினுள் தண்ணீர் சல சலவென்று புகுந்ததைக் கண்ட கோபியர் அச்சத்தால் அலறினர். செய்வதறியாது திகைத்தனர், இந்நிலையில் தங்களைக் காக்குமாறு அந்த யமுனையிடமே வேண்டினர், 'எங்களது உடல், பொருள், ஆவி ஆகியவற்றை உனக்கே அர்ப்பணிக்கிறோம். எங்கள் கண்ணன் உயிருடன் கரை சேர்ந்தால் போதும்' என்று வேண்டினர். 'முத்திப் பேற்றையே அளிக்கவல்ல கண்ணன் அருகே இருந்தும், அவனுடைய திருவடிகளைச் சரணமடையாமல் இந்த யமுனையை வேண்டுகின்றனரே' என்று தேவர்கள் இவர்களது அறியாமையை எண்ணி நகைத்தனர்.

இந்நிலையில் வேறு எவ்வழியும் புலப்படாமல் தவித்த கோபியர், கண்ணனிடமே கூறினர். "கண்ணா! 'ஆபத்தில் உங்களைக் காப்பேன்' என்று ஓடம் புறப்படும் சமயம் கூறினாயே! எங்களைக் காப்பாற்றும் வழியைக் கூறு" என்று வேண்டி அழுதனர். கண்ணனும் மனமிரங்கி 'முதலில் ஓடத்தில் புகும் தண்ணீரைத்தடுத்து நிறுத்த வேண்டும், நம்மிடம் இதற்குரிய வேறு சாதனங்கள் இல்லாமையால் உங்களது ரவிக்கைகளைக்கொண்டு இந்த ஓடத்தின் பொந்தை முதலில் அடையுங்கள்" என்றான்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

அப்படியே கோபியரும் செய்தனர். அப்படியும், வெள்ளம் புகும் வேகத்தில் அந்தரவிக்கைகள் வெள்ளத்தில் அடித்துச் சென்று விட்டதை அறிந்த கோபியர், கலங்கிநின்றனர். செய்வதறியாது கண்ணனிடமே இதற்குரிய வழியை மீண்டும் மீண்டும் கேட்டு அழுதனர்.

அவர்களது ஆற்றாமையை அறிந்த கண்ணன் 'உங்களது புடவைகளையும் அந்த ஓடத்தின் பொந்தில் அடைத்து, தண்ணீர் ஓடத்தில் நுழைவதைத் தடுத்து நிறுத்துங்கள். அதுவே முதற்பணி' என்று சொன்னான். பெண்களாகப் பிறந்த நாங்கள் எப்படி ஆடையின்றி இருக்கமுடியும் என்று மறுத்தனர். நான் உயிருடன் கரைக்குப்போக வேண்டுமானால் நான் சொன்னதைச் செய்யுங்கள் என்று கண்ணன் கூற வேறு வழியின்றித் தங்களது புடவைகளைக் கொண்டு ஓடத்திலேற்பட்ட பொந்தை அடைத்தனர் அவைகளும் ஆற்று வெள்ளத்தில் சென்றுவிட்டன.

ஆற்றுவெள்ளம் ஓடத்தில் புகுந்துகொண்டிருப்பதைத் தடுக்கமுடியாமலும், செய்யும் வகை தெரியாமலும் கடுங் குளிரைத் தாங்கமுடியாமலும் கண்ணனே இனி நமக்குப் புகலிடம் என்று கருதினர். அவர்களது கர்வம் மறைந்தது. எதையும் தங்களால் இவ்வுலகில் சாதிக்கமுடியும் என்று கருதிய கோபியர், எதையும் தங்களால் இவ்வுலகில் சாதிக்கமுடியாது என்ற நிலைக்குக் கொண்டுவரப் பட்டனர். தங்களால் எதையும் சாதிக்க முடியாத அவல நிலையில் வெட்கத்தாலும், அவமானத்தாலும் கர்வம் முற்றும் துறந்து தலைகுனிந்து அழுதுகொண்டே நின்றனர். 'இந்தக் கண்ணனுக்கு என்ன தெரியும் ?' என்று எண்ணிய கோபியர் இப்போது கண்ணன் சொன்ன வாக்கியத்தைப் பின்பற்றி ஆடையும் இழந்து நின்றனர். இந்நிலையில் ஓடத்தில் தண்ணீர் கழுத்தளவு புகுந்து விட்டது.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

கண்ணன் மனமிரங்கினான். 'ஏ பெண்களே ! உங்களது கண்களை மூடிக்கொண்டு, உங்களது இஷ்ட தெய்வத்தை வேண்டுங்கள். அவன் உங்களது துயரை நீக்குவான்' என்று கூற, அதன்படியே கோபியர் கண்களை மூடி இறைவனைத் தொழத் திடீரென்று ஒரு பேரொளி தோன்றியது. அப்போது கனமழை இல்லை. கடுங் காற்றில்லை, கோபியரின் மனத்தில் கவலையில்லை. மன அமைதி ஏற்பட, ஓடமும் அமைதியாகப் புறப்பட்ட இடத்திலேயே கரையில் ஒதுங்கியிருந்தது. கண்களைத் திறந்த கோபியரின் மேனிகளில் வண்ணப் பட்டாடைகள் மின்னின. மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரளக் கண்ணனுடன் தங்களது இல்லம் புறப்பட்டனர். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

॥ श्रीः ॥

॥ नौकाचरित्नम् ॥

நௌகா சரித்திரம்

कन्दपद्यम् — கந்தபத்யம்

१. श्रीगणनाथ परात्पर
वागीश सुरेशवन्द्य वरगुणसान्द्रा
वेगमे निनु गोल्चेद ननु
वागुग पालिम्पवय्य पार्वतितनया

விநாயகர் துதி

1 ஸ்ரீ கணநாத பராத்பர
வாகீச ஸுரேசவந்த்ய வரகுண ஸாந்த்ரா
வேகமே நினு கொல்செத நனு
பாகுக பாலிம்பவய்ய பார்வதீ தனயா

பார்வதீ தனய - பார்வதீ தேவியின் புதல்வனே! ஸ்ரீ கணநாத - விநாயகப் பெருமானே! பராத்பர - ஆதியந்தமற்றவனே! வாகீச சுரேச வந்த்ய - பிர்மா, இந்திரன் முதலியவர்களால் துதிக்கப் படுகின்றவனே! வரகுண ஸாந்த்ர-வரங்களை வழங்கும் குணமுடையவனே! நினு கொல்செத - உன்னைத் துதிக்கின்றேன். நனு - என்னை, வேகமே பாகுக பாலிம்பவைய்ய - விரைவாகவும், நன்றாகவும் காப்பாயாக.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

२. एणीलोचनि पल्लव-
पाणी यलिनीलवेणि पावनिनत गी-
र्वाणी यनयमु म्रोक्केद
वाणी ना जिह्वयन्दु वसियिम्पगदे

சரஸ்வதி துதி

2 ஏணீலோசனி பல்லவ
பாணீ யலி நீலவேணி பாவனி நத கீர்
வாணீ யனயமு ம்ரொக்கெத
வாணீ நா ஜிஹ்வயந்து வஸியிம்பகதே.

ஏணீலோசனி — கடைக்கண் பார்வையுடையவளும், பல்லவ பாணி - தளிர் போன்ற சிவந்த கைகளை யுடைய வளும், அலி நீலவேணீ — வண்டு போன்ற கரிய நிற முடைய கூந்தலை யுடையவளும், (வண்டுகள் மொய்க்கும் மலரணிந்த கூந்தலுடையவளே! என்றும் பொருள் கொள்ளலாம்) பாவன நத—வணங்கியவரை புனிதப்படுத் தும் தன்மையுள்ளவளும், கீர்வாணீ—தெய்வீகத் தன்மை யுள்ள மொழிகளின் அதிதேவதையுமாகிய, வாணீ—சரஸ்வதி தேவியே (உன்னை), அநயமு—எப்பொழுதும், ம்ரொக்கெத - வணங்குகின்றேன். நா ஜிஹ்வயந்து - எனது நாவினில் வஸியிம்ப கதே - குடியிருப்பாயாக.

३. म्रोक्केद देशिक वरुनकु
म्रोक्केद धर्मार्थकाम मोक्षदुनकु ने
म्रोक्केद पदमुल ननिशमु
म्रोक्केद श्रीरामकृष्ण मोदाख्युनकुन्

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

குரு வணக்கம்

3 ம்ரொக்கெத தேசிக வருனகு
ம்ரொக்கெத தர்மார்த்த காம மோக்ஷதுனகு நே
ம்ரொக்கெத பதமுல நனிசமு
ம்ரொக்கெத ஸ்ரீ ராமக்ருஷ்ண மோதாக்யுனகுன்

தர்மார்த்த காம மோக்ஷதுனகு - அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை நல்கவல்லவரும் மோதாக்யுனகுன் — பரமானந்த நிலையை எய்தியவருமான ஸ்ரீராமகிருஷ்ண தேசிக வருனகு - ஸ்ரீராமகிருஷ்ணர் என்ற தீக்ஷா நாமம் பெற்ற பரமஹம்ஸ சந்யாஸருமான (குருநாதரின்) பதமுல நே அநிஸமு ம்ரொக்கெத - திருவடிகளை நான் எப்பொழுதும் வணங்குகின்றேன்.

४. इल सत्कवुलकु म्रोक्केद
देलियक पद्यमुलु कृष्णदेवुनिपै ने
ललितमुगा रचियिञ्चिति
वलुकुलु तप्पोप्पुलुन्न [1]बालिम्परया

அவையடக்கம்

4 இல ஸத்கவுலகு ம்ரொக்கெத
தெலியக பத்யமுலு க்ருஷ்ண தேவுனிபை நே
லலிதமுகா ரசியிஞ்சிதி
பலுகுலு தப்பொப்புலுன்ன பாலிம்பரயா

---

1. पालिन्तुरया

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

இல ஸத்கவுலகு - இவ்வுலகிலுள்ள தெய்வீகக் கவிஞர்களை. ம்ரொக்கெத - வணங்குகின்றேன். க்ருஷ்ணதேவுநிபை-ஸ்ரீ கிருஷ்ணனின் அருள்பெறும் பொருட்டு. லலிதமுகா பத்யமுலு ரசியிஞ்சிதி - மிக எளிமையான நடையில் பத்யங்களை இயற்றியுள்ளேன் (இதில்). நே தெலியக— என்னை அறியாமல். பலுகுலு தப்பொப்புலுன்ன—சொற்குற்றமிருந்தால் (அதனை மன்னித்து). பாலிம்பரயா— அருள்பாலிக்க வேண்டுகிறேன்.

५. काकर्लाम्बुधि चन्द्रुडु
श्रीकरुडगु त्यागराज चित्तनिवेशा
नौकाचरित मोनर्चेद
श्रीकान्ता चित्तगिम्पु श्रीरघुरामा

சமர்ப்பணம்

5 காகர்லாம்புதி சந்த்ருடு
ஸ்ரீ கருடகு த்யாகராஜ சித்தநிவேசா
நௌகாசரித மொனர்செத
ஸ்ரீ காந்தா சித்தகிம்பு ஸ்ரீ ரகுராமா

ஸ்ரீகருடகு—திருமகள் கேள்வனும், காகர்லாம்புதி சந்த்ருடு த்யாகராஜ சித்த நிவேச-'காகர்லா' என்ற பெயரிய வம்சத்தில் தோன்றி, சந்திரன்போல் விளங்கும் தியாகராஜனின் உள்ளத்தில் வசிப்பவனுமான, ஸ்ரீ ரகுராமா ! — ஸ்ரீராமா, நௌகா சரித்ரமு - நௌகா சரித்திரத்தை (ஓடத்தில் கண்ணன் நிகழ்த்திய விளையாடல்களைப் பற்றிய இசை நாடகத்தை), ஒநர்செத - இயற்றுகின்றேன் (இதை) சித்தகிம்பு—மனமிறங்கி ஏற்பாயாக.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

६. धरलो हरिकृत नौका
चरितम्बुनु विन्नवारु सन्मार्गमुचे
चिरजीवुलै चेलङ्गुचु
वरसुत धनमुलनु बडसि वर्धिल्लुदुरे

நூற்பயன் (பல சுருதி)

6 தரலோ ஹரிக்ருத நௌகா
சரிதம்புனு வின்னவாரு ஸன்மார்கமுசே
சிரஜீவுலை செலங்குசு
வரஸுத தனமுலனு படஸி வர்தில்லுதுரே

தரலோ-இவ்வுலகில், ஹரிக்ருத நௌகா சரிதம்புநு-கண்ணன் செய்த திருவிளையாட்டை மையமாகக் கொண்ட நௌகாசரித்திரத்தை, விந்நவாரு-கேட்டவர்கள், சன்மார்கமுசே - சன்மார்க்கத்தில் ஈடுபாடு கொண்டவர்களாகவும், சிரஞ்ஜீவுலை - சிரஞ்ஜீவிகளாகவும், செலுங்குசு - திகழ்வதுடன், வர, சுத, தனமுல படஸி - இறையருள், மக்கட்பேறு, செல்வம் முதலியவை பெருகி, வர்த்தில்லுதுரே — வாழ்வாங்கு வாழ்வார்கள்.

कथासङ्ग्रहम्

शार्दूलविक्रीडितम्

शा. ७. लोकानुग्रहकारियै मुनु रमा
लोलुण्डु नन्दात्मजु
ण्डाकान्तामणुलन् रमिम्प मदिलो
नाह्लाद संयुक्तुडै

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

पाकारि प्रमुखुल्मुनीन्द्र गणमुल्
ब्रह्मेश्वरुल्मेच्च ता
[1] नौकाक्रीड नोनर्चे गोपिकलतो
नारायणुण्डत्तरिन्

கதாஸங்ரஹம் — நூலின் கதைச்சுருக்கம்

சார்தூலவிக்ரீடிதம்

7 லோகானுக்ரஹகாரியை முனு ரமா
லோலுண்டு நந்தாத்மஜுண்
டா காந்தாமனுலன் ரமிம்ப மதிலோ
நாஹ்லாத ஸம்யுக்துடை
பாகாரி ப்ரமுகுல் முனீந்த்ர கணமுல்
ப்ரஹ்மேச்வருல் மெச்ச தா
நௌகாக்ரீட நொனர்செ கோபிகலதோ
நாராயணுண்டத்தரின்

முனு - முன்பொரு சமயம், ரமாலோலுண்டு - லக்ஷ்மீ ரமணனான, நாராயணுண்டு - நாராயணனான திருமால், நந்தாத்மஜுண்டு - நந்தகோபனின் மைந்தனாக வளர்ந்த கண்ணன், ஆ காந்தாமனுலன்-அந்த கோபியரை, ரமிம்ப-மகிழ்விக்கும் பொருட்டு, மதிலோ ஆஹ்லாத ஸம்யுக்துடை — சந்தோஷமான மனத்துடன், பாகாரி ப்ரமுகுலு — இந்திராதி தேவர்களும், முநீந்த்ர கணமுல் – தவத்திற் சிறந்த முனிவர்களும், ப்ரும்மேச்வருலு மெச்ச - பிரம்மன், சிவபெருமான் முதலியோர் பாராட்டும், அத்தரின் - அவ் வேளையில், லோகாநுக்ரஹகாரியை - உலக நன்மைக்காக, தா — தானே, நௌகா க்ரீடன் — படகு (ஓடம்)

1, क्रीडलुसल्पे

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

விளையாட்டை, கோபிகலதோ - கோபியருடன் ஓனர்ச்சே- செய்தான்.

கருத்து ; உலக நன்மையின் பொருட்டு. பிர்மா, சிவபெருமான், இந்திரன், முதலிய தேவர்களும், முனிவர்களும் ஆச்சரியத்துடன் காண, கண்ணன் கோபியருடன் ஓடத்தில் திருவிளையாடல்களைப் புரிந்தான்.

शा. ८. चित्रं बेमनि विन्नविन्तु विनरे
चिन्मात्रुडौ कृष्णु चा
रित्रंबेल्ल विनङ्ग निण्डुसुखमुल्
व्रेपल्लेलो दोचगा
पत्राहारमुचेत निर्ममतुलै
ब्रह्मज्ञु लीरीतिगा
पुत्रागार धनम्बुल न्मरचिरे
पुण्यात्मुले[1] गोपिकल्

கா. 8 சித்ரம் பேமணி வின்னவிந்து வினரே
சின்மாத்ருடௌ க்ருஷ்ணு சா—
ரித்ரம் பெல்ல வினங்க நிண்டு ஸுகமுல்
வ்ரேபல்லலோ தோசகா
பத்ராஹாரமு சேத நிர்மமதுலை
ப்ரம்க்ஞ்யு லீரீதிகா
புத்ராகார தனம்புலன் மரசிரே
புண்யாத்முலே கோபிகல்

---

1. पुण्यात्मलौ

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

சித்ரம்பு — ஆச்சரியம்! யேமனி வின்னவிந்து— என்னவென்று சொல்லுவேன். விநிரே! கேளுங்கள். சின்மாத்ருடௌ — சித்ஸ்வரூபமாக விளங்கும், க்ருஷ்ணு சாரித்ரம் பெல்ல - கண்ணனின் செய்கைகள் எல்லாம், விநங்க—கேட்க, நிண்டு ஸுகமுல் - அளவற்ற இன்பமாக, வ்ரேபல்லெலோ தோசகா - ஆயர்பாடியில் தென்பட்டது. (அஃது என்னவெனில்) பத்ராஹாரமுசேத - இலைகளையே தங்களது உணவாகக் கொண்ட, நிர்மமதுலை புண்யாத்முலே — அகந்தையற்ற தவத்தினால் அழிவற்ற புண்ணியம் செய்தவர்களான, ப்ரும்ஹக்ஞ்யுல் — ப்ரும்ஹ க்ஞானிகள் (மறு பிறவியில் கோபியராகத் தோன்றிய), கோபிகல் — அந்த கோபியர் (ஆயர்குடிப் பெண்கள்) ஈரீதிகா—இவ்விதமாக, புத்ரகார தனம்புலன்—குழந்தை களையும், ஏனைய செல்வங்களையும், யரசிரே—மறந்து விட்டார்களே!

கருத்து: பிர்ம ஞானிகளே* அந்த கோபியர்— தங்களது குழந்தைகளையும், ஏனைய செல்வங்களையும் துறந்து நந்த கோகுலத்தில் கண்ணனுடன் விளையாடிய அற்புத நிகழ்ச்சிகளைக் கூறுகிறேன் கேளுங்கள்.

---

* சக்ரவர்த்தித் திருமகனான ஸ்ரீ ராமன் தனது தந்தையின் சொல்லைக் காக்க பதினான்கு ஆண்டுகள் வனவாசத்தை மேற் கொண்டபோது 'தண்டக வனத்தில்' யாத்திரை செய்தான். அங்கிருந்து தவம் புரிந்த முனிவர்களும் பிர்ம ஞானிகள் 'ஆடவர் மெச்சு அவாவு தோளின'னான ராகவனைத் தழுவ எண்ணங் கொண்டு தங்கள் விருப்பத்தை அவனிடம் கூற, அது கேட்ட ராகவன் "இப்பிறப்பில் பிற மாதரைச் சிந்தையாலும் தொடேன்'.' உங்கள் விருப்பத்தை அடுத்த அவதார காலத்தில் நிறைவேற்று வோம் என்றும், நீங்கள் நந்த கோகுலத்தில் கோபியராகவும், பசுக்களாகவும், கன்றுக ளாகவும், அங்கு மரம், செடி, கொடிக ளாகவும், எமக்கு முன்னரேயே தோன்றி வாழ்ந்து வருவீர்களாக. அப்போது யாம் ஸ்ரீ கிருஷ்ணனாகத் தோன்றி உமது எண்ணத்தை நிறைவேற்றுவோம்' என்று கூறியருளினான். அந்த தபோதனர்களே நந்த கோகுலத்தில் கோபியராகத் தோன்றி கண்ணனுடன் திருவிளையாடல்களைப் புரிந்தனர் என்று மூல நூலில் காணப் படுகிறது.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

च. आ समयम्बुन परमात्मुण्डैन कृष्णदेवुण्डु गोपिकलयन्दु प्रेम-
गलवाडै वेणुगानम्बु[1] सेयुमार्गं वेटुलनिन

வசனம்: ஆ ஸமயப்புன பரமாத்முண்டைன க்ருஷ்ண தேவுண்டு கோபிகலயந்து ப்ரேமகலவாடை வேணு கானம்பு ஸேயு மார்கம்பு எடுலனின.

क. ९. मुरहरु डानन्दमुतो
मुरळिनि गोनि सकलजनुलु मोहिम्पग[2] दा
स रि ग म प द नि स यनुचुनु
गरुणनु करजमुलचेत गानमु सल्पेन्

நூல்

க. 9 முரஹருடானந்தமுதோ
முரளினி கொனி ஸகல ஜனுலு மோஹிம்பக தா
ஸரிகம பதநிஸ யனுசுனு
கருணனு கரஜமுலசேத கானமு ஸல்பென்

முரஹருடு - முரன் என்னும் அசுரனை அழித்தவனை அந்த கண்ணன், ஆனந்த முதோ முரளிநி கொனி - மிகுந்த மகிழ்ச்சியுடன் புல்லாங்குழலைக் கைக்கொண்டு, ஸகல ஜனுலு மோஹிம்ப - அனைவரும் (அந்த இசையில்) மோஹம் கொள்ளுமாறு, தா - தான், ஸரிகம பதநிஸ் யநு சுநு - ஸரிகம பதநிஸ் என்ற ஸ்வரங்களினால். கருணநு கரஜமுலசெத காநமு — கருணாரஸம் ததும்ப கைவிரல்களால் எழுப்பும் இன்னிசையை, ஸல்பெநு - எழுப்பினான்.

---

1. वेणुगानमु
2. मोहिम्पचुता

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

கருத்து : ஆயர்பாடியில் வளர்ந்து வரும் கண்ணன், அனைவரும் மகிழும் வண்ணம் தனது குழலை எடுத்து ஆனந்தமாக இசைத்தான். கருணாரஸம் ததும்பும் அந்த குழலிசையைக் கேட்ட மக்கள் அனைவரும் பரவசமடைந்து அந்த நாத வெள்ளத்தில் மோகமடைந்தனர்.

व. गोपिकामणुलु वेणुगानम्बुनु विनि येमोनरिञ्चुचुन्नारु

வசனம் : கோபிகாமணுலு வேணுகானம்புனு விநி யேமொனரிஞ்சு சுன்னாரு.

क. १०. वीनुल वेणुरसामृत

पानम्बु जेसिचेसि बलु विरहमुचे

श्रीनाथुनि वेदकुचु गज

यानलु मरि वीथिवीथि करगिरि समतन्

க. 10 வீனுல வேணுரஸாம்ருத

பானம்பு ஜேஸி சேஸி பலு விரஹமுசே

ஸ்ரீ நாதுனி வெதகுசு கஜ

யானலு மரி வீதிவீதி கரகிரி மமதன்

வீநுல - செவிகளால், வேணு ரஸாம்ருத பாநமு ஜேஸி சேஸி - குழலின் இனிய கானத்தைப் பருகி, அதனால், பலுவிரஹமுசே - மிகுந்த தாபத்தையுடையவர்களாய் ஸ்ரீ நாதுநி - கண்ணனை வெதகுசு - தேடிக்கொண்டு கஜயாநலு - யானையின் நடைபோன்று கம்பீர நடையுடைய கோபிகைகள், வீதி விதி மரி - திரும்பத் திரும்ப பல வீதிகளில் (கண்ணனைத்) தேடிக்கொண்டு, மமதன் கரகிரி - அகந்தை கரைந்த மனத்துடன் கண்ணனிடம் வந்தனர்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

கருத்து. குழலின் இனிய இசையால் கவரப்பட்ட கோபியர், அக் குழலோசை வந்த வழி எங்கும் சுற்றி அலைந்து கண்ணனிடம் வந்தடைந்தனர்.

व. आ समयम्बुन कृष्णदेवुण्डु पण्डुकोने व्याजमुन करमुल मुत्यमुलु
निडुकोनि नडचि वच्चे मार्गम्बेटु वलेनु.

வசனம்: ஆ ஸமயம்புன க்ருஷ்ண தேவுண்டு பண்டு கொனே வ்யாஜமுன கரமுல முத்யமுலு நிடுகொனி நடசி வச்சே மார்கம் பெடுவலெனு.

क. ११. मुङ्गिट ग्रम्मिन मेघपु
सङ्घमु लेडबासिनट्टि चन्दुरु वग ने
मुङ्गुरुलनु तोलगिम्प जे-
लङ्गेडि श्रीकृष्णु मोमु ललनलु वेडन्[1]

போகத்தையே அனுபவிப்பதாக எண்ணி மகிழ்ந்தவர். எல்லையில்லா ஆனந்தத்துடன் பாடிக்கொண்டே ஓடத்தை மிதக்கவிடலாயினர்.

वचनम् — अन्तट गोपिकामणुलु कृष्णब्रह्मानन्दावेशम्बु गलवारलै येमनुचुन्नारु.

வசனம் ; அந்தட கோபிகாமணுலு க்ருஷ்ண ப்ரம்ஹானந்தாவேசம்பு கலவாரலை யேமனுசுன்னாரு.

रागमु : भैरवी] दरु—७ [ताळमु : चापु

पल्लवी

तनयन्दे प्रेम यनुचु विरिबोणुलु
तलतेलियक नाडेदरु[1]

अनुपल्लवी

अनयमु मोहमु मीरग कृष्णुडु
नन्दरि कन्नि रूपमुलेत्ति याडग

चरणम्

कोन्दरि वक्षारु कोङ्गुलु वट्ट
कोन्दरि पदमुलु बागुग नेट्ट[2]
कोन्दरि सोगसुनु कनुलार जूड
कोन्दरि मनसु देलिसि माटलाड ॥ १ ॥

---

1. नाडेरु. 2. मेट्ट.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

कोन्दरि यक्षुनु [1]पंत्रव्लिम्प
कोन्दरि पेदवुल बलुकेम्पुलुञ्च
कोन्दरि तनुवुल करलील सेय
कोन्दरि वेनक निलिचि जडं बेय ॥ २ ॥

कोन्दरि नुदुट कस्तूरि बोट्टु वेट्ट
कोन्दरि तळुकु चेक्कुल मुद्दु बेट्ट
कोन्दरि पालिण्ड्ल पञ्चीरु जिल्क
कोन्दरितो त्यागराजनुतुडु वल्क ॥ ३ ॥

தரு—7

ராகம் : பைரவி] [தாளம் : சாபு

பல்லவி

தனயந்தே ப்ரேம யனுசு விரிபோணுலு
தலதெலியக நாடெதரு[2]

அனுபல்லவி

அனயமு மோஹமு மீரக க்ருஷ்ணுடு
நந்தரி கன்னி ரூபமுலெத்தி யாடக

சரணம்

கொந்தரி பங்காரு கொங்குலு பட்ட
கொந்தரி பதமுல பாகுக நெட்ட[3]
கொந்தரி ஸொகஸுனு கநுலார ஜூட
கொந்தரி மனஸு தெலிஸி மாடலாட 1

---

1. पञ्चलिञ्च. 2. நாடேரு. 3 மெட்ட.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

கொந்தரி யங்கமுநநு பவ்வளிம்ப
கொந்தரி பெதவுல பலுகெம்பு லுஞ்ச
கொந்தரி தநுவுல கரலீல ஸேய
கொந்தரி வெநக நிலிசி ஜட வேய 2

கொந்தரி நுதுட கஸ்தூரி பொட்டு பெட்ட
கொந்தரி தளுகுசெக்குல முத்து பெட்ட
கொந்தரி பாலிண்ட்ல பன்னீரு ஜில்க
கொந்தரிதோ த்யாகராஜநுதுடு பல்க 3

பல்லவி: விரிபோணுலு—(அந்த ஓடத்தில் செல்லும்) நீண்ட கூந்தலுடைய இளம் பெண்கள், தநயந்தே ப்ரேம யநுசு—தன்னிடம் மட்டுமே மிகுந்த ஆசையுடன் கண்ணன் இருக்கிறான் என்று, தல தெலியகநு ஆடேதரு — தலை தெரிக்க மனமகிழ்ச்சியுடன் ஆடினர்.

அனுபல்லவி: மீரக அநயமு மோஹமு—அடங்காத மிகுத்த மோஹமுடைய (அந்த கோபியருக்கு), க்ருஷ்ணுடு— ஸ்ரீக்ருஷ்ணன், அந்தரிகி அந்நிருபமுலு யெத்தியாடக — அனைவருக்கும் அத்தனை உருவங்களை எடுத்து அவர் களுடன் விளையாடினான்.

சரணம்: 1. கொந்தரி பங்காரு கொங்குலு பட்ட — சிலரின் பட்டாடைகளின் முந்தானையைப் பற்றினான், கொந்தரி பதமுலு பாகுக நெட்ட — சிலரது பாதங்களைத் தனது பாதங்களால் அமுத்தினான், கொந்தரி ஸொகஸு கனுலாரஜூட — சில கோபியரின் அழகைக் கண்ணாரக் கண்டு ரஸித்தான், கொந்தரி மநஸு தெலிஸி மாடலாட— சிலரது மனதறிந்து அவர் மனமகிழுமாறு பேசினான்.

2. கொந்தரி அங்கமுநநு பவ்வலிப்ப — சிலரது மடியில் சாய்ந்திருந்தான், கொந்தரி பெதவுல பலுகெம்பு லுஞ்ச — சிலரது உதடுகளில் பற்குறியிட்டான், கொந்தரி

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

தநுவுல கரலீல ஸேய—சிலரது உடலில் தனது விரல்களால் கிள்ளி விளையாடினான், கொந்தரி வெநக நிலிசி ஜடவேய — சிலரது கூந்தலை ஒழுங்கு செய்து பின்னி விட்டான்.

3. கொந்தரி நுதுடு கஸ்தூரி பொட்டு பெட்ட — சிலரது நுதலில் கஸ்தூரித்திலகமிட்டான், கொந்தரி தளுகு செக்குல முத்துபெட்ட — சிலரது தளதளப்பான கன்னங்களில் முத்தமிட்டான், கொந்தரி பாலிண்ட்ல பன்னிரு ஜில்க — சிலரது மார்பகங்களின்மீது பன்னீர் தெளித்தான், கொந்தரிதோ த்யாகராஜ நுதுடு பல்க — சிலரிடம் தியாக ராஜனால் வணங்கப்படும் கண்ணன் பேசவும் செய்தான்.

கருத்து : சுவர்க்கபோகத்தையே அனுபவிப்பதாக எண்ணிய அக்கோபியர் கண்ணனுக்குத் தம்மிடமே ப்ரேமை என்று கருதிய பிர்மானந்த (பேரானந்த) அனுபவத்தை அடைந்து தலைகால் புரியாமல் மகிழ்ச்சியில் தத்தளித்து ஆடிப்பாடினர். இதனை மேன்மேலும் மிகைப் படுத்த ஸ்ரீ கிருஷ்ணன், அக்கோபியர்கள் நினைத்தபடி அத்தனை பேருக்கும் உகந்தவாறு அத்தனை உருவங் களையும் எடுத்து மனம் மகிழுமாறு சமயோஜிதமாகத் தக்கபடி பேசி அவர்களை மகிழச் செய்தான். சிலரது மடியில் சாய்ந்து படுத்தான். சிலரது உதடுகளில் முத்த மிட்டு பற்குறி வைத்தான். சிலரது உடல்மீது அங்க சேஷ்டைகளைச் செய்தான். சிலரின் கூந்தலை ஒழுங்கு செய்து பின்னிவிட்டான். சிலரது நுதல்களில் கஸ்தூரித் திலகமிட்டான். சிலரது தளதளப்பான கன்னங்களில் முத்தமிட்டான். சிலரது நகில்களில் பன்னீரைத் தெளித்தான். இப்படியே தியாகராஜனால் வணங்கப்படும் கண்ணன் இன்பமாகப் பேசவும் செய்தான்.

वचनम्— आ समयम्बुन ब्रह्मेन्द्रादि सुरुलेल्ल येमि सेयुचुन्नारु

வசனம் : ஆ ஸமயம்புன ப்ரம்ஹேந்த்ராதி ஸுருலெல்ல யேமி ஸேயுசுன்னாரு.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

क. २०. वनितल हृदयमु कनुगॊनि
घन सरसक्रीड सल्पु करुणानिधिपै
कनक कुसुमवर्षमुलुग
घन वानलु गुरिजेसि गाञ्चिरि प्रेमन्

கு. 20. வநிதல ஹ்ருதயமு கநுகொநி
கன ஸரஸக்ரீட ஸல்பு கருணாநிதிபை
கநக குஸுமவர்ஷமுலுக
கன வானலு குரிஜேஸி காஞ்சிரி ப்ரேமன்

வநிதலு ஹ்ருதயமு கநுகொனி — வனிதையரின் இதயத்திலிருந்த எண்ணங்களை அறிந்துகொண்டு, கன ஸரஸ க்ரீட ஸல்பு கருணாநிதிபை—சரஸக்ரீடை செய்த கருணைக்கடலான ஸ்ரீக்ருஷ்ணன் மீது, கனவாநலு — தேவர்குழாம், கநக குஸும வர்ஷ முலுக—பொன்மலர் மாரி பொழிந்து. ப்ரேமன் — மிகுந்த ப்ரேமையுடன், குரிஜேஸி காஞ்ஜிரி-வைத்தகுறி வாங்காது கண்ணனையே கண்டனர்.

கருத்து : ஓடத்திலிருந்த கோபியரின் உள்ளத்தை அறிந்தமையால், அவர்கள் விருப்பியபடியே சரஸக்கிரீடை செய்தான் கண்ணன். இத் திருவிளையாடல்களைக்கண்டு ஆச்சரியமடைந்த தேவர்குழாம் கண்ணன்மீது பொன் மலர் மாரி பொழிந்தனர். மேலும் அங்கு நடைபெறும் காட்சிகளைக் காண ஆவல்கொண்டு வைத்தகண் மாறா மல் கண்ணனையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

वचनम्— अन्तट मत्तकामिनुलु यौवन मदान्धकारुलै येमि सेयुचुन्नारु.

வசனம் : அந்தட மத்தகாமினுலு யௌவன மதாந்த காருலை யேமிஸேயுசுன்னாரு.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

२१. चम्पकमाला

कुचमुलपै जेलङ्गेडि दु
कूलमुलं बिगियिञ्चि पुष्पमुलु
कचमुललो धरिञ्चुचुनु
कान्तलु कोललु बट्टि कृष्णुनितो
वचनमु लाडुचु न्मलय
वातमु वीवग गर्वशैल मे-
ककुचु सुमबाण लीललनु
मूरिमि बाडुचु नोड दोयगन् ॥

சம்பகமாலா பத்யம்

21. குசமுலபை ஜெலங்கெடி து
கூலமுலன் பிகியிஞ்சி புஷ்பமுல்
கசமுலலோ தரிஞ்சுசுனு
காந்தலு கோலலு பட்டி க்ருஷ்ணுனிதோ
வசனமு லாடுசுன் மலய
வாதமு வீவக கர்வசைல மெக்-
குசு ஸுமபாண லீலலனு
சூரிமி பாடுசு நோட தோயகன்

கோபியர் அணிந்திருந்த, துகூலமுலம் குசமுலபை ஜெலங்கெடி—வெண்மை நிற மேல்சுச்சைகளை கொங்கைகளில். பிகியிஞ்சி-இழுத்துக் கட்டிக்கொண்டு—புஷ்பமுலு கசமுலலோ தரிஞ்சு சுநு—மலர்களைக் கூந்தலில் அணிந்து கொண்ட, காந்தலு—கோபியர், க்ருஷ்ணுநிதோ வசனமுலாடுசுன்-கண்ணனுடன் பேசிக்கொண்டிருக்கும்போதே, மலயவாதமு வீவக—தென்றல் காற்று வீச. கர்வ சைல

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

மெக்குக — கர்வம் மீறூர்ந்தவர்களாய், ஸும பாண விலஸு கூரிமி பாடுகல் — மன்மத விளையாட்டைக் குறித்த பாடல்களைப் பாடிக்கொண்டே, கோலலு பட்டி ஓட தோயகல் — படகுத் துடுப்லை கைக்கொண்டு ஓடத்தை (யமுனையில்) நீரில் செலுத்திக்கொண்டே யிருந்தனர்.

கருத்து: அச்சமயம் அழகிலும், இளமையிலும் கர்வம் கொண்டிருந்த அந்த கோபியர், தங்களது கொங்கைகளை மறைத்துக்கொண்டிருந்த வெண்ணிற முடைய கச்சைகளை இழுத்துக் கட்டிக்கொண்டும், மலர்களைக் கூந்தலில் அணிந்துகொண்டும் கண்ணனுடன் உரையாடினர். அப்போழ்து தென்றல் காற்று மெல்ல வீச, மதம்கொண்ட கோபியர் மன்மதனின் விளையாடல்களைக் குறித்த பாடல்களைப் பாடிக்கொண்டே படகுத்துடுப்பை வீசி ஓடத்தைத் தண்ணீரில் செலுத்தினர்.

ओडपाट दरु—८

रागमु : पुन्नागवराळि*] [ताळमु : रूपकमु

पल्लवि

ए नोमु नोचितिमो चेलुल
सेदान मोसगितिमो

अनुपल्लवि

श्रीनाथु कोलुवमरे चेलुलु
चेक्किळ्ळु [1]नोत्तुचुनु
मानक मोवानुचु [2]चन्द्रा-
ननु हृदयमुन नुञ्च

* தரு போல பாடவேண்டுமென சுவடியில் குறிக்கப்பட்டுள்ளது.

1. नोक्कुचुनु, 2. चन्द्रानुनि

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

चरणम्

श्रीरत्नमुलु मनमु चेलुलु
श्रीमिञ्चु यौवनमु
वारिज लोचनुड्ड चेलुल
पालायेगद! वम्म
कोरिक लीडेरनु यदु-
वीरुनि कनुलार जूड ॥ १ ॥

बङ्गारु सोम्मुलनु चेलुलु
बागुगा बेट्टुकोनि
शृङ्गाराम्बरमुलनु चेलुलु
चेलुवोन्द गट्टुकोनि
सङ्गतिगा नङ्गमुलु शु-
भाङ्गुनिकि [1]नोसगग मन– ॥ २ ॥

पोङ्गारु ईनदिलो चेलुलु
पोन्दुगा गुमि गूडि
मङ्गळाकारुनितो चेलुलु
मनसार गूडितिमि
रङ्गपति युप्पोङ्गुचु मन
चेङ्गटनु जेलङ्गग मन– ॥ ३ ॥

---

1. नोसगुचु

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

वागीशाद्यमरुलकु चेलुल
वर्णिम्प तरमौने
त्यागराजाप्तुनितो चेलुलु
भोगमु लन्दुचुनु
बागुग दमिरेगगनु नय
रागमु लीलागु बाडनू— ॥ ४ ॥

ஓடப்பாட்டு தரு—8

ராகம்: புன்னாகவராளி] [தாளம்: ரூபகம்

பல்லவி

ஏ நோமு நோசிதிமோ செலுல
மேதான மோஸகிதிமோ

அனுபல்லவி

ஸ்ரீ நாது கொலுவமேர செலுலு
செக்கிள்ளு நொத்துகரு
மாநக மோவானுகு சந்த்-
ரானனு ஹ்ருதயமுந நுஞ்ச

சரணம்

ஸ்ரீ ரத்நமுலு மநமு செலுலு
ஸ்ரீமிஞ்சு யௌவநமு
வாரிஜ லோசநுடு செலுல
பாலாயெகத வம்ம
கோரிக வீடேரெனு யது
வீருனி கனுலார ஜூட 1

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

பங்காரு லொம்முலனு செலுலு
பாகுகா பெட்டுகொனி
ச்ருங்காராம்பரமுலனு செலுலு
செலுவொந்த கட்டுகொனி
ஸங்கதிகா நன்கமுலு சு-
பாங்குனிகி நொஸகக[1] மன 2

பொங்காரு ஈ நதிலோ செலுலு
பொந்துகா குமிகூடி
மங்களாகாருனிதோ செலுலு
மனஸார கூடிதிமி
ரங்கபதி யுப்பொங்குசு மன
செங்கடனு ஜெலங்கக மன 3

வாகீசாத்யமருலகு செலுல
வர்ணிம்ப தரமெளனே
த்யாகராஜாப்துனிதோ செலுலு
போகமு லந்துகுனு
பாகுக தமிரேககனு நய
ராகமு வீலாகு பாடந் 4

பல்லவி: செலுலமு — பெண்களாகிய நாம், ஏ நோமு நோசிதிமோ? — எந்த நோன்பை நோற்றோமோ? ஏ தானமு ஒஸகிதிமோ? — எந்த தானம் செய்தோமோ தெரியவில்லை.

அனுபல்லவி: ஸ்ரீ நாது கொலுவமரே - ஸ்ரீ நாதனான கண்ணன் கொலுவிருக்க, செலுலு செக்கிள்ளு நொத்துசுநு- நமது கன்னத்தோடு அவன் கன்னம் அழுந்தவும், மா நக மோவானுக — அவன் நமது இதழ்ச் சுவையை மீண்டும்

1. நொஸகுசு,

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

மீண்டும் அனுபவிக்கவும். சந்த்ராநநு ஹ்ருதயமுந நுஞ்ச— சந்திரனை நிகர்த்த முகமுடைய கண்ணனின் திருமுக மண்டலம் நமது இதயத்தில் என்றும் நிலைத்து நிற்கவும் (எந்த நோன்பு நோற்றோமோ? தெரியவில்லை?)

சரணம்: 1. ஸ்ரீமிஞ்சு யௌவனமு — மஹாலக்ஷ்மியைக் காட்டிலும், யௌவனமுடைய. ஸ்ரீரத்னமுலு — ஸ்த்ரீ ரத்னங்களான, செலுலு — கோபியராகிய நம்மை, வாரிஜ லோசநுடு பாலயேகத வம்ம! — தாமரைக் கண்ணன் காப்பவனல்லவா? (அதுமட்டுமா?) யது வீருநி கநுலார ஜூட — யது குலத்தின் வீரனாகத் திகழும் கண்ணனைக் கண்ணாரக் காணவேண்டும் என்ற, செலுலு கோரிகலு ஈடேரநு — (சிறுமிகளான) நமது கோரிக்கை நிறைவேற (என்ன நோன்பு நோற்றோமோ தெரியவில்லை).

2. செலுலு — சிறுமிகளான, பங்காரு சொம்முலுநு பாகுகா பொட்டுகொநி — பொன்னாபரணங்களை அழகாக அணிந்து கொண்டும், ச்ருங்காராம்பரமுலநு — அழகு மிகுந்த ஆடைகளை, செலுவொந்த கட்டுகொநி — பாங்காக உடுத்திக்கொண்டும். ஸங்கதிகாநு — இங்கிதமாக, மநமு அங்கமுலு — நமது அங்கங்களை, சுபாங்குநிகி நொஸகக — மங்களகரமான அங்கங்களையுடைய கண்ணனுக்கு அளிக்க—(எத்தகைய நோன்பை நோற்றோமோ?— தெரியவில்லை).

3. பொங்காரு யீ நதிலோ—பொங்கிப் பெருகிவரும் இந்த யமுனை நதியில், செலுலு பொந்துகா குமிகூடி — சிறுமிகளாகி நாம் அனைவரும் ஒன்றாகக் குழுமி. மங்களாகாருநிதோ மனஸார கூடிதிமி — சுபலக்ஷணங்கள் பொருந்திய கண்ணனுடன் மனமாரக் கூடினோம், ரங்கபதி — (அந்த) கண்ணனும், யுப்பொங்குசு — மிகுந்த உற்சாகத்துடன், மந செங்கடநு ஜெலங்கக—நமதருகில்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

அமர்ந்திருக்க — (நாம் என்ன நோன்பு நோற்றோமோ?— தெரியவில்லை.)

4. வாகீசாதி அமருலகு — பிரம்மாதி தேவர்களும், வர்ணிம்ப தரமௌனே — அவனை வர்ணிக்க முடியாத போது, த்யாகராஜாப்துனிதோ — தியாகராஜனின் நண்பனான ஸ்ரீக்ருஷ்ணன். போகமுலு அந்துசுனு—சகல போகங்களையும் அளித்துக்கொண்டு இருக்க, பாகுக தமிரே ககநு நயராகமுலீலாகு பாட — அவன்மீது ரக்தி ராகங்களை ப்ரேமையுடன் பாடி, அவன் மகிழ நாம் பூர்வ ஜன்மத்தில் (எந்த நோன்பு நோற்றோமோ தெரிய வில்லை.)

கருத்து: கண்ணனைக் குறித்து ஓடப்பாட்டைப் பாடிக்கொண்டே படகைச் செலுத்திய கோபியர் கண்ணனுடன் அவனெதிரே தாங்கள் படகுச் சவாரி செய்வதை மிகப் பெருமையாக எண்ணி மனம் பூரித்து மகிழ்ந்தனர்.

இத்தகைய பெரும்பேறு கிடைக்க என்ன நோன்பு நோற்றோமோ? எந்த தானம் செய்தோமோ? என்ன புண்ணியம்புரிந்தோமோ? தெரியவில்லை.

எங்கள் ஸ்ரீநாதன் கொலுவிருக்க நம் கன்னத்துடன் அவன் கன்னம் அழுந்தவும், இதழ்ச் சுவையை அனுபவிக்க வும், நாம் என்ன புண்ணியம் செய்தோமோ?

சந்திரனை நிகர்த்த அவனது திருமுக மண்டலம் என்றுமே நமது மனத்தில் அழியாச் சித்திரம்போல் விளங்க என்ன புண்ணியம் செய்தோமோ தெரியவில்லை?

ஸ்ரீரத்தினம் போன்ற நம்மைக் காக்கும் காவலன் அல்லவா? அவன். ஆயர்குலக் கொழுந்தைக் காணத் துடித்த நமது கோரிக்கை இன்றே முழுமை பெற்றது.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

இத்தகு செயலுக்கு நாம் என்ன புண்ணியம் புரிந்தோமோ?

மங்களகரமான பொன்னாபரணங்களை அணிந்து கொண்டும், பட்டாடைகளைப் பாங்காக உடுத்திக் கொண்டும் திகழும் நம்மைக்கண்டு கண்ணன் நம்மை அனுபவிக்க நாம் செய்த புண்ணியம்தான் என்ன? பெருகி வரும் யமுனையில் நாம் அனைவரும் கூடியிருக்க, அவனும் நமதருகில் அமர்ந்திருக்க எந்த நோன்பு நோற்றோமோ? தெரியவில்லை. அவனழகை பிர்மாதி தேவர்களும் வருணிக்க முடியாதபோது பெண்களாகிய நம்மால் எப்படி வர்ணிக்க முடியும்?

वचनम्— अन्तट गोपिकामणुलु हृदयम्वेरुङ्गुटकैं श्रीकृष्णुदेवुण्डु बलिके देट्टुवलेनु.

வசனம்: அந்தட கோபிகாமணுலு ஹ்ருதயம் பெருங்குடகை ஸ்ரீ க்ருஷ்ண தேவுண்டு பலிகெ தெடுவ லெனு.

२२. चम्पकमाला

कुसुमपु वासनल्विसरि
कोकिलनादमु लिन्दु म्रोयगा
गोसरुचु मिम्मु वेड्डुचुनु
गोर्कॅलु दीर्पनु ना सरेव्वरे
अशदशमैन मी सांगमु
लज्जभवादुलकैन गल्गुने
मसल(क) चित्क कोललनु
माटिकि पश्चिमदिक्कु [1]नुम्परे.

1. नुब्बरे.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

சம்பகமாலா பத்யம்

22. குஸுமபு வாஸனல் விஸரி
கோகிலநாதமு லிந்து ம்ரோயகா
கொலருகு மிம்மு வேடுகனு
கோர்கெலு தீர்பனு நா ஸரெவ்வரே
யசத்ருசமைன மீ ஸொகஸு
லப்ஜ பாவாதுலகைன கல்குனே
மஸலக சில்க கோவலனு
மாடிகி பச்சிமதிக்கு நும்பரே

குஸும வாஸநல் விஸர — மலர்களின் நறுமணம் எங்கும் கமழ. கோகில நாதமுலிந்து ம்ரோயக—குயில்கள் கூவும் இனிய நாதவொலி எங்கும் ஒலிக்கும் இந்த நேரத்தில், கொலருகு மிம்மு வேடுகநு — உங்களுக்கு நான் தெரிவிப்பது யாதெனில், கோர்கெலு தீர்ப்பநு நா ஸரியெவ்வரே — உங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுபவன் எனக்குச் சமமானவன் யார்? அஸத்ருஸமைந மீ ஸொகஸுலு—ஈடிணையற்ற உங்களது பேரழகு, அப்ஜ பவாதுலகைந கல்குநே—பிர்மாதி தேவர்களுக்கும் கிட்டுமோ? சில்க கோவலு — பச்சைக்கிளி உருவம் செதுக்கிய அந்த படகுத் துடுப்புக்களை, பச்சிமதிக்குநும் பரே மஸலக மாடிகி — மேற்குத்திசைப் பக்கமாக (நதியின் போக்கை எதிர்த்து) விரைவாகப் போட்டுத் துழாவுங்கள்.

கருத்து: நறுமலர் மணம் எங்கும் கமழ. குயிலோசை இனிமையாக ஒலிக்கும் இந்த வேளையில் நான் கூறுவதைக் கேளுங்கள். பிர்மாதி தேவர்களுக்கும் கிட்டாத பேரழகை நீங்கள் பெற்று இருக்கிறீர்கள். உங்களது உள்ளத்திலுள்ள கோரிக்கையை என்னிடம் தெரிவியுங்கள். அதனைப்பூர்த்திசெய்ய வேறு யார் இவ்வுலகில் உள்ளனர்? ம்......ம்...... சொல்லுங்கள்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

वचनम्— अन्तट ललनामणुलु कृष्णुनि वचनम्बुलु कपटम्बुगा नेञ्चुकोनि वलिकेदेटुवलेनु.

வசனம்: அந்தட லலனா மணுலு க்ருஷ்ணுனி வசனம்புலு கபடம்புகா நெஞ்சுகொனி பலிகே தெடுவுலெனு

क. २३. सोगसेगा! निनु न-

म्मगरादपकीर्ति गादे? महिलोपल नी

वगलेल्ल गट्टिपेट्टुमु

नगधर! मावद्द निङ्क नडुवदु सुम्मी

க. 23. ஸொகஸேகா[1] நிநு நம்
மரா தபகீர்த்தி காதே மஹிலோபல நீ
வக வெல்ல கட்டி பெட்டுமு
நகதர! மாவத்த நிங்க நடுவது ஸும்மீ

கோபியர்:

ஸும்மீ—ஏய் (கண்ணா). ஸொகஸெகா—மிக அழகு! மிக அழகு!, நின்னு நம்மகராது— உன்னை நம்பக்கூடாது என்று, மஹிலோபல அபகீர்த்தி காதே—இந்த உலகில் அபகீர்த்தி இருக்கிறதல்லவா? நகதர—குன்றம் ஏந்திய குமரனே! வகலெல்ல கட்டி பெட்டுமு—(உனது தந்திரமான செயல்களை) மூட்டை கட்டிவை. மாவத்தன் இங்க நடுவது — எங்களிடத்தில் (உனது தந்திரங்கள்) இனி நடவாது.

கருத்து: குன்றம் ஏந்திய குமரா! நீ கூறுவது மிக மிக அழகு. மேற்குத் திக்கிலா? நதியை எதிர்த்தா ஓடத்தைச்

1. ஸொகஸுலகேமி.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

செலுத்தவேண்டும்? போதும் போதும் உன் தந்திரப் பேச்சு. உன்னை நாங்கள் நம்பவே மாட்டோம். உன்னை நம்பக்கூடாதென்று உலகில் உனக்கு அபகீர்த்தியும் இருக்கிறதல்லவா? ஆதலால் உனது தந்திரங்களை இனி மூட்டை கட்டி வைத்துவிடு. உனது தந்திரங்கள் எங்களிடம் இனிமேல் செல்லாது, என்றனர் கோபியர்.

रागमु : सावेरि] यालपदमु—९ [ताळमु : रूपकमु

पल्लवि

चालु चालु नी युक्तुलु नडुवदु

सारसाक्ष! श्रीकृष्णा!

अनुपल्लवी

शूलधरादुल करुदैन ममुगूडि

सुखमु लनुभविम्पचे -श्रीकृष्णा!

चरणम्

अधर रदनमुल गनि सोक्कुचु मे

माशिञ्चि वच्चितिमि

बुधरक्षक! शल्यसारथ्य मोनरिञ्चि

बोङ्कु टेरुग मैतिमि-श्रीकृष्णा! ॥ १ ॥

खण्डचक्केरवण्टि पलुकुलुविनि मेमु

कामिञ्चि वच्चितिमि

उण्डियुण्डि बालुनिगिलि मरि तोटूल

यूचुनदेरुग मैतिमि-श्रीकृष्णा! ॥ २ ॥

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

त्यागराज नुतुडनि यतिप्रेमचे[1]
तरुणुलु वच्चितिमि
भोगिशयन! मा माटलु मीरकु
बुद्धिशालि वौदु सुमी—श्रीकृष्णा! ॥ ३ ॥

யாலபதம்

ராகம் : ஸாவேரி] [தாளம் ; ரூபகம்

பல்லவி

சாலுசாலு நீ யுக்துலு நடுவது
ஸாரஸாக்ஷ! ஸ்ரீ க்ருஷ்ணா !

அனுபல்லவி

சூவதராதுல கருதைந மமு கூடி
ஸுகமு லநுபவிம்பவே-ஸ்ரீ க்ருஷ்ணா

சரணம்

அதர ரதனமுல கனி ஸொக்குசு மே-
மாஸிஞ்சி வச்சிதிமி
புத ரக்ஷக! சல்யஸாரத்ய மொனரிஞ்சி
பொங்கு[2] டெருக மைதிமி - ஸ்ரீக்ருஷ்ணா 1

கண்டசக்கெரவண்டி பலுகுலுவினி மேமு
காமிஞ்சி வச்சிதிமி
உண்டியுண்டி பாலுனிகில்லி மரிதொட்ல
யூகனதெருக[3] மைதிமி - ஸ்ரீ கிருஷ்ணா ! 2

---

1. प्रेमतो.
2. பொங்கே தெருக. 3. நூசே தெருக.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

த்யாகராஜ நுதுடனி யதிப்ரேமசே
தருணுலு வச்சிதிமி
போகிசயன! மா மாடலு மீரகு
புத்திசாலி வெனது ஸ்வாமி - ஸ்ரீக்ருஷ்ணா 3

பல்லவி: ஸாரஸாக்ஷ ஸ்ரீக்ருஷ்ணா! — தாமரைக் கண்ணனே! ஸ்ரீகிருஷ்ணா! சாலு சாலு — போதும் போதும், நீ யுக்துலு நடுவது — உன்னுடைய தந்திரங்கள் இனி நடவாது.

அனுபல்லவி: மமுகூடி ஸுகமுலு அனுபவிம்பவே— எங்களைக் கூடி சுகத்தை அனுபவிப்பாயாக. (இது) சூலதராதுலகு அருதைந — பரமேஸ்வரன் முதலிய தேவர்களுக்கும் அருமையானது; கிடைத்தற்கு அரிதானது;

சரணம்: 1. அதர ரதநமுலகநி — உனது வரிசைப் பற்களும், பவளவாய் இதழ்களையும் கண்டு, சொக்குசு— சொக்கிப்போய், மேமு ஆசிஞ்சி வச்சிதிமி — நாங்கள் ஆசையுடன் வந்தோம். புத ரக்ஷக — அறிவாளிகளைக் காப்பவனே! ஸல்ய[1] ஸாரத்யமு ஒனரிஞ்சி ஸ்ரீக்ருஷ்ணா-

---

1. ஸல்ய ஸாரத்யம்: கர்ணனை கௌரவப்படையின் சேனாபதி ஆக்குகிறான் துர்யோதனன். தனக்குச் சிறந்த சாரதி வேண்டுமென்று கர்ணன் துர்யோதனனைக் கேட்க, துர்யோதனன் மத்திர தேசத்து அரசனான சல்யனை கர்ணனுக்கு ஸாரதியாகச் செல்லவேண்டும் என்று துர்யோதனன் விரும்ப, அதனை மீற முடியாமலும், உள்ளன்புடன் கர்ணனுக்குத் தேர் ஓட்ட எண்ணமில்லாமலுமிருந்த சல்லியன் 'கர்ணனை, பேசியே கெடுக்க வேண்டும் என்று தீர்மானித்து' கர்ணனுடன் பேசியே போரில் அவனது கவனத்தைத் திருப்பிக் கொண்டிருந்தான் என்றும், கர்ணனின் தோல்விக்கு சல்யனும் ஒரு காரணம் என்றும் பாரதத்தில் காணப்படுகிறது. இங்கு கோபியர் 'சல்லிய சாரத்தியம் செய்யும் கண்ணா' என்று அழைப்பது, எங்களுடன் பேசிப் பேசியே காரியத்தைக் கெடுப்பதுடன், எங்களது கவனத்தையும் திருப்புகிறாயே! என கிறுங்கினர் என்பது தொனிப்பொருள்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

சல்ய சாரத்யம் செய்யும் ஸ்ரீகண்ணா! பொங்கு டெருக மைதிமி — (எங்களுக்கு) பொய் சொல்லத்தெரியாது.

2. மேமு காமிஞ்சி வச்சிதிமி — நாங்கள் ஆசையுடன் வந்திருக்கிறோம் (ஆனால் நீயோ), கண்ட செக்கெர வண்டி பலுகுலு விநி—கற்கண்டு போல மிக இனிமையாகப் பேசுகிறாய், யுண்டி யுண்டி — இருந்தும், பாலுநி கில்லி — குழந்தையைக் கிள்ளி, மரி — பின், தொட்ல ஊசுந தெருக மைதிமி — தொட்டிலையும் ஆட்டிவிடுகிறாய் ஸ்ரீக்ருஷ்ணா !

3. த்யாகராஜ நுதுட நி - தியாகராஜனால் வணங்கப் படுகின்றவன் என்று, அதிப்ரேமசே தருநுலு வச்சிதிமி - மிகுந்த ஆசையுடன் (குமரிகளான நாங்கள்) வந்தோம், போகிசயன - பாய்பணையில் பள்ளிகொண்ட பெருமகனே! மா மாடலு மீரகு - எங்களது சொற்களை மீறவேண்டாம், புத்திசாலி வைது - புத்திசாலித்தனமாக நடந்துகொள்.

கருத்து: கபடமாகக் கண்ணன் கூறுகிறான் என்பதை அறிந்த கோபியர் கண்ணனிடம் கெஞ்சியபடியே பேசத் தலைப்பட்டனர்.

கண்ணா! போதும்! போதும்! உன் தந்திரப் பேச்சு. இனி உனது தந்திரங்களில் நாங்கள் மயங்கமாட்டோம். தனிமையாக உன்னுடன் வந்தோம். "எங்கள் அழகும், இளமையும் தேவர்களுக்கும் கிடைக்காதவை" என்பதை நீ தெரிந்துகொள்ளவேண்டும். கிடைத்தற்கரியவை தனித்து வந்துள்ளன ... ... அல்லவாவே!

உனது முத்துப் போன்ற பல் வரிசையும், பவளவாய் இதழ்களையும் கண்டு சொக்கி ஆசையுடன் வந்தோம். நீ சல்லியன் போல் கற்கண்டாகப் பேசியே காலங்கழிக்கிறாய். "குழந்தையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டிவிடும் சாமர்த்தியக்காரன் என்பதை தெரிந்து கொள்ளாமற் போனோம். குமரிகளான நாங்கள் தனிமையில் உன்னுடன்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

வந்தோம். பாம்பணையில் பள்ளிகொள்பவன் நீ. எங்கள் சொற்களை மீறவேண்டாம், புத்திசாலித்தனமாக நடந்து கொள்" என்று கோபியர் இருகருத்து தொனிக்கக் கண்ணனிடம் பேசினர்.

वचनम्— अन्तट गोपिकामणुलु रूपसौन्दर्य यौवन गर्व मदम्बुलचेत आत्म-सन्तोषमुलु बलिकि येमनुचुन्नारु.

வசனம்: அந்தட கோபிகாமணுலு ரூப ஸௌந்தர்ய யௌவன கர்வ மதம்புலசேத ஆத்ம ஸந்தோஷமுலு பலிகி[1] யேமனுசுன்னாரு.

क. २४ लज्ञलु सुरपति सभलो
गुञ्जर दनुजारि [2]सभनु गुतुकमु गदुरन्
गञ्जजु सभलो वेड्कग
मञ्जुळमुख लाडुकोनिरि माधवु [3]जूडन्

க. 24. லஞ்ஜலு ஸுரபதி ஸபலோ
குஞ்ஜர தனுஜாரி ஸபனு[4] குதுகமு கதுரன்
கஞ்ஜஜு ஸபலோ வேட்கக
மஞ்சுளமுகு லாடுகொனிரி மாதவுஜூடன்[5]

ஸுரபதி ஸபலோ லஞ்ஜலு—தேவேந்திரன் ஸபையில் (அப்ஸரஸ்) அரம்பையர் போலவும், குஞ்ஜர தனுஜாரி ஸபனு குதுகமு கதுரன்—கஜமுகாசுரனைக் கொன்ற சிவ பெருமானின் ஸபையில் (ப்ரமதகணங்கள்) சிவகணங்கள் போலவும், கஞ்ஜஜு ஸபலோ வேட்கக—பிர்மதேவனின்

---

1. கலிகி. 2. सगलो, 3. माधवु सभलो 4. ஸபலே குணப கணம்புல், 5. சபலோ.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

ஸபையில் முனிகணங்கள் போலவும், மாதவு ஜூடன் மஞ்ஜுல முகுலு ஆடு கொனிரி — கண்ணனில் முன் அழகிய முகமுள்ள பெண்கள் ஆடுகின்றனர்.

கருத்து: தேவேந்திரனின் அவையில் அரம்பையர் இருப்பது போலவும், கைலையில் வீற்றிருக்கும் சிவபெருமானின் அவையில் சிவகணங்கள் சூழ்ந்திருப்பதைப் போலவும், பிர்ம்மதேவனின் அவையில் முனிவர்களின் குழாம் கூடியிருப்பதைப்போலவும், கண்ணனின் அவையில் அழகிய பெண்கள் கூடி ஆடிப்பாடி மகிழ்ச்சியில் திளைத்தனர்.

वचनम्— गोपिकामणुलु ब्रह्मानन्दावेशम्बुचे परवशुलै येमनुचुन्नारु.

வசனம்: கோபிகாமணுலு ப்ரம்ஹானந்தாவேசம்புசே பரவசுலை (க்ரீடலு ஸேயு ஸமயப்புன) ஏமிஸேயுசுன்னாரு.

रागमु : कापि] दरु—१० [तालमु : चापु

पल्लवी

चूतमुरारे ई वेड्कनु
सुदतुलार! नेडु

अनुपल्लवी

पुरुहूतादुल करुदैन योडलो
युविदलेल्ल हरिनिगूडि याडेरु

चरणम्

ओकरिकोकरु गन्धमु नलदेरु
ओकरिकोकरु तिलकमु दिद्देरु

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

ओंकरिकोकरु विडेमु लोसगेरु
ओकरिकोंकरु हारमु वेसेरु ॥ १ ॥

ओकरिकोकरु वलुवलु गट्टेरु
ओकरिकोकरु रविकेलु दोडिगेरु
ओकरिकोंकरु कौगिट गूर्चेरु
ओकरिकोंकरु तमलो सोक्केरु ॥ २ ॥

ओंकरिकोकरु पाटलु पाडेरु
ओकरिकोंकरु सरसमु लाडेरु
ओकरिकोकरु हरियनि जूचेरु
ओकरिकोंकरु गानक भ्रमसेरु ॥ ३ ॥

ராகம்; காபி] தரு—10 [தாளம்: சாபு

பல்லவி

ஸூதாமு ராரே ஈ வேட்கநு
ஸுததுலார ! நேடு

அனுபல்லவி

புருஹூதாதுவ கருஜைதந யோடலோ
யுவிதலெல்ல ஹரிநிகூடி யாடேரு

சரணம்

ஓகரிகொகரு கந்தமு நலதேரு
ஓகரிகொகரு திலகமு தித்தேரு
ஓகரிகொகரு விடெமு லொஸகேரு
ஓகரிகொகரு ஹாரமு வேஸேரு 1

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

ஒகரிகொகரு வலுவலு கட்டேரு
    ஒகரிகொகரு ரவிகெலு தொடிகேரு
ஒகரிகொகரு கெவகிட கூர்சேரு
    ஒகரிகொகரு தமலோ ஸொக்கேரு   2

ஒகரிகொகரு பாடலு பாடேரு
    ஒகரிகொகரு ஸரஸமு லாடேரு
ஒகரிகொகரு ஹரியநி ஜூசேரு
    ஒகரிகொகரு கானக ப்ரமஸேரு   3

பல்லவி: ஸூததுவார—பெண்களே!, நேடு—இன்று, ஈ வேட்கநுஜூதாமு ராரே—இந்த வேடிக்கையைக் காண வாருங்கள்.

அநுபல்லவி: புருஹூதாதுலகு அருதைந—தேவர்களுக்கும் அரிதான ஹரிநி கூடி—ஸ்ரீ ஹரியுடன் சேர்ந்து (இணைந்து), யுவிதலெல்ல ஓடலோ ஆடேரு—குமரிகளான கோபியர் ஓடத்தில் ஆடுவதைக் காணவாருங்கள்,

சரணம்: ஒகரிகொகரு கந்தமு நலதேரு—ஒருத்திக்கொருத்தி சந்தனத்தைப் பூசிக்கொண்டனர், ஒகரிகொகரு திலகமு தித்தேரு-திலகமிட்டுக்கொண்டனர். ஒகரி கொகரு விடெமு லொஸகேரு—விடயம் (பீடா — வெற்றிலைப் பாக்கு மற்றும் வாஸனை திரவியம் கலந்த தாம்பூலச் சுருள்) கொடுத்துக்கொண்டனர், ஒகரி கொகரு ஹாரமு வேஸேரு—மாலைகளை அணிந்துகொண்டனர்.

2. ஒகரிகொகரு வலுவலு கட்டேரு — ஒருவருக்கு ஒருவர் புடவைகளைக் கட்டிக்கொள்ள உதவி செய்து கொண்டும், ஒகரிகொகரு ரவிகெலு தொடிகேரு — ஒருவருக்கொருவர் ரவிக்கைகளை அணிந்துகொள்ள உதவி

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

செய்துகொண்டும், ஒகரிகொகரு கௌகிட கூர்சேரு — ஒருவருக்கொருவர் தோளோடு தோள் இணைத்து ஆலிங்கனம் செய்துகொண்டும், ஒகரிகொகரு தமலோன் ஸொக்கேரு — ஒருவருக்கொருவர் தங்களைக் கண்டு பிரமித்தனர், சொக்கிப்போயினர்.

3. ஒகரிகொகரு பாட லு பாடேரு — ஒருவருக்கொருவர் பாட்டுக்களைப் பாடினர், ஒகரிகொகரு ஸரஸமுலு ஆடேரு — ஒருத்தியை ஒருத்தி கொஞ்சிக் கொண்டனர், ஒகரிகொகரு ஹரியநி ஜூசேரு — ஒருவரையொருவர் ஹரியாகப் பார்த்து மகிழ்ந்தனர், ஒகரிகொகரு காநக ப்ரமஸேரு—ஒருவரையொருவர் கண்டும் (அவரைக்) காணாமல் ப்ரமை பிடித்து நின்றனர்.

கருத்து: படகிலிருந்த அந்த கோபியர் கர்வம் தலைக்கேறி கண்ணனையே மறந்து மகிழ்ச்சியில் திளைத்துத் தாங்கள் என்ன செய்கிறோம் என்றே தெரியாத நிலையில் ஆடுவதைப் பாருங்கள். ஒருவருக்கொருவர் சந்தனத்தைப் பூசி மகிழ்ந்தனர். ஒருவருக்கொருவர் கஸ்தூரித் திலகமிட்டுக்கொண்டனர். வெற்றிலை விடயங்களைக் கொடுத்துக்கொண்டனர். மாலைகளை அணிந்துகொண்டனர். ஆடைகளை சரியாக திருத்தி அணிந்துகொள்ள ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொண்டனர். ஆடிக்கொண்டும், பாடிக்கொண்டும், சரஸமாகப் பேசிக்கொண்டும், கட்டித்தழுவி ஆலிங்கனம் செய்துகொண்டும், ஒருவரையொருவர் கண்டு பிரமித்தும் திகைத்தும், அவர்களுடைய உருவில் ஸ்ரீ ஹரியான கண்ணனையே கண்டு மகிழ்ந்தும், அதனால் தங்களையே காணாத நிலையில் பிரமித்தவர்களாய் அந்த கோபியர் ஓடத்தில் கண்ணனுடன் படகுச் சவாரி செய்தனர். இக்காட்சியைக் காண வாருங்கள்! வாருங்கள் என்று கவியின் கூற்றாக ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் (பெண்களாகிய) நம்மை அழைக்கிறார்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

वचनम्— * ई विधम्बुन गोपिकामणुलु अति सौन्दर्यमुचे तमकु समानमुलेदनि
बलिके देटुवलेनु.

வசனம்: ஈ விதம்புன (அப்ஸரஸ்திரீ லெல்ல அச்சட ஆவேடுகலனு கனுகொனுகண்ட) கோபிகாமணுலு அதி ஸௌந்தர்யமுசே தமகு ஸமானமு லேதனி பலிகே தெடுவலெனு.

क. २५. [1]हरिहर कमल भवादुलु
नरसुर किम्पुरुषुलेल्ल नम्रुलुगा के-
व्वरु मन कुच कचवदना-
धरमुल गनि तप्पुवारु धरलो ननुचुन्.

க, 25. ஹரிஹர கமல பவாதுலு
நரஸுர கிம்புருஷுலெல்ல நம்ருலுகா கெவ்
வரு மந குசகச வதநா
தரமுல கனி தப்புவாரு தரலோ நனுசுன்

ஹரி, ஹர, கமல பவாதுலு—திருமால், சிவன். பிரமன் முதலியோர்களும். நர, ஸுர, கிம்புருஷுலு யெல்ல—மனிதர்கள், தேவர்கள், கிம்புருடர்கள் முதலிய அனைவரும், மந குச கச, வதந, அதரமுலகநி—நம்முடைய கொங்கைகளையும், அழகிய முகத்தையும் கொவ்வை இதழ்களையும் கண்டு. நம்ரலுகாக தரலோ-மயங்காமல் உலகில், யெவ்வரு தப்புவாரு அநுசுன்—யார்தான் தப்பித்தார்கள்? என்று கூறிலர்.

---

* ई विधम्बुन वलिकिन ओडवनितलु मरि नेमनुचुवारु.

1. हरिहरमहादुलु किन्नरसुर

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

கருத்து: எம்மைக்கண்டு காமுற்று மதிமயக்கம் கொள்ளாதவர்கள் யார்? உலகையே படைத்துக்-காத்து-அழித்து முத்தொழில்களைப் புரியும் மும்மூர்த்திகளே எம்வலைவப்பட்டனர் எனின் பிறரை என் சொல்வது? தேவர், மனிதர். கின்னரர். கிம்புருடர் ஆகியோரும் எங்களைக் கண்டுவிட்டால் தப்பமுடியுமா? கொவ்வை இதழையும், கொங்கைகளையும் கண்டு மயங்காதவர் யார்? அதனால் எமக்கு இவ்வுலகில் எவருமே இணையில்லை என்று தங்களது அழகில் கர்வம்கொண்டு இறுமாந்து கோபியர் பேசிக்கொண்டனர்.

वचनम्— मरियु निट्टुलनिरि.

வசனம்: மரியு நிட்டுலனிரி

रागमु: देवगान्धारि] दरु—११ [ताळमु: आदि

पल्लवि

एवरु मनकु समान मिललो
निन्तुलार! नेडु

अनुपल्लवि

अवनि हरिहर ब्रह्मादि सुरु
लासचे मोस पोयिरि—गनुवल्लु

चरणम्

नलुवतनयपै मोहमु जेन्दि
नाड्डु तगिलि [1]पोये

1. पाय,

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

मुद्दुलोलुकु श्रीहरि वलचुचु
बृन्दालोलुडै पोये—गनुकनु ॥ १ ॥

चिलुवभूषणुडु दारुकावनपु
चेलुल पालाये, गो-
कुलमुन त्यागराजनुतुडु मन
[2]वल्लो दगिलिपोये,· गनुकनु ॥ २ ॥

தரு—11

ராகம்: தேவகாந்தாரி] [தாளம்: ஆதி

பல்லவி

எவரு மநகு ஸமாந மிலலோ
நிந்துலார ! நேடு

அனுபல்லவி

அவநி ஹரிஹர ப்ரம்ஹாதி ஸுரு
லாஸசே மோஸ போயிரி—கநுகநு

சரணம்

நந்துவதநயபை மோஹமு ஜெந்தி
நாடு தகிலி போயெ
முத்துலொலுகு ஸ்ரீ ஹரி வலசுசு
ப்ருந்தாலோலுடை போயெ—கநுகநு 1

2. वल्लोन

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

சிலுவபூஷணுடு தாருகாவநபு
செலுல பாலாயெ கோ-
குலமுன த்யாகராஜநுதுடு மந
வலலோ தகிலிபோயெ—கநுகநு 2

பல்லவி: இந்துலார - குடும்பப் பெண்களே! நேடு - இப்பொழுது, மநகு - எமக்கு, எவரு ஸமாந மிலலோ — யார்தான் இணையாவர்? ஒருவரும் ஸமாநமில்லை.

அனுபல்லவி: ஹரி, ஹர, ப்ரும்ஹாதி ஸுருலு - திருமால், சிவன், பிரமன் முதலான தேவர்களும், அவநிலு ஆஸசே மோஸபோயிரி - உலகில் ஆசையால் மோசம் போனார்கள், கநுகநு - ஆகையால் (நமக்கு உலகில் ஒருவரும் ஸமானமில்லை).

சரணம்: 1. நலுவ தநயபை - பிர்மதேவர் திலோத்தமையிடம், மோஹமு ஜெந்தி தகிலி போயெ - மோகம் கொண்டு தாழ்ந்து போனாரே! முத்லு லொலுகு ஸ்ரீஹரி - அழகனான திருமால், வலசுசு ப்ருந்தா லோலுடை போயெ - ஆசைகொண்டு பிருந்தையிடம் ஈடுபட்டவர் ஆனாரே!

2. சிலுவ பூஷணுடு - பாம்பை அணியாகக்கொண்ட சிவபெருமானே, தாருகாவநபு செலுக பாலாயே - தாருகா வனத்திலிருந்த பெண்களுடன் (முனிவர்களின் மனைவி யருடன்) சென்றுவிட்டான்.

3. த்யாகராஜநுதுடு - தியாகராஜனால் வணங்கப் படும் கண்ணன், கோகுலமுந - கோகுலத்திலிருக்கும், மந வலலோ தகிலிபோயே - நம்மீது கொண்ட ஆசை வலையில் வீழ்ந்து விட்டனன். கநுகநு — அதனால் உலகில் நமக்கு ஒருவரும் ஸமமானவரில்லை.

கருத்து: இல்லத்தரசிகளே! இவ்வுலகில் எவருமே நமக்குச் சமானமாகமாட்டார்கள். திருமால் — சிவன் —

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

பிரமன் முதலிய தேவர்களே பெண்ணாசையால் மோகம் அடைந்தனரெனில் உலகில் நமக்கு யார்தான் இணையாவர்? திலோத்தமையைக் கண்ட பிர்மன், பிருந்தாவைக் கண்ட திருமால், தாருகா வனத்தில் தவம் செய்த முனிவர்களின் மனைவியரைக் கண்ட சிவபெருமான் மோகம் கொண்டு மதி மயங்கினர். அவர்கள் மட்டுமா? தியாகராஜனால் வணங்கப்படும் கண்ணனே நமது கண் வலையில் சிக்கி ஆசையில் அகப்பட்டுவிட்டான். அப்படியிருக்க உலகில் யார்தான் பெண்களுக்கு அடிமையாகாதவர்? இதனால் தான் நமக்கு ஈடு இணையாக ஒருவருமே இவ்வுலகில் இல்லை. என்ற கர்வத்துடன் பாடிக்கொண்டே ஓடத்தைச் செலுத்தினர் கோபியர்

वचनम्— गोपिकामणुलु अत्यन्त लावण्य गर्वमुचे मैमरचि येमनुचुन्नारु.

வசனம்: கோபிகாமணுலு அத்யந்த லாவண்ய கர்வமுசே மைமரசி யேமநு சுந்நாரு.

सी. २. बोङ्कुलाङ्कुचु लेस्स भांगिम्पनेर्चुने
* योडनु जरिपिम्प नोनरु लेदु
वनितल [1]जूचिते वलपिम्प नेर्चुने
* योडनु जरिपिम्प नोनरुलेदु
मन रूपमुलु जूचि मनवेण्ट दिरुगुने
* योडनु जरिपिम्प नोनरु लेदु
सोगसुन[2] मनमुल सोक्किम्प नेर्चुने
* योडनु जरिपिम्प नोनरु लेदु
यनुचु[3] भाविम्प माधवु डदि येरिङ्गि

---

* वाडनु जरिपिम्प वशमुकादु.

1. जूचिन, *2.* सोगसु चेसुक वच्चि सोक्कि्च, *3.* अनग

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

गोप्प सुडिगालि वलुमेघ घोषणमुलु
गूड वर्षमु गुरियिम्प नोडलोन.
द्वार मटुकल्गि नीरु रादोडगे[1] नपुड्ड

ஸீஸபத்யம்—2

பொங்குலாடுக லெஸ்ஸ போகிம்ப நேர்சுநே
யோடநு* ஜரிபிம்ப நொநரு லேது
வநிதல ஜூசிதே வலபிம்ப நேர்சுநே
யோடநு* ஜரிபிம்ப நொநரு லேது
மந ரூபமுல ஜூசி மநவெண்ட திருகுநே
யோடநு* ஜரிபிம்ப நொநரு லேது
ஸொகஸூந[2] மநமுல ஸொக்கிம்ப நேர்ச்சுநே
யோடநு* ஜரிபிம்ப நொநரு லேது
யநுக பாவிம்ப மாதவு டதி யெரிங்கி
கொப்ப ஸூடிகாலி பலுமேக கோஷணமுலு
கூட[3] வர்ஷமு குரியிம்ப நோடலோந
த்வார மடுகல்கி நீரு ராதொடகெ[4] நபுடு

இந்தக் கண்ணனுக்கு பொங்குலாடுசு — பொய் சொல்லியே, லெஸ்ஸ போகிம்ப நேர்ச்சுநே — நன்கு கூடிக் குலாவுவானேயன்றி, ஓடநு ஜரிபிம்பன் ஒநருலேது— இந்த ஓடத்தைச் செலுத்தத் திறமையில்லை.

வநிதல ஜூசிதே வலபிம்ப நேர்சுநே — பெண்களைப் பார்த்ததுமே அவர்களையே (அந்தப் பெண்களையே

---

* வாடனு ஜரிபிம்ப வசமுகாது.

1. दोणगे, 2. ஸொகஸூ ஜேஸூக வச்சி.

3. வான காடந்த காரம்பு. 4. தொனகே.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

தனது அழகால்) வளைத்துப் போடுவானேயன்றி — ஓடநு ஜரிபிம்பன் ஒநருலேது — இந்த ஓடத்தைச் செலுத்தத் திறமையில்லை.

மநருபமுல ஜூசி—நமது அழகைப் பார்த்து. மந வெண்ட திருகுநே — நம்மையே சுற்றிவருவானேயன்றி ஓடநு ஜரிபிம்பன் ஒநருலேது—இந்த ஓடத்தைச் செலுத்தத் திறமையில்லை.

ஸொகஸூந மநபூல ஸொக்கிம்ப நேர்ச்சுநே — தன்னுடைய ஸொகுஸினால் நம்மைச் சொக்க வைக்கத் தெரியுமே தவிர, ஓடநு ஜரிபிப்பன் ஒநருலேது—இந்த ஓடத்தை (நன்கு) நடத்தத் திறமையில்லை.

யநுசு பாவிம்ப—இப்படியாக அக்கோபியர் எண்ண, மாதவுடு இதி யெரிங்கி — அந்த மாதவன் (கண்ணன்) இதை அறிந்து, கொப்ப ஸுடிகாலி—மிகக் கடுமையான சுழற்காற்றுடன், பலு கோஷணமுலு மேக—பயங்கர மான இடியுடன் கூடிய மேகம், வர்ஷமு, குறியிம்பன்— மழை பொழிய வைத்தான், ஓடலோந த்வார மடு கல்கி — அந்த ஓடத்தில் ஒரு துளை ஏற்பட்டு, நீரு ராதொடகெ நபுடு—(அத்துளையின் வழியாக ஓடத்திற் குள்) தண்ணீர் புகத் தொடங்கியது. அப்பொழுது:

கருத்து: (அவதாரிகை) 'தங்களை விட உலகில் வேறு அழகிகளே இல்லை' என்று மிகுந்த கர்வம் கொண்டிருந்த அக்கோபியர் கர்வத்தினால் என்ன செய் கிறோம், என்ன சொல்கிறோம் என்பதையும் மறந்து, 'அந்தக் கண்ணனுக்கு என்ன தெரியும்?' என்று அவனையே அலட்சியமாகக் கருதும் நிலைக்கு வந்து விட்டனர்.

"இந்தக் கண்ணனுக்கு என்ன தெரியும்? பொய் சொல்லத் தெரியும், சமயத்திற்குத் தக்கபடி பேசத்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

தெரியும். நம்மைப்போன்ற பெண்களைக் கண்டுவிட்டால் போதும், அவர்களுடன் சுற்றத்தெரியும். அவர்களைக் கூடி விளையாடத் தெரியும். தனது பேரழகால் அந்தப் பெண்களையே வளைத்துப்போடத் தெரியும். இவை மட்டும்தான் கண்ணனுக்குத் தெரியுமே அன்றி இந்த ஓடத்தை ஒழுங்காகக் ஓட்டக்கூடத் தெரியாது. இதில் அவனுக்குத் திறமையில்லை" என்று எண்ணலாயினர்.

கோபியரின் உள்ளக் கருத்தை அறிந்த ஸ்ரீகிருஷ்ணன் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் "கர்வத்தை ஒடுக்கி அதனை அழிக்கவேண்டும்" என்று திருவுள்ளங் கொண்டான். அடுத்த கணம் திடீரென்று பயங்கரமான சுழற்காற்று வீசியது. எங்கிருந்தோ வந்த மேகங்கள் படபட வென இடி முழங்க, பளிச்—பளிச் என்று மின்னல் மின்ன மழை பொழியலாயிற்று. அதே சமயம் அந்த ஓடத்தில் ஒரு துளை ஏற்பட்டு அதன் வழியாக ஓடத்தினுள் தண்ணீர் புகத் தொடங்கியது. அப்போது:

वचनम्— गोपिकल मदगर्वन्बु [1]लणगुटकै यंचिञ्चिन श्रीमत्कृष्णमूर्ति हृदयम्बेरिङ्गि इन्द्रादि सुर लेमिसेयुचुन्नारु.

வசனம்: கோபிகல மதகர்வம்பு [2]லணகுடகை யோசிஞ்சிந ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி ஹ்ருதயம் பெரிங்கி இந்த்ராதி ஸுர லேமிஸேயு சுந்நாரு.

शा. २६. पाकारि प्रमुखुल् विनोदमुलु सल्प व्राज गाशिम्पगा
नाकाशम्बुन नुण्डि वान वडिगण्डलावेळ म्रालेन्करिन्
नौकारन्ध्रमुलो जलम्बु चोरगा नव्यन्त व्यासङ्गलै
श्रीकारुण्यनिधे! हरे! यनि चेलुल्चिन्तिञ्चि नय्योडलोन् ॥

---

1. लणचुटकै 2. லணகுடகை.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

சா. 26 பாகாரி ப்ரமுகுல் விநோதமுலு ஸல்-
பன் நாக்ஞ காவிம்பகா
நாகாசம்புந நுண்டி வாநவடிகண்ட்-
வா வேள வ்ராலென் மரின்
நௌகா ரந்த்ரமுலோ ஜலம்பு சொரகா
நத்யந்த வ்யாஸங்கலை
ஶ்ரீ காருண்யநிதே ! ஹரே ! யநி செலுல்
சிந்திஞ்சி நய்யோடலோன்

பாகாரி ப்ரமுகுல்—இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாம், விநோதமுலு ஸல்பன் — (கண்ணன் செய்யும்) இந்த விநோதமான செயலுடன், தாங்களும் அச் செயலிலீடுபட, ஆக்ஞ காவிம்பகான் — (கண்ணனின்) கட்டளையால், ஆவேள — அப்பொழுது, ஆகாசம்புந நுண்டி—வானிலிருந்து, வடிகண்ட்ல வாநவ்ராலென் மரின்—ஆலங்கட்டி மழை பொழியத் தொடங்கியது. (அதே சமயம்), நௌகாரந்த்ரமுலோ ஜலப்பு சொரகான்-அவ் ஓடத்தின் துளை வழியாக (ஓடத்தில்) தண்ணீர் புகுந்தது. (இதைக்கண்ட), செலுலு—அந்தச் சிறுமியர் (கோபியர்), அத்யந்த வ்யாஸங்கலை—மிகுந்த கவலையுடன். ஆ ஓடலோன் — அந்த ஓடத்திலிருந்தவாறே, ஶ்ரீ காருண்ய நிதே!—கருணைக்கடலே!, ஹரே! யநுசு—ஹரே கிருஷ்ணா! என்று (பயத்துடன்), சிந்திஞ்சிநய்ய—நினைத்தனர்.

கருத்து : (அவதாரிகை) ஓடத்தில் சென்ற சிறுமியராகிய அக்கோபியரின் கர்வத்தை அடக்க எண்ணம் கொண்ட கண்ணனின் கருத்துப்படியே வானிலிருந்து கனத்த மழையும், சுழல் காற்றும் இணைந்து வீசின.

கண்ணனின் விநோதமான இத்தகு திருவிளையாடல்களைக் கண்ட இந்திராதி தேவர்கள், கண்ணன் செய்யும் இத்திருவிளையாடலில் தாமும் பங்குகொள்ள

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

விரும்பி ஆலங்கட்டி மழையைப் பொழியச் செய்தான் இந்திரன். பெரிய பெரிய 'ஐஸ் கட்டி' களாக விழத் தொடங்கின. இதே ஸமயம் ஓடத்திலிருந்த பொந்தின் வழியாகத் தண்ணீர் குபுகுபுவென்று ஓடத்தினுள் பாய்ந்துகொண்டே இருந்தது. இதனால் பயந்த கோபியர் கவலைகொண்டு ஹரே கிருஷ்ணா! கருணைக் கடலே! என்று அழைக்கத் தொடங்கினர். 'இத்துன்பத் திலிருந்து கடைத்தேறுவது எப்படி?' என்று வழி புரியா மல் கண்ணனையே நினைக்கலாயினர்.

वचनम्— आ समयम्बुन गोपिकामणुलत्यन्त भयाक्रान्तुलै येमनुचुन्नारु.

வசனம்: ஆ ஸமயம்புந கோபிகாமணு லத்யந்த பயாக்ராந்துலை யேமநு சுந்நாரு.

रागमु : घण्टा] दरु-१२ [तालमु : चापु

पल्लवि

उन्न तावुन नुण्ड [1]नीयदु-वान
[2]युरुमुलैते वेनक तीय्यदु

चरणम्

सुडिगालिकि योड जुट्टि-वडि
वडिगा वानलैते गोट्टे ॥ १ ॥

ओडलो रन्ध्रमु गलिगे-ई
वनितल केव्वरु सलिगे ॥ २ ॥

---

1. नियदु, 2. युरुमलयिते

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

कनुल केन्दु गानरादु–गति
काळिन्दि मनकिक मीदु ॥ ३ ॥

अतिपोवुदारि [1]जनिरम्मा–अपुडे
मदमिन्त चलदण्टि नम्मा ॥ ४ ॥

मन मोक्कचो गूडरादु–प्रळय
[2]मोन्दुगाक वेरुलेदु ॥ ५ ॥

राजवदनुलार! रारम्मा–त्याग
राज सखुनि जूडरम्मा ॥ ६ ॥

தரு—12

ராகம்: கன்டா] [தாளம்: சாபு

பல்லவி

உந்ந தாவுந நுண்டநீயது - வாந
யுருமுலைதே[3] வெநக நீய்யது

சரணம்

ஸ°டிகால்கி யோட ஜுட்டி – வடி
வடிகா வாநலைதே கொட்டெ 1

ஓடலோ ரந்த்ரமு கலிகே – ஈ
வநிதல கெவ்வரு ஸலிகெ 2

கநுல கெந்து காணராது - கதி
காளிந்தி மநகிக மீது 3

---

1. पोयिरम्मा, 2. सननिदिगाक 3. யுருமலயிதே

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

யதிபோவு தாரி ஜநிரம்மா[1] - அபுடே
மதமிந்த வலதண்டி நம்மா 4

மந மொக்கசோ கூடராது - ப்ரளய
மொந்துகாக[2] வேரு லேது 5

ராஜவதநுலார! ராரம்மா - த்யாக
ராஜ ஸகுநி ஜூடரம்மா 6

பல்லவி: உந்த தாவுநன் உண்டன் ஈயது—இருந்த இடத்தில் இருக்க முடியவில்லை. உருமுலைடுதே வெநக தீய்யது—(மேகங்களால்) ஏற்படும் இடியின் உறுமல் சத்தமும் நிற்கவில்லை.

சரணம்: ஸுடிகாலிகி யோட ஜுட்டி — சுழல் காற்று ஓடத்தைச் சுற்றச் செய்கிறது. வடி வடிகா வாநலைதே கொட்டெ -பாட்டம் பாட்டமாக வானம் மழையைக் கொட்டுகிறது.

ஓடலோ ரந்த்ரமு கலிகெ — ஓடத்திலே துளை ஏற்பட்டுவிட்டதே! ஈ வநிதலகு எவ்வரு ஸலிகெ— இந்தப் பெண்களுக்கு எவர்தான் உதவி செய்வார்கள்?

(ஒருத்தி கூறினாள்) கநுலகு யெந்து காணராது — கண்களுக்கு எத்திசையும் புலப்படவில்லை, கதி காளிந்தீ மநகு இக மீது — (காளிந்தீ) யமுனைதான் நமக்கு வழி காட்ட வேண்டும்.

மதிபோவு தாரி ஜநிரம்மா — மனம் போன வழியில் சென்றீர்களே! அபுடே மதமு இந்த வலதண்டி நம்மா— உங்களுக்கு இந்தக் கொழுப்பு வேண்டாம் என்று அப்போதே சொன்னேன்.

---

1. போயிரம்மா. 2. மனநிதி.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

மந மொக்கஸோ கூடராது — நாம் அனைவரும் ஒன்றாகக் கூடியிருக்கக் கூடாது. (அதனாலே), ப்ரளயமு ஒந்துகாக வேறு லேது — பிரளயமே ஏற்பட்டுவிட்டது. இது வேறு அல்ல.

ராஜ வதநுலார — சந்திரன் போன்ற முகம் படைத்தவர்களே! ராரம்ம — வாருங்கள். த்யாகராஜ ஸகுநி ஜூடரம்மா — தியாகராஜனின் நண்பனான ஸ்ரீ கிருஷ்ணனைக் காண்போமடி.

கருத்து: கோபியரின் மனம் குழப்பியது. அத்துடன் பயமும் பற்றிக்கொண்டதால் ஓடத்தில் உட்காரவும் முடியவில்லை, நிற்கவும் முடியவில்லை, இருந்த இடத்திலேயே இருக்கவும் முடியவில்லை. வானிலிருந்து எழும் இடியின் உருமல் சப்தமும் நிற்கவில்லை. சுழல் காற்றினாலும், யமுனையின் வெள்ளப் பெருக்காலும் ஓடம் சுழன்றது. 'பாட்டம் பாட்டமாக' கனத்த மழை கொட்டுகிறது. ஓடத்தினுள் தண்ணீர் புகுந்துகொண்டே இருக்கிறது. கண்களுக்கு எத்திசையும் புலப்படவில்லை. இந்நிலையில் இந்தப் பெண்களுக்கு யார்தான் உதவி செய்வார்கள்? இந்தக் காளிந்திதான் வழிவிட வேண்டும்.

அப்போது அங்கிருந்தவர்களில் ஒருத்தி கூறினாள், "ஏய்! நீங்கள் உங்கள் மனம் போன வழியில் செல்கிறீர்கள். உங்களுக்கு இந்தக் கொழுப்பு வேண்டாம் என்று அப்போதே சொன்னேன் கேட்கவில்லை. இனி என்ன செய்வது? ... நாம் அனைவரும் ஒன்றாகக் கூடியிருக்கவே கூடாது. கூடினோம் அல்லவா? அதனால்தான் பிரளயமே வந்துவிட்டது."

சந்திரன் போன்று முகம் படைத்த தோழிகளே! வாருங்கள். இந்த தியாகராஜனுடைய நண்பனைக் காண்போம்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

वचनम्— ई विधम्बुन जालि जेन्दुचु कृष्णदेवुनि जुट्टुकोनि कोपिका-
मणुलु येमनुचुन्नारनिन.

வசனம்: ஈ விதம்புந ஜாலிந் ஜெந்துசு க்ருஷ்ண
தேவுனி ஜுட்டுகொநி கோபிகாமணுலு ஏமநுசுந்நாரனின

श्ला. २७. ई राजाननु नाडिकोन्न फलमो !
एं मानिनी शापमो !
ई रामामणु लेगुवेळ गुणमो !
ए वेल्पु दुष्कृत्यमो !
वेरे दारिक तोचदे यनि मरि
न्वेमारु जिन्तिम्पुचुन्
नारीरत्नमुलेल्ल जालिपडुचु
नाना विलापम्बुनन् ॥

சா. 27. ஈ ராஜாநநு நாடிகொந்ந பலமோ
ஏ மாநிநீ சாபமோ
ஈ ராமாமணு வேகுவேள குணமோ
ஏ வேல்பு துஷ்க்ருத்யமோ
வேரே தாரிக தோசதே யநி மரின்
வேமாரு ஜிந்திம்புசுன்
நாரீரத்னமு லெல்ல ஜாலிபடுசுன்
நாநா விலாபம்புநன்

ஈ ராஜா நநு நாடி கொன்ன பலமோ? — இந்த சந்திர வதனனான ஸ்ரீ கிருஷ்ணனை ஏசியதின் பயனோ? ஏ மாநிநீ சாபமோ? எந்த பெண்ணிட்ட சாபமோ? ஈ ராமாமநுலு யேகு வேல குணமோ? — இந்தப்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

பெண்கள் (நாம்) புறப்பட்ட வேளையோ ? — ஏ வேல்பு துஷ்க்ருத்யமோ ? — எந்த தெய்வத்தின் கொடுமையோ, வேரே தாரி இக தோசதே — வேறு வழியும் இப்போது தெரியவில்லை. (தோன்றவில்லை), யநி மரின் வே மாரு ஜிந்திம்புகன் — என்று பலவாராக சிந்தித்துக் கொண்டிருந்த அந்த, நாரீ ரத்னமு லெல்ல — பெண்மணிகள், ஜாவி படுகன் நாநா விலாபம்புநன் — கவலைப் பட்டனர். புலம்பினர்.

கருத்து : (அவதாரிகை) திடீரென்று எதிர்பாராத சூழலில் கழற்காற்றும், திசை தெரியாமல் வானிலிருந்து கொட்டும் பலத்த ஆலங்கட்டி மழை பொழிவதையும் கண்ட கோபியர் பயந்து, திகைத்து இனி தாங்கள் என்ன செய்வது என்று தோன்றாது புலம்பினர்.

"இந்த ஸ்ரீ கிருஷ்ணனை அலட்சியப்படுத்தி ஏசியதின் பயனால் இந்தத் துன்பம் நமக்கு வந்ததா ? அல்லது எந்தப் பெண்மணியிட்ட சாபமோ ? அல்லது நாம் கண்ணனுடன் புறப்பட்டு வந்த வேளையோ ? அல்லது எந்த தெய்வத்தின் கொடுமையோ ? வேறு வழியும் தோன்றவில்லை. என்ன செய்வது என்றும் புரியவில்லை" என்று பல்வேறாக சிந்தித்துக் கவலைப்பட்டுப் புலம்பத் தொடங்கினர் கோபியர்.

वचनमु— ई विधम्बुन गोपिकामणुलु व्यसनाक्रान्तलयि कृष्णदेवुनिकि क्षेमम्बु गलुगु कोरकु यमुनादेविनि प्रार्थिञ्चुकोने देटुवलेनु.

வசனம் : ஈ விதம்புந கோபிகாமணுலு வ்யஸநாக்ராந்தலயி க்ருஷ்ணதேவுநிகி க்ஷேமப்பு கலுகு கொரகு யமுநாதேவிநி ப்ரார்திஞ்சகொனே தெடுவலெனு.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

रागमु: सौराष्ट्रमु] दरु—१३ [ताळमु : आदि

पल्लवि

अलकल्लोलमाय नम्म—यमुनादेवि ! मा
यार्तुलेल्लनु [1]दीर्पुवम्मा

अनुपल्लवि

मोल्ललचे पूजिञ्चि
म्रोक्केदमु म्रोववम्मा

चरणम्

[2]मारुचारिकि ताळलेक—ईराज कु
मारुनि देञ्चिचति मिन्दाक
तारुमाराये व्रतुकु
तत्तळिञ्चु नदिन्दाक ॥ १ ॥

गालि वानलु निण्डाराये—मापनुलेल्ल
गेलि सेयुट केडमाये
मालिमितो मम्मेलु
महनियेड वायनाये ॥ २ ॥

सोम्मुलेल्ल नी कोसगेदमम्मा—यमुनादेवि ! ई
सुमुखुनि गट्टु [3]जेर्पुमम्मा

1. दीर्पुमायम्मा, 2. मरु, 3. जेर्पवम्मा

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

येम्मेकानि वलिमिनि
येल देच्चितिमम्मा ॥ ३ ॥

नलिनभवुड्डु ग्रासिन ग्रालु–येट्टुलयिनगानि
नाथुड्डु ग्रतिकियुण्डिन चालु
प्रळयमु लय्येनु ये–
पनि जेसिन भामलु ॥ ४ ॥

देहमुलेल्ल नोसगेदमम्मा–ओ देवि! कृष्ण
देवुनि गट्टु [1]जेर्पुमम्मा
मोहनाङ्गुनि मोमु
मोस पुच्चिति मम्मा ॥ ५ ॥

मे मोक्क टेञ्चबोतिमम्मा–मापालि देवु-
डेमेमो येञ्चुकोन्नाडम्म
रामरो! श्री त्याग-
राजाप्तुनि वायमम्मा ॥ ६ ॥

தரு—13

ராகம் : ஸௌராஷ்டிரம்] [தாளம் ; ஆதி

பல்லவி

அல்லகல்லோல மாயெநம்ம - யமுநாதேவி மா
யார்துலெல்லநு தீர்ப்புவம்மா [2]

---

1. जेचंवम्म, 2. தீர்ப்புமாயம்மா

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

அனுபல்லவி

மொல்லலசே பூஜிஞ்சி
ம்ரொக்கெதமு ப்ரோவவம்மா

சரணம்

மாரு[1] பாரிசி தாளலேக ஈ ராஜ கு-
மாருநி தெச்சிதி மிந்தாக
தாருமாராயெ ப்ரதுகு
தத்தளிஞ்சு நதிந்தாக 1

காலிவாநலு நிண்டாராயெ — மாபனுலெல்ல
கேலி ஸேயுட கெடமாயெ
மாலிமிதோ மம்மேலு
மஹநீயட பாயலாயெ 2

ஸொம்முலெல்ல நீ சொம்மெகதம்ம யமுனா-தேவி ஈ
ஸுமுகுநி கட்டு ஜேர்புமம்ம
யெம்மெகாணி பலிமிநி
யேல தெச்சிதியம்ம 3

நளினபவுடு வ்ராஸிநவ்ராலு - எடுலயிநாகாளி
நாதுடு ப்ரதிகியுண்டிந சாலு
ப்ரளயமு லய்யெனு ஏ-
பனி ஜேஸிந பாமலு 4

தேஹமுலெல்ல நொஸகெதம்ம, ஓ தேவி ! கிருஷ்ண
தேவுநி கட்டு ஜேர்புமம்ம[2]
மோஹனாங்குநி மோமு
மோஸ புச்சிதிமம்ம 5

1. மரு. 2. ஜேர்ச்சவம்ம.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

மே மொக்க டெஞ்சபோதி மம்ம, மாபாலி தேவு
டேமேமோ எஞ்சு கொந்நாடம்ம
ராமரோ ! ஸ்ரீ த்யாக
ராஜாப்துநி பாயமம்மா 6

பல்லவி: அல்லகல்லோலமாயநு அம்ம—அல்லோல கல்லோல மாகிவிட்டதே அம்மா!, யமுநா தேவி!—யமுநாதேவியே!, மா ஆர்த்துலெல்லநு தீர்ப்புவம்மா!—எங்கள் துன்பங்களை நீக்குவாய் அம்மா!

அனுபல்லவி: மொல்லலசே பூஜிஞ்சி ம்ரொக்கெதமு — முல்லை மலர்களைக் கொண்டு உன்னைப் பூஜித்து வணங்குகிறோம், ப்ரோவ வம்மா — எங்களைக் காப்பாற்றுவாய் அம்மா.

சரணம்: 1. மாரு பாரிகி தாளலேக — மன்மத வேகம் தாளமுடியாமல். ஈ ராஜகுமாருநி தெச்சிதிமி இந்தாக — இந்த ராஜ குமாரனை (கண்ணனை) இதுவரை அழைத்து வந்துவிட்டோம், தாருமாராயெ ப்ரதுகு — (ஆனால்) எங்கள் விரதம் தாறுமாறாகி, தத்தளிஞ்சுநதி இந்தாக — எவ்வளவு நேரம் தத்தளிப்போம்?

2. காலி வாநலு நிண்டாராயெ — சுழல் காற்றும், கன மழையும் இன்னும் அதிகமாகின்றதே! மா பனுலெல்ல, கேலி ஸேயுடகு யெடமாயே — எங்கள் செயல்கள் கேலிக்கு இடமாயினவே, மாலிமிதோ மம்மு யேலு மஹநீயட பாயனாயெ — இரக்கத்துடன் எங்களை ஆட்கொள்ளும் இந்த புருஷோத்மனை இழக்குமாறு ஆகிவிடுமோ?

3. ஸொம்முலு யெல்ல நீகு ஒஸகெதம்ம—எங்கள் சொத்துக்களான அனைத்து அணிகளையும் உனக்கே அர்ப்பணிக்கின்றோம் தாயே!, யமுனாதேவியே-ஈசுமுகுநி கட்டு ஜேர்புமம்ம—இந்த சுந்தரனை கரைசேர்த்து

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

விடுவாயம்மா — மனோகரமான இந்த கிருஷ்ணனை பலாத்காரமாக ஏன்தான் அழைத்துவந்தோமோ?

4. நளின பவுடு வ்ராஸிந வ்ராலு — பிர்மதேவன் எழுதின எழுத்து, எடுலயிநாகாநி — எப்படியாவது இருக்கட்டும், நாதுடு—(எங்கள் தலைவனான) கண்ணன் ப்ரதிகியுண்டிந சாலு — பிழைத்திருந்தாலே போதும், ஏ பனி ஜேஸிந பாமலு-இந்தக் காரியம் செய்த பெண்கள் ப்ரளயமுவெய்யெநு — பிரளத்தையே கொண்டுவந்தோமே!

5. தேஹமுலெல்ல நொஸகெதமம்ம — எங்களது உடல்களையெல்லாம் உனக்கே அர்ப்பணிக்கின்றோம், ஓ தேவி—(ஆனால்), ஓ! யமுனாதேவியே, க்ருஷ்ண தேவுநி கட்டு ஜேர்புமம்ம—ஸ்ரீ கிருஷ்ணனை கரைசேர்த்து விடுவாயம்மா? மோஹனாங்குநி மோமு மோஸ புச்சிதி மம்ம—மோஹமடையச் செய்யும் வடிவுடைய கண்ண னுக்கு மோசம் செய்துவிட்டோம் தாயே!

6. மேமு ஒக்கடி யெஞ்சபோதி மம்ம — நாங்கள் ஒன்று எண்ணினோம், ஆனால், மா பாலிதேவுடு — எம்மைக் காக்கும் தெய்வம், யே மேமோ எஞ்சு சொந்நாடு அம்ம—என்ன வெல்லாமோ எண்ணிவிட்ட தம்மா!, ராமரோ!, ஏ பெண்களே!, ஸ்ரீ த்யாகராஜாப்துநி —ஸ்ரீ தியாகராஜனின் நண்பனான ஸ்ரீ கிருஷ்ணனை. பாயமு அம்ம—விடமாட்டோமம்மா?

கருத்து: (அவதாரிகை) ஸ்ரீ க்ருஷ்ணனை ஏசியதின் பயனாக நாம் இந்தத் துன்பத்தை அனுபவிக்கின்றோமோ என்று வேதனையடைந்த கோபியர் யமுனாதேவியை மன, மொழி மெய்களால் துதித்து வழிபட்டனர்.

தாயே! யமுனாதேவி! தற்போது இங்கு அனைத்தும் 'அல்லோலகல்லோலமாகிவிட்டது.' எங்களுக்கு நேர்ந் துள்ள துன்பத்தை நீக்கி எம்மைக் காத்தருளவேண்டும்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

தாயே!. முல்லை மலர்களைக்கொண்டு உன்னை வணங்கு கிறோம் தாயே! எங்களைக் காப்பாற்று.

எங்களின் மன்மத வேகத்தால் இந்தக் கண்ணனை இங்கு அழைத்து வந்தோமே தவிர அல்லலையே அனுபவிக்கிறோம். நேரமாக ஆக. சுழல் காற்றும், கனமழையும் அதிகமாகிக் கொண்டிருக்கின்றதேயன்றி அவை நிற்கவேயில்லை. எங்களது செயல்கள் கேலிக் குரியதாகிவிட்டன. இந்த நிலையில் எங்கள் தலைவனாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணனையே இழந்து விடுவோமோ? என்று அச்சமாகவும் இருக்கிறதம்மா? எங்களது பௌதிக வஸ்துக்களான ஆடை. ஆபரணங் களை உனக்கே அர்ப்பணிக்கிறோம்... ... ஏன் நாங்கள் உடலையும், உயிரையும் உனக்கே அர்ப்பணிக்கச் சித்த மாக இருக்கிறோம். ஆனால் கண்ணனை மட்டும் உன்னிடம் இழக்கமாட்டோம். எங்கள்மீது கருணை கொண்டு இந்த சுந்தரனைக் கரைசேர்த்துவிடு தாயே! பிர்மதேவன் எழுதியபடி எங்களுக்கு எதுவேண்டுமானா லும் ஆகட்டும். ஆனால் கண்ணன் மட்டும் பிழைத் திருந்தால் போதுமம்மா!

நாங்கள் விளையாட்டாகச் செய்த செயல் விபரீத மானதுடன், ஒரு பிரளயத்தையே கொண்டுவந்து விட்டதே!......தாயே! நாங்கள் ஒன்று எண்ணினோம், ஆனால் தெய்வம் வேறு என்னென்னவெல்லாமோ செய்து விட்டதே! தியாகராஜனின் நண்பனைப் பிரிந்து நாங்கள் வாழமாட்டோம் தாயே! எமக்கு உன்னையன்றி வேறு துணையில்லை" என்று யமுனையை வேண்டினர் கோபியர்.

वचनम्— इट्लवण्टि समयम्बुन विष्णुपदध्यानमु सेयुचु व्रजेन्द्रादि सुरुलेल्ल [1]येमनि बलुकुचुन्नारु.

---

1. निट्टुलनिरि

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

வசனம் : இடுவண்டி ஸமயம்புந விஷ்ணுபதத்யா நமு ஸேயுசு ப்ரப்ஹேறந்த்ராதி ஸுருலெல்ல ஏமநி பலுகு கன்னாரு¹.

क. २६. पारमुगाननि यीभव
वारिधिनि तरिम्पजेयु वरदुनि कोरकै
मूरेडु यमुनानदिलो
सारेकु वर्धिल्ल वेडुचम्दमु गनरे

க. 26. பாரமு கானனி ஈ பவ
வாரிதிநி தரிம்பஜேயு வரதுநி கொரகை
மூரேடு யமுநா நதிலோ
ஸாரெகு வர்தில்ல வேடுசந்தமு கனரே

பாரமுகானனி — கடக்கமுடியாத. ஈ பவ வாரிதினி — இந்த பவ ஸாகரத்தை (பிறவிக்கடலை), தரியிம்பஜேயு — தாண்டச்செய்யும், வரதுநி கொரகை—வரங்களை நல்கும் இறைவனின் பொருட்டு (அந்தக் கண்ணனுக்காக), மூரேடு யமுநா நதிலோ — மூண்டெழும் யமுனா நதியில், வர்தில்ல ஸாரேகு — மேலும் வெள்ளம் பெருகின்றதே! யென்று, வேடு சந்தமு கனரே-பிரார்த்தனை செய்யும் கோலத்தைக் காணுங்கள் என்றனர்.

கருத்து: (அவதாரிகை) அல்லோல கல்லோலமாக இருக்கும் இந்த நிலையில் "ஸ்ரீ கிருஷ்ணன் நலமாகக் கரை யேறினால் போதும்" என்று யமுனா தேவியை கோபியர் வேண்டினர், இதனைக் கண்டு இவர்களது அறியாமையைப் பற்றி பிரமன், இந்திரனுள்ளிட்ட தேவர் குழாம் ஒருவருக் கொருவர் தங்களுக்குள் பேசிக்கொள்ளலாயினர்.

---

1. நிட்டுலநிரி.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

கோபியரின் அறியாமையை என்னவென்று கூறுவது? தாண்டமுடியாத பவசாகரத்தையே கடக்கச் செய்யும் வல்லமையுள்ளவன் ஸ்ரீ கிருஷ்ணன். தன்னை அண்டியவர்களுக்கு வரங்களை நல்கி அவர்களின் பிறவிக்கடலை கடக்கச்செய்து பரமபதத்தையே நல்குபவன். அங்ஙனமிருக்க, 'யமுனையில் மேன்மேலும் வெள்ளம் பெருகுகின்றதே! கண்ணனை எப்படி இந்த வெள்ளத்திலிருந்து காப்பாற்றுவது? தாயே நீதான் காப்பாற்றவேண்டும் என்று போயும் போயும் இந்த யமுனையை வேண்டுகின்றனரே! கோரிய வரங்களை நல்கும் ஸ்ரீ கிருஷ்ணன் (அக்கோபியரின்) அவர்களின் முன்பாக இருந்தும், அவனிடம வேண்டாமலும், அவனைச் சரணமடையாமலும், அவர்கள் (கோபியர்) யமுனாதேவியை வேண்டும் கோலத்தைப் பாருங்கள்!' என்று தேவர்கள் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளலாயினர்.

वचनम्— ई विधम्बुन गोपिकामणुलु यमुनादेविवलन सौख्यम्बु लेनन्दुन
मरि व्यसनाक्रान्तलयि नेञ्जलि (तो) निट्टुलनिरि.

வசனம்: ஈ விதம்புந கோபிகாமணுலு யமுனாதேவி வலன ஸௌக்யம்பு லேனந்துந மரிவ்யஸநாக்ராந்தலயி நெஞ்ஜலி நிட்டுலனிரி.

सी. ३. बालभावमुतोड पणतुल पालिण्ड्ल
पै पव्वलिञ्चेडि पद्मनाभु
निण्टिण्ट जोरबडि इल्लाण्ड्रु चट्टुचु
वेड्कगा दिरिगेडि विमल हृदयु
मुद्दुगारग नूरि मुदितल नेलुचु
नीडनु शोभिल्लु निर्मलास्यु

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

स्त्रीबुद्धिवल्लनु जेरुचुकोण्टिमि [1]गाक
येल देच्चितिमम्म येलविभुनि

तल्लडिल्लेडि कालिन्दि दाटि तल्लि
चेन्त कृष्णुनि नेवेळ जेर्तुमम्म
यनुचु तारुण्यवतुलेल्ल नलरुचुण्ड
जूचि मदिलोन नगुचुण्डे सुमुखु डपुडु

ஸிஸபத்யம் — 3

பாலபாவமுதோட பணதுல பாலிண்ட்ல
பை பவ்வளிஞ்சேடி பத்மநாபு
நிண்டிஂண்ட ஜொரபசேடி இல்லாண்ட்ர படுசு
வேட்ககா திரிகெடி விமல ஹ்ருதயு
முத்துகாரகு நூரி முதிதல நேலுசு
நீடநு சோபில்லு நிர்மலாத்மு
ஸ்த்ரீபுத்தி வல்லனு ஜெருசு கொண்டிமி கா கு[2]
ஏல தெச்சிதிமம்ம ஏல விபுனி

தல்லடில்லெடி காளிந்தி தாடி தல்லி
செந்த க்ருஷ்ணுநி நேவேள ஜேர் துமம்ம
யநுசு தாருண்யவதுலெல்ல நலருசுண்ட
ஜூசி மதிலோன நடுசுண்டெ ஸுமுகு டபுடு

பால பாவமு தோட — குழந்தைத் தனத்துடன் பணதுல பாலிண்ட்ல பை — பெண்களின் மார்பில். பவ்வளிஞ்சு பத்மநாபு — சாய்ந்திருப்பவன் இந்த பத்மநாபன்.

---

1. गानि, 2. காநி.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

நிண்டிண்ட ஜொரபடி — இல்லந்தோறும் சென்று (அங்குள்ள), இல்லாண்ட்ர பட்டுசு வேட்ககா — பெண்க ளைப் பிடித்து இழுத்து விளையாடி. திரிகெடி — திரி கின்றவன். விமலஹ்ருதயு — களங்கமற்றவனான ஸ்ரீக்ருஷ்ணன்.

முத்துகாரக முதிதல நாரி நேலுசு—அழகுததும்பும் இளம் பெண்களை அணைத்து மகிழ்ந்து ஆட்கொள்ப வன், நீடநு சோபில்லு நிர்மலாத்மு — அவர்கள் (கோபியர்கள்) நிழலில் உறைபவன், இந்தக் களங்கமற்ற கண்ணன். ஏலமெதச்சிதி — (இவனை) ஏன் யமுனையில் ஓட விளையாட்டிற்காக அழைத்துவந்தோம்?, ஸ்திரீ புத்தி வல்லறு—பெண்புத்தியினால், ஜெருசு கொண்டிமி காக—கெட்டுப்போனோம் அல்லவா?

தல்லடில்லெடி காளிந்தி தாடி — பொங்கிப் பெருகி வரும் இந்த யமுனை வெள்ளத்தைத் தாண்டி, க்ருஷ்ணு நின் தல்லிசெந்த — கிருஷ்ணனை அவனுடைய தாயிடம், யேவேள ஜேர்த்துமம்ம — எந்த வேளையில் சேர்ப்போம் அம்மா ?

யநுசு — என்று, தாருண்யவதுலெல்லன் — யௌவனம் மிகுந்த அக்கோபியர், அலருசுண்டஜூசி — அலறுவதைக் கண்ட, ஸ்முகுடு — ஸ்ரீ கிருஷ்ணன், அபுடு மதிலோ நந்நகுகண்டே — அப்பொழுது தனது மனத்தில் சிரித்துக்கொண்டிருந்தான்.

கருத்து : குழந்தை தனது தாயாரின் மார்பில் எங்ஙனம் ஏதுமறியாது சாய்ந்திருக்குமோ ? அதைப் போல இளம் மங்கையரின் மார்பில் சாய்ந்துகொண் டிருப்பவன், கள்ளங்கபடமற்ற கண்ணன். மேலும், கோபியரின் இல்லங்களில் புகுந்து அங்குள்ள கோபியரைப் பிடித்திழுத்து விளையாடி மகிழ்பவன். அழகு ததும்பும் இளம் பெண்களை அணைத்து, அவர்களுடன் இன்பமாக

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

எப்பொழுதும் காலங் கழிப்பவன். துன்பம் என்பதே தெரியாமல் ஆனந்தமாகவே சிரித்து விளையாடும் கண்ணனை ஓடச் சவாரிக்காக அழைத்து வந்து அவனுக்கும் துன்பத்தைக் கொடுத்து, நாமும் துன்பப்பட்டுக்கொண்டு இப்பொழுது அவதிப்படுகிறோமே! ... இவையனைத்துக்கும் காரணம்? ... பெண் புத்தி. இந்த பெண் புத்தியால் தேவையற்ற கஷ்டத்தை வரவழைத்துக் கொண்டோம். 'எப்பொழுது இந்த யமுனை வெள்ளத்தைக் கடந்து இவனது தாய் யசோதையிடம் இவனை ஒப்படைப்போமோ? இறைவா' ... என்று அக் கோபியர் அலறினர். இவர்களது செய்கைகளையெல்லாம் கண்டு வாய் பேசாமல் மௌனமாக, தனது மனத்தில் சிரித்துக் கொண்டிருந்தான் கண்ணன்.

இங்கு குழந்தைப் பருவம், பாலப்பருவம், இளமைப் பருவம் மற்றும் அதில் செய்யப்படும் விளையாடல்களும் குறிக்கப் பெற்றுள்ளன. இம் மூன்று விதமான பருவங்களிலும் துன்பத்தின் சாயலே சிறிதுமின்றி எப்பொழுதுமே மகிழ்ச்சியாக இருக்கும் கண்ணனை ஓடத்தில் அழைத்து வந்தனர் கோபியர். இயற்கைச் சூழலின் மாற்றத்தால் "உயிர் பிழைக்குமா? பிழைக்காதா? என்ற உயிர் பயத்தை (மிகமிகக் கொடுமையான துன்பம், மரணம் அல்லது உயிர் பற்றிய பயம், அத்தகைய உயிர் பயத்தைத்)த் தருவதான துன்பத்தை நம்முடைய அறியாமையால், பெண்புத்தியால் கண்ணனுக்குத் தந்துவிட்டோமே! நமது உயிருக்கும் மேலான கண்ணன் காப்பாற்றப்பட வேண்டியவன். அவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டும். ... ஆனால் எப்படிக் காப்பாற்றுவது? என்ற வழியும் புரியாத நிலையில கண்ணனின் உயிர் பற்றிய பயத்தால் அலறத் தொடங்கினர் கோபியர் என்பது தொனிப் பொருள்.[1]

---

1. ஓடநு ஜரிபெடு — (இந்த நூலின் பக்கம் 53) என்னும் தருவில் கோபியர் மகிழ்ச்சியாக ஓடத்தில் செல்லும் குறிப்பு காணப்படு

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

वचनम्— [1]अटुवण्टि समयम्बुन श्रीकृष्णदेवुण्डु गोपिकामणुल नेचुटकै जालि जेन्दिनवानि रीति निट्लुलनिये.

வசனம்: அடுவண்டி[2] ஸமயப்புன ஸ்ரீ க்ருஷ்ண தேவுண்டு கோபிகாமணுல நேசுடகை ஜாலி ஜெந்தின வானிரீதி நிட்டுலநியெ.

द्विपद. भामलम्मेड्डु रेगुपण्ड्ल नेनु
कानिञ्चि मुरयसुलु करमुलनिण्ड
नुनुचुक ने राग नुप्पोङ्गि मीरु
कनुल द्रिप्पुचु [3]नेत्तिकांनि वेड्कतोड
मञ्जुळ मुखुलार! मदवतुलार!
कोञ्जक ननुदेग गोब्बुन निटकु
नपुड्डु ने राननि याड्डुकां लेक
इपुड्डु [4]शोकिञ्चुट हीनमु गादे!
इन्तकु [5]वच्चुट येरुग लेनैति
इन्तुल नम्मरा देन्तवारिकिनि

குறிப்பு. அதற்கும் சாக்ஷியாக இருந்த கண்ணன், இப்போது படும் துன்பத்திற்கும் சாக்ஷியாக இருக்கிறான். இன்ப — துன்பங் களுக்குச் சாக்ஷியாக இருப்பது 'பரப்ரம்ம வஸ்து' என்பது அத் வைதக் கொள்கை. அத்தகைய பரப்ரும்ம வஸ்துவே கண்ணனாக கோகுலத்தில் அவதரித்தான் என்ற கருத்தை ஸ்ரீ நாராயணதீர்த்த ரின் ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணியில் 'பரமிஹ பச்யத புருஷம்' என்ற பாடலுடன் ஒப்புநோக்கத்தக்கது.

1. अट्टि, 2. அட்டி 3. गटिनि चुनुचुकोनि.
4. शोकिञ्चेति 5. वच्चटि.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

த்விபதர் பாமலப்பெடு ரேகுபண்ட்லகை நேநு
காமிஞ்சி முத்யமுலு கரமுலநிண்ட
நுநுசுக நேராக நுப்பொங்கி மீரு
சனுல த்ரிப்புசு நெத்திகொனி வேட்கதோட
மஞ்ஜுளமுகுலார மதவதுலார
கொஞ்சக[1] நனுதேக கொப்புந நிடகு
நபுடு நே ரானனி யாடுகோ லேக
இபுடு சோகிஞ்சுட[2] ஹீநமு காதெ
இந்தகு வச்சுட[3] யெருக லேநைதி
இந்துல நர்ம ராதெந்தவாரிகினி

நேநு ரேகு பண்ட்லகை காமிஞ்சி—நான் இலந்தைப் பழத்திற்கு ஆசைப்பட்டு, முத்யமுலு கரமுல நிண்ட — முத்துக்களை கைநிறைய, நுநுசுக நேராக — எடுத்துக்கொண்டு வரும்போது, பாமலெம்மெடுந் உப்பொங்கி மீரு—பெண்களாகிய நீங்கள் (என்னைக்கண்டு) உணர்ச்சி வசப்பட்டு, கநுவ த்ரிப்புசு — கண்களை உருட்டிக்கொண்டு, வேட்கக நெத்துகொநி — மகிழ்ச்சியுடன் என்னைத் தூக்கிக் கொண்டீர்களே!

மஞ்ஜுள முகுலார!— அழகிய முகமுடையவர்களே!, மதவதுலார—மதமுள்ளவர்களே! கொஞ்சக — சிறிதும் சிந்திக்காமல், நநுதேக கொப்புந நிடகுன் — என்னை விரைவாக அழைத்தீர்கள். அபுடு — அப்பொழுது, நேரானனி — நான் 'வர முடியாது' என்று, ஆடுகோலேக —சொல்லமுடியாமல் இருந்தேன்.

இபுடு சோகிஞ்சுட — இப்பொழுது வருத்தப்படுவது ஹீநமு காதே?—இழிவல்லவா? இந்தகு வச்சுட யெருக

---

1. வேஞ்சேஸி மரிகானி வேடுக மீரகனு
2. சோகிஞ்சேதி. 3. வச்சேதி.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

லைநதி—இப்படி வந்துவிடும் என்று தெரிந்துகொள்ள வில்லை என்று சொல்வதால் (பயன் என்ன?) — எந்த வாரிகினி—எப்பேர்ப்பட்டவராக இருந்தாலும், இந்துல நம்மராது—பெண்களை நம்பக்கூடாது.

கருத்து : (அவதாரிகை) 'பெண்புத்தியினால் இத்தகைய துன்பத்தை விளைவித்துக்கொண்டோமே!'' என்று வருந்துகின்ற கோபியரின் நிலையைக்கண்ட தேவர்களின் கருத்தைக்கூறிய (சுந்தபத்யம் — 28ன் (பக்; 104) ஸ்ரீ ஸ்வாமிகள் இப்போது கண்ணனின் கருத்தை இப்பாடலில் கூறுகிறார்,

கண்ணன் பேசலானான் :

ஏ பெண்களே! நான் இலந்தைப் பழத்திற்கு ஆசைப்பட்டு (எனது குழந்தைப் பருவத்தில்) என்னுடைய குஞ்சுக் கைகளால் (சின்னஞ்சிறிய கைகளால்) நல்முத்துக்களை எடுத்துவந்தேன், இலந்தப்பழம் வாங்க.

ஆனால் இலந்தைப் பழத்தை நான் பெற்றுக்கொள்வதற்குள் (நீங்களாகவே வலியவந்து) எனது அழகில் மயங்கி, என்னை மகிழ்வாக தூக்கிக்கொண்டு விட்டீர்கள், (அப்படியே இப்பொழுதும் நடந்துள்ளது.) உங்களது 'மதத்தினால்' சிறிதும் முன்பின் சிந்தியாமல் என்னை உங்களுடன் உடனே வருமாறு அழைத்தீர்கள். வந்துவிட்டேன். அந்த நிலையில் நான் வரமாட்டேன் என்று சொல்லவும் நீங்கள் இடம்தரவில்லை, போனால் போகிறது. நீங்கள் அழைக்கிறீர்களே! என்று நானும் உங்களுடன் வந்துவிட்டேன். இந்த நிலையில் 'ஏன் (கண்ணனை) இவனை அழைத்துவந்தோம். இத்தகையதொரு சூழல் வரும் என்று தெரியாது. அது தெரிந்திருந்தால் அழைத்து வந்திருக்கவே மாட்டோம்' என்று இப்பொழுது வருந்துகிறீர்கள். இப்படி வருந்துவது உங்களுக்கு இழிவல்லவா?.........சரி......சரி......நீங்கள் எப்படிப்பட்டவராக இருந்தாலும், பெண்கள்தானே?

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

ம்.........ம்.........பெண்களை நம்பக்கூடாது என்றான் கண்ணன்.

இலந்தைப்பழம் வாங்கும்போதே எனது அழகால் ஆட்கொள்ளப்பட்ட நீங்கள், எனது மனக்கருத்தை அறியாமல் எனது விருப்பத்திற்கு மாறாக என்னை உங்களுடன் இணைத்துக்கொண்டீர்கள் என்று கண்ணன் கூறுவதிலிருந்தே உங்கள் விருப்பப்படித்தான் நீங்கள் நடப்பீர்கள். எதிராளியின் மனக்கருத்தை அறிந்து கொள்ளும் வழக்கமே உங்களிட (பெண்களிடம்)மில்லை என்றும், இதனால் எதிர் விளைவுகளை ஊகிக்கவும் மாட்டீர்கள் என்றும் கோபியரது (பெண்களின்) இயல்பு களைச் சுட்டிக் காட்டுகிறான் கண்ணன்.

அதேபோல படகுச் சவாரி செய்ய எங்களுடன் 'வா' என்று அழைத்தீர்களேயன்றி படகுச் சவாரியின் பயன் என்ன? நம்முடன் எதற்காக கண்ணன் வரவேண்டும்? படகுச் சவாரி செய்ய கண்ணன் விரும்புகிறானா? என்பதைப்பற்றியெல்லாம் நீங்கள் சிறிதும் சிந்திக்கவே யில்லை என்பதிலிருந்து 'ஒரு செயலைச் செய்வதற்குமுன் அச்செயலின் பயனை பெண்கள் சிந்திக்க மாட்டார்கள்' என்றும், வா என்று அழைத்தீர்கள். நான் வரமாட்டேன் என்று சொன்னேன். நீங்கள் கேட்டீர்களா? 'என்று கேட்பதிலிருந்தே எதிராளியின் மனக்கருத்தை அனுசரிக்க விரும்பாதவர் பெண்கள் என்றும், இப்போது 'ஏன் அழைத்தோம்?' என்று பரிதாபப்படுகிறீர்கள்' என்பதி லிருந்து ஒரு செயலைச் செய்துவிட்டு அது வெற்றிகரமாக அமையாவிடில் பின்னர் வருந்துவது இயற்கை என்றும் சலனபுத்தியுள்ளவர்கள் பெண்கள் என்பதையும் எத் தகைய சூழலில் வளர்ந்த பெண்ணாக இருந்தாலும் அவர்கள் சஞ்சல புத்தியுடையவர்களே! அவர்களை நம்பி எந்தச் செயலிலும் இறங்கக்கூடாது' என்று கூறுவதி லிருந்து பெண்களின் இயற்கைக்குணம் இத்தகையது என்பதும் இப்பாடலின் தொனிப்பொருள்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

वचनम्— वैद्युडु वेसनपड्डु चन्दम्बुन कृष्णदेवुण्डनिन विनि गोपिकलु मिक्किलि [1]निण्डारि येमनुचुन्नारु.

வசனம்: வைத்யுடு வெஸனபடு சந்தம்புன க்ருஷ்ண தேவுண்டனின வினி கோபிகலு மிக்கிலி நிண்டாரி[2] யேமனு சுன்னாரு.

२१. उत्पलमाला —

मानुन चेट्टु तेनियनु
मानक तेच्चि मदिञ्चि मानिनी
तानु भुजिम्पलेक वसु
धास्थलि नोल्कग बोसुकोन्न च-
न्दान पुरम्बुन न्वेलयु
दानववैरिनि गूड लेकने
मानमु पोवनाये मन
मन्दरु बापमु पोसुकोण्टिमे.

உத்பலமாலா

மாநுன பெட்டு தேனியநு
மானக தெச்சி மதிஞ்சி மாநிநீ
தானு புஜிம்பலேக வஸு
தாஸ்தலி நொல்கக போஸுகொன்ன சந்
தான புரம்புநன் வெலயு
தாநவவைரினி கூட லேகனே
மாநமு போவனாயெ மன
மந்தரு பாபமு போஸுகொண்டிமே

1. वेसनपड्डुचु. 2. வெஸநபடுசு.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

மாநிநீ — பெண்களே! மானுன மதிஞ்சி தேநியநு பெட்டு — மரத்தில் (தேனீக்களால்) சேகரித்து வைத்த தேனை; (ஒருத்தி) மானக தெச்சி — சிறிதும் மிச்ச மில்லாமல் கொண்டுவந்தும், தானு பூஜிப்ப லேக — தானும் உண்ண முடியாமல். வஸுதா ஸ்தலின் ஒல்கக போஸு கொன்ன சந்தான — பூமியில் தாரை வார்த்து வழியச் செய்ததைப் போல, புரம்புநன் வெலயு — ஊரிலிருந்த (ஆயர்பாடியிலிருந்த) தாநவ வைரிநி — அசுரர்களின் பரம வைரியான கண்ணனை, கூட லேக — சேரவும் முடியாமல், மாநமு போவனாய — மானம் போகும்படியாயிற்றே, மனமந்தரு — நாமெல்லோரும், பாபமு போஸு கொண்டிமே — பாவத்தையும் சேர்த்துக் கொண்டோமே என்று கோபியர் வருந்தினர்.

கருத்து: (அவதாரிகை) துன்பத்தினால் கூச்சலிடும் அந்தக் கோபியரின் பேச்சைக் கேட்ட கண்ணன், வியாதி யினால் அவதிப்படும் நோயாளியிடம் வைத்தியம் செய்யும் வைத்தியனே "அடடா! இப்படியா வியாதி வந்து விட்டது"? என்று வேதனைப் படுவதைப் போல் கிருஷ்ணன் பேசுவதைக் கேட்ட கோபியர் மிகவும் துக்கத் துடன் கூறினர்.

ஏ பெண்களே! நம்முடைய நிலை எப்படி ஆயிற்று பார்த்தீர்களா? ஒருத்தி மரத்திலிருக்கும் தேன் கூட்டைப் பார்த்து அதைத் தானே உண்ண வேண்டும் என்ற ஆசையால் தேன் முழுவதையும் எடுத்து வந்தாள். ஆனால் அந்தத் தேன் எதிர்பாராத விதமாக பூமியில் கொட்டி ஒருவருக்கும் பயன்படாமற் போயிற்று. இதைப் போல, ஆயர்பாடியிலிருந்த கண்ணனை நாமே 'அநுபவிக்க வேண்டும்' என்று அழைத்து வந்தும் அவனை அனுபவிக் காமல், அவமானமும் படநேர்ந்ததே! அது மட்டுமா?

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

பாவத்தையுமல்லவா சேர்த்துக் கொண்டோம்'. என்று வருந்தினர்.

எப்பொழுதோ, யாராலோ தோற்றுவிக்கப்பட்ட ஒரு மரத்தில், தேனீக்களின் முயற்சியால் சேகரித்து வைத்துள்ள தேனை, இவ்விரண்டுக்குமே எவ்விதத்திலும் சம்பந்தப்படாமலும், அந்த தேனைச்சேர்க்க எவ்வித முயற்சியும் செய்யாத ஒருத்தி, அந்தத்தேன் முழுதையுமே தானே உண்ணவேண்டும், என்ற பேராசையுடன், அக் கூட்டிலிருந்து தேன் முழுதையும் பிழிந்துகொண்டு வந்தாள். ஆனால் அந்தத் தேனை இவள் உண்டு அனுபவிக்குமுன் அது பூமியில் கொட்டிவிட்டது. இதனால் தானும் அனுபவிக்காமலும், பிறரையும் அனுபவிக்க விடாமலும் பூமியில் சிந்தி விணடிப்பதைப்போல மஹனீயர்களான முனிவர்களின் தவத்திற்குக் கட்டுப் பட்ட பரம்பொருள், கண்ணனாகத்தோன்றி ஆயர்பாடி யில் ஆடிப்பாடிக்கொண்டிருந்தது அத்தகைய *கண்ண னுக்கும், அக்கோபியருக்கும் எந்தவிதத்திலும் சம்பந்தமே இல்லாத கோபியர், 'கண்ணனைத் தாங்கள் மட்டுமே அடையவேண்டும்' என்ற எண்ணத்தினால் அவனைத் தனியாக ஓடத்தில் அழைத்துவந்தனர். இந்த நிலையில் கண்ணனின் உயிருக்கே ஆபத்து வருமானால்? நாம் அனுபவிக்க முடியாமலும் பிறரும் கண்ணனை அனுபவிக்க முடியாமலும், கண்ணனின் நிலை ஆகிவிடுமோ! என்று கவலைப்பட்டனர் கோபியர் என்பது தொனிப்பொருள். இங்கு தேன் என்பது கண்ணனைக்குறிக்கும்.

वचनम्— अन्तट गोपिकामणुलु जन्मान्तरकृत पूजाफलमुलु दलचि
व्यसनाक्रान्तुलयि येमनि बलुकुचुन्नारु.

வசனம்: அந்தட கோபிகாமணுலு ஜன்மாந்தர—க்ருத பூஜாபலமுலு தலசி வ்யஸனாக்ராந்துலை ஏமனி பலுகு சுன்னாரு.

---

* இதன் விளக்கம் இந் நூலின் 8-ம் பக்கம் அடிக்குறிப்பில் காண்க.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

रागमु : घण्टा] दरु—१४ [ताळमु : आदि

पल्लवि

पेरुगु पालु भुजियिञ्चि तनुवुल
वेञ्चिनदेल्ल निन्दुका

अनुपल्लवी

निरवधि सुखदायक! मा वयसु
नीटनु गलयु टन्दुका

चरणम्

अत्तमामलतो नीकै मेमेदु
राडिनदेल्ल निन्दुका
सत्त गलिगि इकनैक युन्दुमनि
सन्तसिल्लिन दिन्दुका ॥ १ ॥

आशदीर नीसेव वलयुननि
अरसिन देल्ल निन्दुका
वासियुण्ड नेरक पेद्दलचे
वामुलु जेन्दिन दिन्दुका ॥ २ ॥

स्नानपानमुलु जेयुवेळ निनु
ध्यानमु जेसिन दिन्दुका
मेनु नीसोम्मुलु जेयुटकै
मे मल्लाडिन दिन्दुका ॥ ३ ॥

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

सलिरुगोणुलै यमुनानदिलो
तल्लडिल्लु टिन्दुका
चलचुचु तोलिजन्ममुन रामुनिचे
वरमुलु बडसिन दिन्दुका ॥ ४ ॥

कोटि जन्ममुलु तपमुलु जेसि
कोरिनदेल्ल निन्दुका
साटिलेनि नी लीललु मनमुन
सैरिञ्चि युन्न दिन्दुका ॥ ५ ॥

आगम निगम पुराण चारुडनि
यनुसरिञ्चिन दिन्दुका
त्यागराजनुत तारकनाम नी
तत्वमु देलिसिन दिन्दुका ॥ ६ ॥

கரு—14

ராகம்: கன்டா] [தாளம்: ஆதி

பல்லவி

பெருகு பாலு புஜியிஞ்சி தனுவுல
பெஞ்சினதெல்ல நிந்துகா

அனுபல்லவி

திரவதி ஸுகதாயக! மா வயஸு
நீடனு கலயு டந்துகா

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

சரணம்

அந்த மாமலதோ நீகை மேமெது
ராடிநதெல்ல நிந்துகா
ஸத்த கவிகி இகனைன யுந்துமநி
ஸந்தஸில்லின திந்துகா 1

ஆசதீர நீஸேவ வலயுநநி
அரஸின தெல்ல நிந்துகா
பாஸியுண்ட நேரக பெத்தலசே
பாமுலு ஜெந்தின திந்துகா 2

ஸ்நாந பானமுலு ஜேயுவேள நிநு
த்யாநமு ஜேஸின திந்துகா
மேனு நீஸொம்முலு ஜேயுடகை
மே மல்லாடின திந்துகா 3

தலிருபோணுலை யமுனா நதிலோ
தல்லடில்லு டிந்துகா
வலகசு தொலிஜன்மமுந ராமுநிசே
வரமுலு படஸிந திந்துகா 4

கோடி ஜன்மமுலு தபமுலு ஜேஸி
கோரின தெல்ல நிந்துகா
ஸாடிலேனி நீ லீலலு மனஸுன
ஸைரிஞ்சி யுன்ன திந்துகா 5

ஆகம நிகம புராண சாருடனி
யனுஸரிஞ்சிந திந்துகா
த்யாகராஜநுத தர்ரசுநாம நீ
தத்வமு தெலிஸின திந்துகா 6

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

பல்லவி: பெருகு பாலு புஜியிஞ்சி — தயிர்பால் முதலியவற்றை சாப்பிட்டு, தநுவுல பெஞ்சினதெல்லன்— உடம்பை வளர்த்ததெல்லாம், இந்துகா — இதற்கா?

அனுபல்லவி: நிரவதி ஸுகதாயக—எல்லையற்ற சுகத்தை அளிப்பவனே! மாவயஸு — எங்கள் வயது நீடநு கலயுடந்துகா — தண்ணீரில் கரைவதற்குத்தானா?

சரணம்: 1. அத்தமாமலதோ—அத்தை, மாமாக்களுடன், நீகை—உனக்காக, மேமுயெதுரநாடிநதெல்லநு— நாங்கள் எதிர்த்துப்பேசியதெல்லாம், இந்துகா? — இதற்காகவா?, ஸத்தகலிகி—ஸமாதானமடைந்து, இக நைன — இனியாவது, உந்துமுஅநி — இருப்போமென ஸந்த ஸில்லிநதி — சந்தோஷப்பட்டது, இந்துகா — இதற்கா?

2. ஆசதீர—ஆசை தீர, நீஸேவ—உனக்கு ஸேவை, வலயுநநி — செய்வோமென்று, அர்ஸினதியெல்ல — சிரமப் பட்டதெல்லாம், இந்துகா ? — இதற்கோ ? பாஸியுண்ட நேரக — பிறிந்திருக்கமுடியாமையால், பெத்தலசே — வீட்டுப் பெரியவர்களால், பாமுல ஜெந்தினதி— துன்பப் பட்டது, இந்துகா — இதற்கா ?

3. ஸ்நாந பாநமுல ஜேயுவேள — குளிப்பது, உண்பது ஆகிய வேளைகளில், நிநு — உன்னையே த்யாநமு ஜேஸினதி இந்துகா ? — தியானம் செய்தது இதற்கா ? மேநு நீ ஸொம்முலு ஜேயுடகை — எங்களது மேனிகளை உனது சொத்தாகச் செய்ய, மேமு அல்லாடினதி இந்துகா ? — நாங்கள் அலைந்தது இதற்காகவா ?

4. தலிரு போணுலை — தளிர்போன்ற அழகுடையவர்களாக இருந்துகொண்டு, யமுனா நதிலோதல்லடில்லுட இந்துகா ? — யமுனை நதியில் தடுமாறுவது இதற்கோ ? வலசுசு தொலிஜென்மமுந — காமுற்று முன்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

ஜென்மத்தில் (பிறவியல்) ராமுநிசே — ராமனிடம், வரமுலு படஸிநதி — வரங்களைப் பெற்றது இந்துகா ? — இதற்கோ ? (பக். 8 – காண்க)

5. கோடி ஜன்மமுலு — கோடிக்கணக்கான பிறவி களில், தபமுலு ஜேஸி கோரினதெல்ல — தவம்செய்து வேண்டியதெல்லாம், இந்துகா ? — இதற்கோ ? ஸாடி லேநி நீ லீலலு — ஈடிணையற்ற உனது திருவிளையாடல் களை, மனஸுன ஸைரிஞ்சி யுன்னதி — மனதில் பொருத்துக் கொண்டிருந்தது. இந்துகா ? — இதற்கோ ?

6. ஆகம, நிகம, புராண சாருடநி — வேத. ஆகம, புராணங்களில் நீ சஞ்சரிப்பவன் என்பதை, அநுஸரிஞ்சினதி இந்துகா ? — ஏற்றுக்கொண்டது இதற்கோ ? த்யாகராஜ நுத — தியாகராஜனால் வணங்கப்பட்டவனே, தாரக நாம — தாரக நாமத்தையுடையவனே, நீ தத்துவமு தெலிஸிநதி — உனது தத்துவத்தை அறிந்துகொண்டது, இந்துகா — இதற்கோ ?

கருத்து: எல்லையற்ற சுகத்தை அளிக்கும் ஸ்ரீ கிருஷ்ணா ! தயிர், பால், வெண்ணை, போன்ற உணவை யுண்டு உண்டு வளர்ந்த இந்த உடல் உனது சொத்து. இதனை எப்படியாவது காப்பாற்றி உன்னிடமே அளிக்க எண்ணியிருந்ததெல்லாம் வீணாயிற்றே ! அத்தை. மாமன் மற்றும் வீட்டிலுள்ள பெரியோர்களின் ஏச்சையும், பேச்சை யும் கேட்டோம். அவர்கள் அளித்த அடிகளையும் பெற்றுப் பொருத்தோம். அவர்களை எதிர்த்துப் பேசி கெட்ட பெயரையும் பெற்றோம். இதெல்லாம் எதற்கு ? உன்மீது கொண்ட ஆசையால், என்றாவது உனது அருள் கிட்டும், அதனால் உனது பாத ஸேவை செய்யும் பேற்றை அடைவோம் என்ற நம்பிக்கையுடன் அத்தனை துன்பங் களையும் ஏற்றோம். தாங்கிக் கொண்டோம். உன்னைப் பிரிய முடியாமல் உனது நினைவிலேயே காலத்தைக் கழித்தோம். குளிக்கும் போதும் உண்ணும் போதும்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

உறங்கும் போதும் எப்பொழுதுமே உன்னையே நினைந்து நினைந்து வாழ்ந்தோம். கோடிக் கணக்கான ஆண்டுகளாகத் தவங்கிடந்து அத் தவத்தின் பயனாக எங்களது முற்பிறவியில் பகவான் ஸ்ரீ ராமனை எங்கள் கண்களால் கண்டோம். அவனுடைய அழகில் ஈடுபட்டு மெய்மறந்திருந்தோம். அவனையே அணைத்துக்கொள்ள ஆசைப்பட்டு எங்கள் விருப்பத்தையும் அவனிடம் விண்ணப்பித்தோம். [1]அதன் பயனாக இப்பிறவியில் உன்னைக் கண்டோம். எங்களது கோரிக்கைகளை குறிப்பால் உன்னிடம் கூறினோம். அது இன்னும் நிறைவேறாத நிலையில் எங்களது உடலும், அழகும், இளமையும், ஆசையும், மகிழ்ச்சியும் அனைத்தும் இருந்தும் பயனென்ன? ஆற்று நீரோடு எங்கள் உடல் கரைந்து போகவா? இத்தனை முயற்சிகளும் துன்பங்களும். வேத புராணங்களின் தத்துவப் பொருளே! ஸ்ரீ ராமா! உனது தத்துவங்களை அறிந்து உன்னை வழிப்பட்டதெல்லாம் இதற்குத் தானா? என்று கோபியர் வருந்தி கண்ணனிடம் வேண்டினர்.

वचनम्— ई विधम्बुन कलवरिञ्चु गोपिकासुन्दरुलन् जूचि श्रीकृष्ण-
देवण्डु व्रतुक नुपायमु बल्कुनदेटुवलेनु.

வசனம் : ஈ விதம்புன கலவரிஞ்சு கோபிகாஸுந்தருலன் ஜூசி ஸ்ரீ க்ருஷ்ணதேவுண்டு ப்ரதுக நுபாயமு பல்குந தெடுவலெனு.

३०. *उत्साह— अङ्गलार्चरादु ओ भु
जङ्गवेणुलार! या
अङ्गजारिकैन कर्म
मन्तरानलम्बु सा

---

1. இச்செய்தியின் விளக்கம் இந்நூலின் 8 ஆம் பக்கம் அடிக்குறிப்பில் காண்க. * पञ्चचामरम्.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

रङ्गनेत्रुलार! पञ्च
रङ्गु कञ्चुकम्बुलन्
बोङ्गिवच्चु नीटिकण्ट
बोन्दुगानु नुञ्चरे.

உத்ஸாஹ*

அங்கலார்ச ராது ஓ பு
ஜங்க வேணுலார ! யா
அங்கஜாரிலைகந கர்ம
மந்தரானலம்பு ஸா
ரங்கநேத்ருலார ! பஞ்ச
ரங்கு கஞ்சுகம்புலன்
பொங்கிவச்சு நீடிகண்ட
பொந்துகானு நுஞ்சரே

அங்கலார்சராது—அங்கலாய்த்தலாகாது. ஓ புஜங்க வேணுலார! பாம்பு போல் நீண்ட கூந்தலுடையவர்களே! ஆ அங்கஜாரி கைன கர்மமு அந்தராலனம்பு—அந்த சிவனுக்கே கர்மத்தின் பயன் விடவில்லை. ஸாரங்க நேத்ருலார!— மான் போன்ற விழியோரே! நீடிகண்ட பொங்கிவச்சு — நீர் பெருகி வரும் பொந்தில், (ஓடத்தின் துவாரத்தில்) பஞ்ச ரங்கு கஞ்சுகம்புலன் — வண்ண வண்ண ரவிக்கைகளை, பொந்துகாநு நுஞ்சரே — பொந்துகளில் அடையுங்கள்.

கருத்து: (அவதாரிகை) பயத்தினால் கலவரமடைந்த அந்த கோபியரைப் பார்த்து, கண்ணன் அவர்களுக்கு ஆறுதலாக ஒரு உபாயத்தைக் கூறினான்.

* பஞ்சசாமரம்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

பெண்களே! யார் யாருக்கு எந்தெந்த கர்மாவை அனுபவிக்கவேண்டுமோ அவற்றை அவரவர் அனுபவித்துத் தான் ஆகவேண்டும். அந்த சிவபெருமானையே அவரது கர்மா விடவில்லையென்றால் நாம் எம்மாத்திரம்? சரி ... சரி ... இந்த ஓடத்தினுள் தண்ணீர் புகுந்துகொண்டேயிருக்கிறது. இதனை முதலில் தடுத்து நிறுத்த வேண்டும். ஆகையால் உங்களது ரவிக்கைகளைக் கொண்டு அந்தப் பொந்தை முதலில் அடையுங்கள். அதுவே தண்ணீர் ஓடத்தினுள் புகாமலிருக்க ஒரே வழி என்றான்.

वचनम्— इट्लु आपत्कालोपायमैन वार्तलु विनि गोपिकामणुलेमिसेयुचुन्नारु.

வசனம்: இட்லு ஆபத்காலோபாயமைன வார்த்தலு வினி கோபிகாமணுலேமி ஸேயுசுன்னாரு.

क. ३१. आ मनविनि विनि सुदतुलु
क्षेममुकोरकै मुदान शीघ्रमुगाने
येमरक कञ्चुकम्मुलु
नेममुतो नुनुप दान निल्वकपोयेन्.

க. 31. ஆ மனவினி வினி ஸுததுலு
க்ஷேமமுகொரகை முதாந சீக்ரமுகாநே
ஏமரக கஞ்சுகம்முலு
நேமமுதோ நுநுப தான நில்வக போயென்

ஆ மனவினி — அந்த வேண்டுகோளைக்கேட்டு, ஸுததுலு — கோபியர், க்ஷேமமு கொரகை — நன்மையின் பொருட்டு, முதாந — மகிழ்வாக, சீக்ரமுகாநே - விரைவாக, ஏமரக — ஏமாற்றமடையாமல், கஞ்சுகம்முலு—ரவிக்கைகளை, நேமமுதோ — முறைப்படி (பொந்தில்) நுநுப —

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

அடைத்தும், தான நில்லக போயென் — நீர் பெருகியதே (தவிற) நிற்கவில்லை.

கருத்து: கண்ணன் கூறிய உபாயத்தைக் கேட்ட கோபியர், நன்மையின் பொருட்டு அதுவே சரியென்று ரத்தினங்கள் பதித்ததும், ஜரிகை வேய்ந்ததுமான தங்களது ரவிக்கைகளை அவிழ்த்து ஓடத்தின் ஓட்டையில் அடைத்தனர். அப்படி அடைத்தும், தண்ணீர் பெருகியதே யன்றி நிற்கவேயில்லை.

वचनम्— नवरत्नखचित कनकमयमैन कञ्चुकम्मुलु नौकारन्ध्रमुलो नुनुप नन्दु निलुवक निमिषमुन नीटबोंजूचि गोपिकलु जालितो येमनुचुन्नारु.

வசனம்: நவரத்னகசித கனகமயமைன கஞ்சுகம்முலு நௌகா ரந்த்ரமுலோ நுநுப நந்து நிலுவக நிமிஷமுன நீட போஜூசி கோபிகலு ஜாலிதோ ஏமனுசுன்னாரு.

रागमु : पुन्नागवराळि] *दरु—१५ [ताळमु : चापु

पल्लवि

कृष्णा ! माकेमि दोव वल्कु
कीर्ति यल्गुनु देवदेवा–वाल

चरणम्

सरिगे रविके लेल्ल चोये–चेरि
चलिकि मे सोर्वनाय–श्री ॥ १ ॥

---

1. अनुपल्लवि ताळपत्रग्रन्थमुलो लेदु.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

सरिवारिलो सिग्गु बोये-नीरु
जानुलपै दाकनाये-श्री ॥ २ ॥

सर्वंबु ने ननुकोन्न-नीदु
सामर्थ्यमु जूपु चिन्नि-श्री ॥ ३ ॥

पायलेनि मम्मु नीन्-ये यु-
पायमैन देल्पि ब्रोवू-श्री ॥ ४ ॥

आतो जेरग इन्तबाध-गल्गे
मरतुमा इक प्राणनाथ!-श्री ॥ ५ ॥

इन्दुकनुचु तल्लि साकेनो-लेक
ये पापुल कग्डलु ताकेनो-श्री ॥ ६ ॥

राकेन्दुमुख! दयरादा-त्याग
राजार्चित ब्रोवरादा-श्री ॥ ७ ॥

கிரு—15*

ராகம்; புன்னாகவராளி] [தாளம்; சாபு

பல்லவி

கிருஷ்ணா! மாகேமி தோவ பல்கு
கீர்த்தி கல்குநு தேவதேவா — பால

---

* அனுபல்லவி என்ற குறிப்பு சுவடியில் குறிப்பிடவில்லை.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

சரணம்

ஸரிகெ ரவிகெ லெல்ல போயெ - வெர்றி
சலிகி மே மோர்வனாயெ 1

ஸரிவாரிலோ ஸிக்கு போயெ - நீரு
ஜா நுலபை தாகனாயெ 2

ஸர்வமு நே நனுகொன்ன - நீது
ஸமர்த்யமு ஜூபு சின்னி 3

பாயலேறி மம்மு நீவு - ஏ யு-
பாயமைந தெல்பி ப்ரோவு 4

மாதோ ஜேரக இந்தபாத - கல்கெ
மறதுமா இக ப்ராணநாத! 5

இந்து கநுசு தல்லி ஸாகெநோ - லேக
ஏ பாபுல கண்ட்லு தாகெநோ 6

ராகேந்துமுக! தயராதா — த்யாக
ராஜார்சித ப்ரோவ ராதா - ஸ்ரீ 7

பல்லவி: பாலக்ருஷ்ணா மாசேமி தோவ பல்கு — பாலகிருஷ்ணா! எங்களுக்கு என்ன வழி? சொல், கீர்த்தி தேவதேவா கல்குநு — தேவதேவா? உனக்குப் புகழ் உண்டாகும்.

சரணம்: ஸரிக ரவிகெலெல்ல போயெ — சரிகை ரவிக்கைகள் எல்லாம் போயின, வெர்றி சலிகி மேமு ஓர்வனாயெ — கடுங்குளிரை எங்களால் தாங்க முடிய வில்லையே!

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

2. ஸரிவாரிலோ ஸிக்கு போயே — எங்களுக்குச் சமமானவர்களிடம் மானம் போய்விட்டதே! நீரு ஜாநுலபை தாகவாயெ — ஓடத்தில் தண்ணீர் முழங்கால்வரை புகுந்துவிட்டதே!

3. ஸர்வமு நேநு அநுகொந்ந — 'எல்லாம் நானே' என்று கூறினாயே! நீது ஸாமர்த்யமு ஜூபு — இப்போது உனது ஸாமர்த்யத்தைக் காட்டு, சின்னி கிருஷ்ணா.

4. பாயலேதி மம்மு — உன்னைப் பிரிய முடியாத எம்மை, நீவு ஏ உபாயமைந தெல்பி ப்ரோவு—நீ எந்த ஏதாவது சொல்லி (எங்களை) காத்தருள்வாயாக.

5. மாதோ ஜேரக இந்தபாத கல்கெ — எம்முடன் சேர்ந்ததால் (தான் உனக்கு) இத்தனைத் துன்பம் உண்டாயிற்று. இக மறதுமா ப்ராணநாதா—இனி இதை மறப்போமா? ப்ராணநாதனே.

6. இந்துகு அநுக தல்லி ஸாகெநோ - இதற்காகவா உன்னை உன்தாய் (யசோதை) வளர்த்தாள்? லேக யே பாபுல கண்ட்லு தாகெநோ — அல்லது எந்தப்பாவியின் கண் உன்மீது பட்டதோ?

7. ராகேந்துமுக! — சந்திரனை நிகர்த்த முகம் உடையவனே! தயரதா!—எங்கள் மீது தயை இன்னும் ஏற்படவில்லையா? த்யாகராஜார்ச்சித! தியாகராஜனால் வழிபடப்பெற்றவனே! ப்ரோவராதா! எம்மைக் காப்பாற்றமாட்டாயா?

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

கருத்து (அவதாரிகை) ரத்தினங்கள் இழைத்ததும் ஜரிகை வேலைப்பாடமைந்ததுமான கோபியரின் ரவிக்கைகள் ஆற்றுவெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டன. மழையும் காற்றும் விடாமல் தொடர்ந்து பொழிய குளிரால் நடுங்கிய கோபியருள் ஒருத்தி கண்ணனைப் பார்த்துக் கூறினாள்.

ஏ பாலகிருஷ்ணா! உனக்குப் புகழ் உண்டாகட்டும். எங்களது துன்பம் நீங்க என்னதான் வழி? எங்களது ஜரிகை ரவிக்கைகள் அனைத்தும் ஆற்று நீரோடு போய்விட்டன. எங்களால் இந்தக் குளிரை இனி தாங்கமுடியாது. எங்களுக்குச் சமமானவர்களிடம் எங்களது மானமே போய்விட்டது. ஓடத்தினுள்ளே முழங்காலளவு தண்ணீர் புகுந்துவிட்டது. இந்த நிலையில் 'எல்லாம் நானே' என்று நீ கூறினாயே! உனது சாமர்த்தியங்களை இப்போது காட்டமாட்டாயா? சின்னி கிருஷ்ணா! உன்னைப் பிரியமுடியாத எங்களை எந்தவிதத்தாலாவது காத்தருள வேண்டுமையா! உனக்கேற்பட்ட இத்தனைத் துன்பத்திற்கும் காரணம், நீ எங்களுடன் சேர்ந்ததுதான். உனது தாய் யசோதை இதற்குத்தான் உன்னை வளர்த்தாளா? இத்தகைய துன்பத்தை நாம் அனுபவிக்க எந்தப் பாவியின் கண் பட்டதோ? தியாகராஜனால் வணங்கப்பட்ட சின்னி கிருஷ்ணா எங்கள் மீது இன்னும் தயை பிறக்கவில்லையா? எங்களது துன்பம் நீங்க வழி சொல். இதனை நாங்கள் என்றுமே மறக்க மாட்டோம்.

वचनम्— ई विधम्बुन नत्यन्त व्यसनम्बुतो गन्नीरोल्कगा गलवरिञ्चु गोपिकासुन्दरुलनू जूचि कृष्णदेवुण्डु येमनुचुन्नारु

வசனம்: ஈ விதம்புந நத்யந்த வ்யஸனம்புதோ கன்னீரோல்ககா கலவரிஞ்சு கோபிகா ஸுந்தருலன் ஜூசி க்ருஷ்ண தேவுண்டு ஏமனுசுன்னாரு.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

क. ३२. शोकिम्प वेळ गादिदि
राका शशिवदनुलार! रजतमयम्बौ
नौकारन्ध्रमुल्पल
कोकलु वदलिञ्चि मीरु गोब्बुन निडरे.

க. 32. சோகிப்ப வேள காதிதி
ராகா சசிவதநுலார ! ரஜத மயம்பௌ
நௌகா ரந்த்ரமு லோபல
கோகலு வதலிஞ்சி மீரு கொப்புந நிடரே

ராகா சசிவதநுலார ! — சந்திரனை நிகர்த்த அழகிய முகமுடைய பெண்களே ! சோகிம்ப வேள காது - சோகமடைவதற்குரிய வேளை இதுவல்ல. இதி — என்று கூறிய கண்ணன், ரஜத மயம் பௌ நௌகா ரந்த்ரமு லோபல, வெள்ளியால்* செய்யப்பட்ட ஓடத்தில் ஏற்பட்ட ஓட்டையில், மீரு கோகலு வதலிஞ்சி — நீங்கள் உங்களது புடவைகளைக் களைந்து, கொப்புந நிடரே — விரைவாக வைத்து (பொந்தை) அடையுங்கள்.

கருத்து: (அவதாரிகை) கண்களில் கண்ணீர் வழிய கண்ணனிடம் 'எங்கள் மீது உனக்கு இன்னும் தயை பிறக்கவில்லையா? மழையாலும் காற்றாலும் தவிக்கும் எங்களுக்கு குளிர் தாளமுடியவில்லை. இந்த இக்கட்டான சூழலில் எங்களைக் காப்பாற்ற நல்லதொரு யோசனை யைக் கூறக்கூடாதா? இந்த உதவியை நாங்கள் என்றும் மறக்கமாட்டோம் என்று கண்ணனிடம் வேண்டி நின்ற கோபியரைப்பார்த்து கண்ணன் கூறினான்.

சந்திரன் போன்ற அழகுமிகுந்த பெண்களே! இத் தகைய அச்சம் தரும் சூழலில் நீங்கள் துன்பத்தினால் மனம் கலங்கக்கூடாது. இது அதற்குரிய நேரமுமில்லை. ஆதலால் நான் சொல்வதைப்போல் நீங்கள் செய்ய

* உபசார வார்த்தையாக இதைக்கொள்ளலாம்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

வேண்டும். அப்படிச் செய்தால்தான் இந்த ஓடம் தப்ப வழியுண்டு. ஆதலால் சிறிதும் யோசியாது உங்களது புடவைகளை அவிழ்த்து இந்த ஓடத்திலுள்ள பொந்தை சீக்கிரமாக அடையுங்கள் என்றான் கண்ணன்.

वचनम्— अन्तट गोपिकामणुलु लज्जाक्रान्तुलै येमनुचुन्नारु.

வசனம்: அந்தட கோபிகாமணுலு லஜ்ஜா க்ராந்துலை ஏமநு சுன்னாரு.

क. ३३. राजमुखुण्डाडग विनि
राजीवदलाक्षु लन्तरङ्गमुलो स-
ङ्कोचमुतो वेत जेन्दुचु
स्त्रीजन्मम्बेल गल्गे छी छी यनुचुन्.

க. 33. ராஜமுகுண்டாடக விநி
ராஜீவதளாக்ஷு லந்தரங்கமுலோ ஸங்
கோசமுதோ வெத ஜெந்துசு
ஸ்த்ரீ ஜன்மம்பேல கல்கெ சீ சீ யநுசுன்

ராஜமுகுண்டாடக விநி — சந்திரனைப்போன்ற முக முடைய கண்ணன் கூறியதைக் கேட்டு. ராஜீவதளாக்ஷுலு —தாமரை போன்ற கண்களையுடைய அந்த கோபியர், அந்தரங்கமுலோ—மனத்திற்குள்ளாக, ஸங்கோசமுதோ —சங்கோசத்துடன். வெத ஜெந்துசு — வேதனையுடன். ஸ்த்ரீஜன்மம்பு ஏலகல்கே—பெண்ணாக ஏன் பிறந்தோம்? சீ சீ யநுசுன்—சீ சீ என்று எண்ணி வருந்தினர்.

கருத்து: சந்திரனை நிகர்த்த முகமுடைய கண்ணன் கூறியதைக் கேட்ட கோபியர் மனதில் மிகுந்த வேதனை யும் வெட்கமுமடைந்து 'சீ...சீ...பெண்ணாக ஏன் பிறந் தோம், என்று எண்ணி வருந்தினர்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

वचनम्— अन्तट गोपिकलु मरिनेमनुचुन्नारु.

வசனம் : அந்தட கோபிகலு மரிநேமநு சுன்னாரு.

संवाद दरु—१६

रागमु : वराळि] [ताळमु : अटचापु

पल्लवि

इन्दुकेमि सेतुमम्मा- कृष्णु
डेन्तो माटलाडेनम्म

चरणम्

मगुवलण्टे इन्त वादा—माकु
मानमे प्राणमु गादा ॥ १ ॥

गुसगुस लन्देमिवच्चु—चेलुल
उसुरुण्टे ऊरु बोववच्चु ॥ २ ॥

घनितलु गनि येवरिकैना—कृष्णा
वञ्चनगा बल्क दगुना ॥ ३ ॥

इटमु सेय वेळ गादु—आत्म
हत्य गानि वेरु लेदु ॥ ४ ॥

नम्मुगा निल्व वशमा—कृष्णा
नलुगुरिलो नीकु[1] यशमा ॥ ५ ॥

1. माकु.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

ना माटलु विनि मीरु-चेग[1]
नन्नु गट्टुजेर्च बोनीरु ॥ ६ ॥

ललनल पापमु लेमो-ई
लागु व्रात लुण्डेनेमो ॥ ७ ॥

वेलकु दीसिन वलपु रादु[2]-गाक
वेलदुल निक नम्मरादु ॥ ८ ॥

राजन्य! इट्टु येव्वलदु-त्याग
राजविनुत प्रेम गलदु. ॥ ९ ॥

ஸம்வாத தரு—16

ராகம்: வராளி] [தாளம்: அடசாபு

பல்லவி

இந்துகேமி ஸேதுமம்ம - க்ருஷ்ணு
டெந்தோ மாடலாடெநம்ம

சரணம்

மகுவலண்டே இந்த வாதா - மாகு
மானமே ப்ராணமு காதா 1

குஸகுஸ லந்தேமிவச்சு - செலுல
உஸுருண்டே ஊரு போவவச்சு 2

வநிதல கனி வேவரிஞ்சகனா - க்ருஷ்ணா
வஞ்சனகா பல்க தகுனா 3

---

1. चेलुलु, 2. वादु.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

ஹடமுலேய வேள காது - ஆத்ம
ஹத்ய கானி வேரு லேது 4

நக்நமுகா நில்வ வசமா - க்ருஷ்ணா
நலுகுரிலோ நீகு[1] யசமா 5

நா மாடலு விநி மீரு - வேக[2]
நனு கட்டுஜேர்ச போனீரு 6

லலனல பாபமு லேமோ - ஈ
லாகு வ்ராத லுண்டெநேமோ 7

வெலகு தீஸிந வலபு ராது[3] - காக
வெலதுல நிக நம்மராது 8

ராஜந்ய! இடு எஞ்சவலது - த்யாக
ராஜ விநுத ப்ரேம கலது 9

பல்லவி :

கோபி: இந்துகேமி ஜேஸ்துாம்ம — இதற்கு என்ன செய்வோம் அம்மா? க்ருஷ்ணுடு யெந்தோ மாடலாடெ நம்ம—கிருஷ்ணன் என்ன வார்த்தையோ சொல்கிறானே! கேட்டாயா?

சரணம் :

பிறிதொரு கோபி: மகுவலண்டே இந்த வாதா? —பெண்கள் எனில் இந்தப் பேச்சா? மாகு மானமே ப்ராணமு காதா—எங்களுக்கு மானமே உயிர் அல்லவா?

கிருஷ்ணன் : குஸுகுஸலு எந்தேமி வச்சு—குஸுகுஸு என்று நமக்குள் பேசிக்கொண்டிருப்பது மட்டும் பய

1. மாகு. 2. செலுது. 3. வாது.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

ணில்லை. செலுல உளாருன்டே ஊரு போகவச்சு — பெண்களே உயிர்ப்பிழைத்தால்தான் ஊருக்குப்போக முடியும்.

கோபி: வநிதல கனி யெவரிகைநா வஞ்சனகா பல்க தகுநா — பெண்களைப்பார்த்து யாருக்காவது வஞ்சக மாகப் பேசுவது தகுமா?

கிருஷ்ணன்: ஹடமு ஸேடிய வேள காது — இது பிடிவாதம் செய்யும் நேரமில்லை. ஆத்ம ஹத்ய காநி வேரே லேது — இச்செயல் தற்கொலைக்குச் சமானமே. வேறு வழியுமில்லை.

கோபி: நக்நமுகா நில்வ வசமா — ஆடையின்றி நிற்க முடியுமா? க்ருஷ்ணா! நலுகுரிலோ நீகு யசமா?— கண்ணா நாலு பேருக்குமுன் இந்தச்செயல் உனக்கு நல்ல பெயர் கிடைக்குமா?

கிருஷ்ணன்: மீரு நா மாடலு விநி — நீங்கள் என் வார்த்தைகளைக் கேட்டு. செலுலார — பெண்களே! வேக நநு கட்டு ஜேர்ச போனீரு — வேகமாக என்னை கரைசேர்க்க மாட்டீர்களா?

கோபி: லலனல பாபமுலு யேமோ? — பெண்கள் செய்த பாபம் என்னவோ? ஈலாகு வ்ராதலுண்டு யேநேமோ? இந்த விதமாக தலை எழுத்து இருக்கிறதோ? என்னவோ?

கிருஷ்ணன்: வெலகு தீஸிந வலபுராது — அன்பை விலைக்கு வாங்க முடியாது?, காக—மற்றும். இக வெல துல நம்மராது—இனியும் பெண்களை நம்பக்கூடாது.

கோபி: ராஜந்ய! இடு எஞ்ச வல்து — கிருஷ்ணா இப்படி நினைக்காதே, த்யாகராஜ விநுதப்ரேம கலது — தியாகராஜனால் வணங்கப்படுபவனே! உன்னிடம் எங்க ளுக்கு ப்ரேமை உண்டு.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

கருத்து: (அவதாரிகை) நாம் உயிருடன் கரையேற வேண்டுமாயின் முதலில் ஓடத்திற்குள் தண்ணீர் வருவதைத் தடுக்கவேண்டும். இல்லையேல் அது மூழ்கி விடும். ஆதலால் உங்களது புடவைகளைக் கொண்டு 'அந்த பொத்தலை அடைக்கவேண்டும்' என்று கண்ணன் கூறியதைக் கேட்ட கோபியர் மனங்கலங்கி பெண்ணாக ஏன் பிறந்தோம்? என்று மன வேதனையுடன் மறுத்துப் பேசுதலும் அதற்கு கண்ணன் கூறுவதுமாக அமைந்தது இந்த தரு.

கண்ணன் என்ன வார்த்தை கூறுகிறான் பார்த்தாயா? பெண்களைக் கண்டால் எதுவேண்டுமானாலும் பேசலாமா? பெண்களுக்கு உயிரைவிட மானமே பெரிது? என்று தெரிந்தும் இப்படிப் பேசுகிறானே! என்று கோபியருள் ஒருத்தி மற்றொருவளிடம் கூறினாள். இதைக் கேட்டுக்கொண்டிருந்த கண்ணன் 'என்ன குசுகுசுவென்று உங்களுக்குள்ளேயே பேசிக்கொண்டு இருக்கிறீர்கள்? இப்படி நமக்குள்ளேயே பேசிக்கொண்டிருந்தால் என்ன பயன்? உயிர் இருந்தால்தான் ஊருக்குப் போகமுடியும்' என்றான். அதைக் கேட்ட கோபியர் 'கண்ணா! எங்கள் நிலைமையைப் பார்த்தும் வஞ்சகமாக யாராவது இப்படிப் பேசுவார்களா?' என்றனர். அவர்களது பிடிவாதத்தை அறிந்த கண்ணன் 'பிடிவாதம் செய்யும் நேரம் இதுவல்ல. நீங்கள் செய்யும் இந்தச் செயல் தற்கொலைக்கு ஒப்பாகும். இன்னும் நாம் பேசிக்கொண்டே காலம் தாழ்த்தினால் படகு மூழ்கி, நதியில் இறந்து போவதைத்தவிர வேறு வழியே இல்லை. நான் சொன்னதுபோல் உடனே செய்யுங்கள் என்றான். கண்ணா! பெண்ணாகப் பிறந்தவர் ஆடையின்றி இருக்கமுடியுமா? யோசித்துப்பார். உனது கண்ணெதிரில் இந்தநிலை எங்களுக்கு வருமானால் உனக்குக் களங்கம் ஏற்படாதா? உனக்கு நல்ல பெயர்தான் கிட்டுமா? என்று கண்ணனிடம் நயந்தும் கெஞ்சியும் கேட்டனர். அப்போது கண்ணன் கோபியரது இதய

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

பூர்வமான எண்ணத்தைச் சுட்டிக் காட்டுவதைப்போல பேசலானான். 'நான் உயிருடன் ஊருக்குப் போக வேண்டுமா? வேண்டாமா? என்னை நீங்கள் இனி கரை சேர்க்கப் போவதில்லை? அப்படித்தானே! என்றான் சற்று உரைப்புடன். இதனால் கோபியர் வேறுவழியின்றி 'நாங்கள் என்ன பாபம் செய்தோமோ! பிர்மன் எழுதிய எழுத்து இப்படியும் இருக்கிறதே எங்களுக்கு, என்று வருந்தி ஒன்றுமே புரியாது கலங்கினர். அவர்களது நிலையைக் கண்ட கண்ணன் பெண்களே! அன்பை விலைக்கு வாங்கமுடியாது. சரி......சரி இனியும் இவர்களை நம்பக்கூடாது என்று முணுமுணுத்தான். கண்ணனின் மொழியைக் கேட்ட கோபியர் 'கண்ணா எங்களுக்கு உன்னிடம் அதிக ப்ரேமையுண்டு' என்று கூறினர்.

இந்த நூலின் பக்கம் 101ல் யமுனாதேவியை வேண்டும்போது எங்களது உடல், பொருள், ஆவி ஆகியவற்றை உனக்கே அர்ப்பணிக்கிறோம், எங்கள் கண்ணன் உயிருடன் கரை சேர்ந்தால் போதும், எங்களது தலைவிதிப்படி எங்களுக்கு எதெது நடக்க வேண்டுமோ அது நடக்கட்டும், கண்ணன் பிழைத்திருந்தால் போதும் என்று வேண்டிக்கொண்டனர். மேலும் கண்ணனுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் துன்பங்களுக்கு 'நாங்களே காரணம்' (தரு - 15, பக்கம் - 127) எங்களால்தான் உனக்குத் துன்பம் என்றும், பொங்கிப் பெருகும் இந்த யமுனையிலிருந்து அவனைக் காப்பாற்றி அவனது தாயிடம் எந்த வேளையில் சேர்ப்போமோ என்று வருந்தும் ஸ்லோகத்தின் கருத்துப்படியும் (பக் - 107), கோபியரின் உள்ளக்கருத்து தங்களது உயிரைவிட கண்ணனையே பெரிதாகக் கொண்டாடினர் என்பதும் தெளிவு. மேலும், ஒரு ஜீவன் முத்தியடைய வேண்டுமாயின் பற்றை ஒழிக்க வேண்டும். அனைத்துப் பற்றையும் துறந்த ஜீவன்தான் முத்திப் பேற்றை அடைய முடியும். கண்ணன் ஆடிய இந்த நாடகத்தால் கோபியருக்கு இருந்த பொருட்பற்றும்,

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

உயிர்பற்றும் நீங்கிவிட்டன. ஆனால் 'உடல் பற்று' நீங்கவில்லை என்பதை உணர்ந்த பரமன் உடற்பற்றையும் துறந்து அனைத்துப் பற்றுக்களையும் ஒழிந்த நிலையான 'நிர்வாணம்' என்ற நிலையை இந்த ஜீவர்கள் அடைய வேண்டுமென்று எண்ணிய 'பரமன்' ஜீவனுக்கு அருள் புரியும் பொருட்டு உடற்பற்றையும் துறக்கும் உபாயத்தைக் கூறுகிறான். உடற்பற்றை ஒழிக்க மறுத்த ஜீவனை, 'தன்னை அடையும் வழி நிர்வாண நிலையே' என்று சுட்டிக்காட்டி நிர்வாண நிலையை அடைந்தால் ஜீவன் மோக்ஷத்தை (விடுதலை) அடையும், என்ற வேதாந்தக் கருத்தையும் இங்கு உட்பொருளாகக்கொண்டு அமைந்துள்ளது என்பது இங்கு தொனிப் பொருளாகக் கொள்ளலாம்.

वचनम्— अन्तट गोपिकामणुलु कृष्णदेवुनि नम्मवच्चुननि नोकरिकोकरु योचन चेसे देटुवलेनु.

வசனம். அந்தட கோபிகாமணுலு க்ருஷ்ணதேவுனி நம்மவச்சுனனி நொகரிகொகரு யோசன சேஸெ தெடுவலெனு.

३४. क. अगणित लोकाधारुडु
निगमागम सञ्चरुण्डु निर्मलहृदयु
ण्डगु धरु डनयमु ब्रोचुनु
वग जूपडु वनितलार वरदुण्डनुचुन्.

க. 34. அகணித லோகாதாருடு !
நிகமாகம ஸஞ்சாருடு நிர்மல ஹ்ருதயுண்
டகதரு டனயமு ப்ரோசுனு,
வக ஜூபடு வநிதலார வரதுண்டனுசன்.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

வநிதலார — பெண்களே !, அகணித லோகா தாருடு — அனைத்து உலகங்களுக்கும் ஆதாரமானவன். நிகமாகம சஞ்சாருடு — வேத - ஆகமங்களில் சஞ்சரிப்பவன். நிர்மல ஹ்ருதயுண்டு — களங்கமற்ற உள்ளம் உடையவன், அகதருடு — கோவர்த்தனத்தைத் தூக்கியவனுமான கண்ணன், அநயமு ப்ரோசுநு வகஜூபடு — அனைவரையும் காப்பாற்றப் போகிறான். (ஏனெனில்) வரதுண்டனுசுன் — அவன் வரதனல்லவா ?

கருத்து: எப்படியும் இவன் நம்மைக்காப்பாற்றுவான். அனைத்து உலகினுக்கும் ஆதாரமானவன். வேதாகமங்களில் சஞ்சரிப்பவன். களங்கமற்ற இதயமுடையவன். ஆயர்களின் குலக்கொழுந்து. கோவர்தனத்தைக் குடை போல் தாங்கி முன்பு நம்மைக் காத்தவன்.* இன்றும் இந்த மழையினாலும், ஓடத்தில் நீர் நிறைந்தமையாலும் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய ஆபத்திலிருந்து உறுதியாக நம்மைக் காப்பாற்றுவான். அவனது மொழியை ஏற்று, அதன்படிச் செய்தால் நம்மையும் காப்பாற்றுவான், என்று தங்களுக்குள் பேசிக்கொண்டனர் கோபியர்.

---

* இந்திரபூஜை செய்ய கோபர் முடிவெடுத்து சமுந்திரத்திற்குப் பூஜைபோட முடிவெடுத்தனர். இந்திரனுக்குப் பூஜை செய்ய வேண்டிய அவசியமேயில்லை. நமது பசுக்கள் இந்த கோவர்தன மலையில் மேய்கின்றன. அதனால் நமக்குப் பால். தயிர் உற்பத்தியாகின்றது. அதனால் நமது வாழ்க்கையை நிம்மதியாகக் கழிக்கிறோம். இந்திரனுக்குப் பூஜை செய்வதற்குப்பதில் நமது வாழ்க்கையை வளப்படுத்தும் இந்த 'கோவர்தனகிரிக்கே' பூஜை போடுவோம் என்று கூறி, கோவர்தனத்திற்கு பூஜை போடுமாறு கண்ணன் கூற. கோபர்களும் அப்படியே பூஜை செய்தனர். இதனால் கோபங் கொண்ட இந்திரன் இரவு பகலாக மிகக் கடுமையான மழையைப் பொழியச் செய்தான். அப்போது கோகுலத்திலிருந்து கோபர் குடும்பங்களையும், பசுக்களையும் அதன் கன்றுகளையும் காப்பாற்ற கோவர்தனகிரியை அடியோடு பெயர்த்துத் தனது கைகளில் தாங்கிக் கொண்டு அதன் அடியில் அனைவரையும் இருக்கச்செய்து காத்தான். அதனால் கண்ணன் 'கிரிதாரி' என்ற பெயரையும் பெற்றான் என்று மூல நூலான ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

रागमु : मोहनमु] दरु—१७ [ताळमु : चापु

पल्लवि

वेदवाक्यमनि येञ्चिरि—ई
वेलदुलेल्ल सम्मतिञ्चिरि

चरणम्

चीरलन्नियु वर्दालिञ्चिरि—एन्तो
सिग्गुचेत नन्दु नुञ्चिरि ॥ १ ॥

अन्दुन निलुवक पोयेनु—मेनु
लन्दरिकि तडव नायेनु[1] ॥ २ ॥

कनुगोन्दुरो यनि सरगुना—पालिण्ड्ल
करमुल मूय[2] मरुगुना ॥ ३ ॥

मानमुलनु मूसुकोन्दुरो—तम
प्राणमुलनु गाचुकोन्दुरो ॥ ४ ॥

चेलुल नोरेण्डग नायेनु—नीरु
चिलुचिलुमनि येक्कुवायेनु ॥ ५ ॥

वलुवलु गानक पोयेनु—सतुल
वदनमु लट्टु सुक्कनायनु ॥ ६ ॥

1. तडिय, 2. मूसिते.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

करगिकरगि यङ्कलाचिरि—चेलुलु
कमलाक्षु नुरमुन जेर्चिरि ॥ ७ ॥

कनुल काटुक नीरु कारगा—जूचि
कान्तुडेन्तो मुद्दु गारगा ॥ ८ ॥

रमणुल मदमेल्ल जरिगेनु—त्याग
राजनुतुनि मदि करगेनु. ॥ ९ ॥

ராகம்; மோகனம்] தரு—17 [தாளம்: சாபு

பல்லவி

வேதவாக்யமனி யெஞ்சிரி - ஈ
வெலதுலெல்ல ஸம்மதிஞ்சிரி

சரணம்

சீர லன்னியு வதலிஞ்சிரி - எந்தோ
ஸிக்குசேத னந்து நுஞ்சிரி 1

அந்துந நிலுவக போயெநு - மேனு
லந்தரிகி தடவ[1] நாயனு 2

கனுகொந்துரோ யனி ஸரகுநா - பாலிண்ட்ல
கரமுல மூய[2] மருகுநா 3

மாநமுலநு மூஸகொந்துரோ - தம
ப்ராணமுலனு காசுகொந்துரோ 4

---

1. தடிய. 2. மூஸிதே.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

செலுல நோரெண்டக நாயனு - நீரு
சிலுசிலுமநி யெக்குவாயனு 5

வலுவலு காநக போயெநு - ஸதுல
வதநமு லடு ல்ருக்கநாயநு 6

கரகிகரகி யங்கலார்சிரி - செலுலு
கமலாக்ஷுலு நுரமுந ஜேர்சிரி 7

கநுல காடுக நீரு காரகா ஜூசி
காந்து டெந்தோ முத்து காரகா 8

ரமணுல மதமெல்ல ஜரிகெநு - த்யாக
ராஜநுதினி மதி கரகெனு 9

பல்லவி: வேத வாக்யமனி — வேத வாக்கியமாகக் கண்ணன் கூறிய ஈ வெலதுலெல்ல ஸம்மதிஞ்சிரி — யோசனையை பெண்கள் ஏற்று ஸம்மதித்தனர்.

சரணம் 1. எந்தோஸிக்குசேத சேரலன்னியு வதலிஞ்சிரி — மிகுந்த வெட்கத்துடன் ஆடைகளை களைந்து, நந்து நுஞ்சிரி — ஓடத்தில் (பொந்தில்) வைத்தனர்.

2. அந்துந நிலுவக போயெநு — (அப்புடவைகளும்) அங்கு நில்லாமல் ஆற்றோடு போயிற்று. அந்தரிகி மேநு தடவ நாயநு — அனைவருடைய உடலும் நனைந்தன.

3. கநுகொந்துரோ யதி ஸரகுந பாலிண்ட்ல கரமுல மூய மருகுநா — யாராவது கண்டுவிடுவார்களோ என தங்களது மார்பகங்களைக் கைகளால் மூடிக்கொண்டனர்.

4. மாநமுலநு மூஸுகொந்துரோ — மானத்தைக் காத்துக் கொள்வார்களோ! தமப்ராணமுலநு காசு கொந்துரோ—அல்லது தங்களது உயிரைக் காத்துக் கொள்வார்களோ!

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

5. செலுல நோரெண்டக நாயநு — அக்கோபியர் (அச்சத்தினாலும், வெட்கத்தினாலும்) வாய் உலர ஆரம்பித்தது. நீரு சிலுசிலுமனி எக்குவாயநு — (ஓடத்தில்) சலசலவென்று உள்ளே தண்ணீர் அதிகமாகப் புகுந்தது.

6. வல்வலு காநக போயெநு—ஆடைகளும் (ஓடத்தின் துவாரத்தில் அடைத்திருந்த ஆடைகளும்) காணாமற் போயின. ஸதுல வதநமுலு அடு ஸ்ருக்க நாயநு — அவர்களின் முகம் கவலையால் வாடின.

7. கரகி கரகி — அழுது, அழுது அங்கலார்சிரி — பிரலாபித்தனர். செலுலு கமலாக்ஷுநு உாமுநஜேர்சிரி— பெண்கள் (துன்பம் தாளாது) கண்ணனை மார்போடு அணைத்துக்கொண்டனர்.

8. கநுலு காடுக நீரு காரகா ஜூசி காந்துடு — அழுவதால் அவரது கண்மையும் கண்ணீருடன் கரைந்து வருவதைப் பார்த்த கண்ணன், எந்தோ முத்துகாரகா— மனமும் கரைந்து (இளகி) அவர்கள்மீது அன்பைச் சொரியலானான்.

9. ரமணுல மதமெல்ல ஜரிகெநு — கோபியரின் கர்வம் கரைந்து போயின, த்யாகராஜ நுதுநி மதி கரகெநு—தியாகராஜனால் துதிக்கப்பெற்ற கண்ணனின் மனமும் கரைந்தது.

கருத்து : (அவதாரிகை) கண்ணனின் ஆலோசனைப் படி அவன் நிச்சயமாக நம்மைக் காப்பான் என்று எண்ணி தங்களது புடவைகளை களைந்து ஓடத்தின் ஓட்டையில் அடைக்கலாம் என்று எண்ணினர் கோபியர்.

வேதவாக்கியத்தைக் கடைபிடிக்கும் மக்களைப்போல கண்ணனின் வாக்கைப் பின்பற்றித் தங்களது புடவைகளை களைந்து ஓடத்தின் பொந்தில் வைத்து அடைத்தனர். அப்படியும் அந்தப் பொந்து அடைபடாமல், அந்தப் புடவைகளும் ஆற்றின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

பட்டன. கோபியரின் மேனி மழை நீராலும், ஆற்று நீராலும் நனைந்தன. நீண்டநேரம் மழையில் நனைந்தமையாலும், இப்போது உடல் முழுதும் எவ்வித ஆடையுமின்றியிருப்பதாலும், கடுங்காற்றின் குளிராலும் வெட்கத்தாலும் நடுங்கின. யாராவது தனது மேனியைக் கண்டு விடுவார்களோ? என்ற வெட்கத்தால் கைகளைக்கொண்டு தங்களது மார்பகங்களை மறைத்துக்கொண்டனர். உயிரைக் காத்துக்கொள்வார்களா? அல்லது தங்களது மானத்தைக் காத்துக்கொள்வார்களா? இப்போது இரண்டுமின்றி வெட்கித் தலைகுனிந்து, கண்ணீர்மல்க, வாய்புலர்ந்து. செய்வதறியாது வருந்திக்கொண்டேயிருந்தனர். ஓடத்தினுள் தண்ணீர் சலசலவென்று பாய்ந்து நீர்மட்டம் உயர்ந்துகொண்டேயிருந்தது. கவலையாலும், அச்சத்தாலும் அவர்களது முகம் வாடின. தாளமுடியாத் துயரத்துடன் கண்ணனைத் தங்களது மார்புடன் அணைத்துக்கொண்டு கண்ணீர் சொரிந்தனர். அழுது அழுது அவர்களது கண் மையும் கரைந்தது கோபியரின் மதமாகிய கர்வமும் கரைந்தது. இவர்களது நிலையைக்கண்ட தியாகராஜன் வணங்கும் கண்ணனின் மனமும் கரைந்தது.

வேதவாக்கியத்தை ஒவ்வொருவரும் கடைபிடிக்க வேண்டும், ஏன் அதனைப் பின்பற்ற வேண்டும். பின்பற்றாமலிருந்தால் என்ன? என்ற விசாரமே கூடாது அரசனின் கட்டளையை எங்ஙனம் மக்கள் கடைபிடிப்பார்களோ அங்ஙனமே பின்பற்றவேண்டும் என தர்ம சூத்திரங்கள் கூறியுள்ளன. இதைப்போல் எவ்விதமான ஆட்சேபணையுமின்றி கோபியர் கண்ணனின் வாக்கைப் பின்பற்றினர் என்று கொள்க. மேலும், ஓடம் புறப்பட்டு தண்ணீரில் மெல்ல மிதக்கத் தொடங்கியபோது மிகவும் குதூகலமாகவும் மகிழ்சியாகவும் புறப்பட்ட கோபியர், இப்போது அழுதழுது புலம்பலாயினர். முன்பு தங்களை விட அழகியர் உலகில் ஒருவருமே இல்லை என்று கர்வம்

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

கொண்டு தலை நிமிர்ந்திருந்த அதே கோபியர் (யாலபதம்: பக். 75) இப்பொழுது தங்களால் ஏதுமே செய்யமுடியாத அவல நிலையில், வெட்கத்தாலும், அவமானத்தாலும் கர்வம் முற்றும் துறந்து தலை குனிந்து நின்றனர்.

முன்பு, இந்தக் கண்ணனுக்கு என்ன தெரியும்? (ஸீஸபத்யம் பக். 87) என்று எண்ணிய கோபியர் இப்போது அவன் சொல்லும் செயலைப் பின்பற்றும் நிலையிலிருந்தனர்.

முன்பு, அச்சம் சிறிதுமின்றியிருந்த கோபியர் இப்போது அச்சத்தால் வாய்புலர்ந்து நின்றனர்.

முன்பு, எங்களால் சாதிக்க முடியாதது இவ்வுலகில் எதுவுமே இல்லை என்று கருதிய கோபியர் (கந்தபத்யம் பக். 83) இப்போது தங்களால் எதையுமே செய்ய முடியாது என்றும் சாதிக்க முடியாது என்றும் உணர்ந்தனர். என்பவை தொனிப்பொருள்.

वचनम्— अन्तट गोपिकामणुलु अत्यन्त व्यसनाक्रान्तलै येमनुचुन्नारु.

வசனம்: அந்தட கோபிகாமணுலு அத்யந்த வ்யஸனாக்ராந்துலை ஏமனு சுன்னாரு.

३५. उत्प. लग्नमदेट्टिदो वनित

लन्दरु वच्चिन वेळ दैवतल्

मम्नुल जेसिरा कमल

मन्दु जनिञ्चिन वानि व्रातयो

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

विघ्नमु वच्चुना यनुचु
विण्टिमि वार्तलु विश्वसिम्पुचुन्
नम्मलमैति मेमिगति
नाथ! दुकूलमु लेन्दु गानमे ॥

உத். 35. லக்ன மதெட்டிதோ வநித
லந்தரு வச்சின வேள தேவதல்
மக்னல ஜேஸிரோ க்மல
மந்து ஜனிஞ்சின வானி வ்ராதயோ
விக்னமு வச்கனா யனுக
வின்டிமி வார்தலு விச்வஸிம்புசுன்
நக்னலமைதி மேமிகதி
நாத துகூலமு லெந்து கானமே

வநிதலு அந்தரு வச்சின வேள — கோபியராகிய நாம் வந்த வேளை, லக்னமு அதி யெட்டிதோ—அந்த லக்னம் எப்படிப்பட்டதோ? தேவதுல் மக்நுல ஜேஸிரோ —நாம் மூழ்குமாறு தேவதைகள் செய்தனரோ? கமல மந்து ஜனிஞ்சினவானி வ்ராதயோ ? — தாமரையில் பிறந்த பிரமன் தலையில் எழுதிய எழுத்தோ?, விக்நமு வச்கநா யநுக—இடையூறு வராது என்று கண்ணன் சொன்ன, வார்தலு, விஸ்வஸிம்புசுன் விண்டிமி — வார்த்தைகளை நம்பிக்கையுடன் கேட்டோமே (அதன் பயன்), நக்னல மைதிமி — ஆடையற்றுப் போனோமே, நாத! ஏமி கதி? — தலைவனே கண்ணா! எங்களுக்கு இனி வழியாது? துகூலமுலு யெந்து கானமே — ஆடைகளை எங்குமே காணவில்லையே!

கருத்து : (அவதாரிகை) கோபியரின் மதகர்வம் முற்றும் அழிந்து, கண்ணீர் வடித்துக்கொண்டே கூறினர்:

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

நாங்கள் மிகவும் பொல்லாத வேளையில் புறப்பட்டோமா? நாங்கள் புறப்பட்ட லக்னம் தீமையைத் தந்ததோ? அல்லது தேவதைகள் நாங்கள் மூழ்கவேண்டும் என்று இச்செயலைச் செய்தனரா? அல்லது பிர்மதேவன் எழுதிய தலையெழுத்தா? ஒன்றுமே புரியவில்லையே! கிருஷ்ணனின் வார்த்தையை நம்பி எங்களது ஆடைகளைக் களைந்தோமே. அதனால் இப்பொழுது ஆடையற்று வெற்றுடலுடன் நிற்கிறோமே! எங்கள் ஆடைகளை எங்குமே காணவில்லையே! கண்ணா! எங்களுக்கு இனி வழி யாது? என்று கண்ணனிடம் கேட்டனர்.

वचनम्— इट्लु गोपिकामणुलु जन्मान्तर सुकृतम्बुचे प्रपञ्च भोगभाग्यम्बुलन्नि नश्वरमनि येञ्चि श्रीकृष्णमूर्ति पादारविन्दम्बु चेरुटकै योचिञ्चे मार्गम्बेट्टलनिन .

வசனம்: இட்லு கோபிகாமணுலு ஜன்மாந்தர ஸுக்ருதம்புசே ப்ரபஞ்ச போகபாக்யம்புலன்னி நச்வரமனி யெஞ்சி ஸ்ரீ க்ருஷ்ணமூர்த்தி பாதாரவிந்தம்பு சேருடகை யோசிஞ்சே மார்கம்பெடுலனின.

च. ३६. ब्रतुकनु दारि गानमिक
भारमु तालदे येडलोपलन्
गुतिकनु बट्टे नीरिपुड्ड
गोब्बुन श्रीहरि पादपद्ममुल्
मतिनि दलञ्चुकोञ्चु वर
माधवु नाममु नोट वल्करे
पतितुल ब्रोचुशङ्कु मन
पालिट गल्गि सुखम्बु लिच्चुने ॥

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

சம். 36. ப்ரதுகநு தாரி காளமிக
பாரமு தாளதே யோட லோபலன்
குதிகநு பட்டெ நீரிபுடு
கொப்புன ஸ்ரீ ஹரி பாதபத்மமுல்
மதினி தலஞ்சுகொஞ்சு வர
மாதவு நாமமு நோட பல்கரே
பதிதுல ப்ரோசுவாடு மன
பாலிட கல்கி ஸுகம்பு விச்சுனே

இக ப்ருதுகநு தாரி காளமு — இனி பிழைக்க வழி தெரியவில்லை, நீரு இபுடு குதிகநு பட்டெ — தண்ணீர் இப்பொழுது கழுத்துவரை வருவதால், ஓடலோபலன் பாரமு தாளதே — ஓடம் இனி பாரத்தைத் தாங்காது, கொப்புன ஸ்ரீஹரி பாத பத்ம முல் மதிநி தலஞ்சு கொஞ்சு —விரைவாக ஸ்ரீஹரியின் திருவடித் தாமரைகளை மனதில் பதியவைத்து, வர மாதவு நாமமு நோட பல்கரே —வரமளிக்கும் மாதவனின் நாமங்களை வாயினால் சொல்வீர்களாக, பதிதுல ப்ரோசுவாடு — வீழ்ந்தவர்களைக் காப்பவனான கண்ணன், மந பாலிட கல்கி ஸுகப்புலு இச்சுநே — நம் பக்கமிருந்து நம்மைக் காப்பானே.

கருத்து: (அவதாரிகை) இத்தகைய துன்பம் வருவதற்குக் காரணமே தோன்றாது திகைத்திருந்த கோபியர், நாம் முற்பிறவிகளில் செய்த வினையே இத்துன்பத்திற்குக் காரணம் என்று தெளிந்தனர். மேலும் உலகில் காணும் போக போக்கியங்கள் அனைத்தும் அழியக்கூடியவை என்று அறிந்த கோபியர், கண்ணனின் திருவடிகளே நமக்குத் தஞ்சம் என்று தீர்மானித்தனர்,

ஓடத்தில் தண்ணீர் கழுத்துவரை வந்துவிட்டது. ஓடம் இனி பாரத்தைத்தாங்காது. இனி பிழைக்கும் வழியும் தெரியவில்லை. ஆற்றுநீரிலே வீழ்ந்து இறக்கு

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

முன் ஸ்ரீ ஹரியின் திருவடிகளை மனதில் பதியவைத்து அவனது நாமாக்களை வாயினால் சொல்லி மனத்தினால் சிந்திக்க அவன் நம்மைக் காப்பாற்றுவான். வீழ்ந்தவர்களைக் காக்கும் கடவுளான கண்ணன் நிச்சயம் நம் பக்கமிருந்து காப்பான் என்று அவனை அவனது நாமாக்களால் கூறி அழைக்கலானார்கள்.

இறைவனுடைய நாமாக்களே! நம்முடைய வினைப் பயன்களை மாற்றவல்லது. இதை பாரதபூமியில் தோன்றிய மஹான்கள் அனைவருமே கூறியுள்ளனர். 'ஆதி மூலமே' என்று அழைத்த கஜேந்திரனும், "ஹா! க்ருஷ்ண த்வாரகா வாஸி! க்வாஸி யாதவ நந்தனா!" என்று துகிலுரியும்போது அழைத்த பாஞ்சாலியையும் நாம் இங்கு சிந்திக்கத்தக்கது. "தன்னுடைய செயலால் இனி எதுவும் நடைபெறாது" என்று அறிந்த பின்னரே மனிதன் இறைவனை சிந்திக்கின்றான் என்பதே இங்கு தொனிப்பொருள். இதுவே மனிதகுலத்தின் இயல்புமாகும். 'நாமஸித்தாந்தத்தைக் கூறவந்த ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளும் இதனையே இங்கு வலியுறுத்துகிறார் மகுடம் போல.

वचनम्— अनि तलम्पन्, सर्वाधारुण्डुनु निर्विकारुण्डुनु निरञ्जनुण्डुनु आदिमध्यान्तरहितुण्डुनु जगन्मोहनाकारुण्डुगानु दर्शनं बिच्चिन समयम्बुन श्रीकृष्णदेवुनि जूचि गोपिकलु येमनुचुन्नारु.

வசனம்: அநி தலம்பன் ஸர்வாதாருண்டுனு நிர்விகாருண்டுகானு நிரஞ்ஜனுண்டுகானு ஆதிமத்யாந்த ரஹிதுண்டுனு ஜகன்மோஹனாகாருண்டுனு தர்சனம் பிச்சின ஸமயம்புன ஸ்ரீ க்ருஷ்ணதேவுனின் ஜூசி கோபிகலு யேமனு சுன்னாரு.

Dr. Urmila Sharma Collection, Varanasi

CC0. In Public Domain, Digitizagtion by eGangotri

रागमु : पुन्नागवराळि] दरु—१८ [ताळमु : आदि

पल्लवी

हरिहरि! नीयोक्क दिव्य पा-

दारविन्द मिय्यवे

अनुपल्लवी

धरनु गलुगु भोगभाग्य मेल्लनु

तथ्यमु गादु सुमि श्रीकृष्णा

चरणम्

सनकसनन्दन श्रीनारद शुका-

र्जुन धनुलेल्ल नुतिञ्चु

वनजनयन ब्रह्मादि

संक्रन्दनु लनयमु सेविञ्चु ॥ १ ॥

निनु वेदपुराणगम शास्त्र

विधुलयन्दु चरिञ्चु

घन समनील निरञ्जन निर्गुण

कनिकरमुग त्यागराजु भाविञ्चु ॥ २ ॥

தரு—18

